உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

சுடர் 33 கதிர் 293 ஆவணி 30ஆம் நாள் சனிக்கிழமை 15 செப்ரெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

கடும் வெப்பம் மக்களே அவதானம்

யாழ்ப்பாணம், செப்.15 கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இன்று கடும் வெப்பத்துடன் கூடிய வானிலை காணப்படும் என்று வானிலை » 23



தியாகத்தின் எல்லையை மீறிய பிள்ளை திலீபன்

தாயகத்திலும், புலத்திலும் இன்று நினைவேந்தல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 15

அமைதிப் படையாகக் காலடி எடுத்து வைத்து ஆக்கிரமிப்புப் படையாக மாறி ஈழத் தமிழர்களை வேட்டையாடி, சூறையாடி அழித்தொழித்த இந்திய இராணுவத்துக்கு எதிராக அகிம்சை வழியில் 12 நாள்கள் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தி வீரச்சாவடைந்த லெப். கேணல் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் தாயக மண்ணிலும் புலம் பெயர் தேசத்திலும் இன்று ஆரம்பமாகின்றது.

மக்கள் மத்தியில் விடுதலைத் தீயை விதைத்த » 25

தமிழ் அரசியல் கைதிகள் 5ஆவது முறை போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 15

குறுகிய கால மறுவாழ்வு வழங்கியாவது தம்மை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் எட்டுப் பேர் நேற்றுக் காலையிலிருந்து உணவு ஒறுப்புப் போராட்டத்தை » 25

போர்க் குற்ற விசாரணை **அரசியல் கைதிகள் விவகாரம்**

ஐ.நாவுக்கு புதிய யோசனை முன்வைப்பாராம் மைத்திரி!

இப்போது அது என்னவென்று கூறமாட்டேன் என்றும் "சஸ்பென்ஸ்"

கொழும்பு, செப்ரெம்பர் 15

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்மொழிவுகள் தொடர்பில் புதிய யோசனையை நான் முன்வைக்கவுள்ளேன். ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய பின்னர், அடுத்த ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அந்த யோசனை தீர்மான வரைவாக முன்வைக்கப்படும். அந்த யோசனை எதுவென்பதை இப்போது வெளிப்படுத்த மாட்டேன்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். » 25

கூட்டாட்சி தீர்வை வழங்கவே முடியாது

இந்தியாவில் மகிந்த இறுமாப்பு

டில்லி, செப். 15

தமிழ்மக்கள் அதிகாரப் பகிர்வைக் கோரவில்லை. அரசியல்வாதிகள்தான் அதிகாரப் பகிர்வைக் கோருகிறார்கள். இலங்கை போன்ற சிறிய » 24

புதுடில்லிச் சந்திப்பு மகிந்தவுக்கு திருப்தி

கொழும்பு, செப். 15

தவறான பாதையில் மீள் திருத்தும் வகையில் டில்லிச் சந்திப்புகள் அமைந்தன. அது மாத்திரம் அல்லாது » 24

மகிந்த அறிவிப்பால் எதிரணியில் குழப்பம்

கொழும்பு, செப். 15

அடுத்த அரச தலைவர் தேர்தலில் தனது மகன் போட்டியிட முடியாமையால், தனது சகோதரர் ஒருவர் » 23

சிங்களக் குடியேற்றம் நடைபெறவே இல்லை

தான் கூறியது சரியென மீள சாதிக்கின்றார் மைத்திரி

கொழும்பு, செப். 15

மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையிலேயோ அல்லது வேறு வகையிலேயோ முல்லைத்தீவில் சிங்களக் குடியேற்றம் இடம்பெறவில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று மீண்டும் தெரிவித்துள்ளார். » 25

அதிகாரிகளின் கைதுகளை ஏற்க முடியாது

மைத்திரிபால கொதிப்பு

கொழும்பு, செப். 15

முப்படை அதிகாரிகள் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுகின்றனர். பின்னர் » 25

தவறணையில் சிக்கினர் நகைக் கொள்ளையர்

திட்டமிட்டு மடக்கியது பொலிஸ்

யாழ்ப்பாணம், செப்.15

60 வயது மூதாட்டியின் வீட்டுக்குள் புகுந்து அச்சுறுத்தி நகை, பணத்தைக் கொள்ளையிட்டவர்கள் தவறணையில் வைத்துப் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று புன்னாலைக்கட்டுவனில் நடந்துள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த மூதாட்டி ஒருவர் நேற்று ஆலயத்துக்குச் » 24

புதிய அரசமைப்பு நகல் வரைவு நாடாளுமன்றுக்கு வராது!

யாழ்ப்பாணம், செப். 15

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் ஈடுபட்டுள்ள வழிநடத்தல் குழுவின் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அன்றைய » 24

சிவாஜிக்கு நுழைவிசைவு வழங்க மறுத்தது இந்தியா

யாழ்ப்பாணம், செப். 15

இந்தியாவில் நடைபெறவுள்ள பயிற்சி நெறிக்குச் செல்லும் குழுவில் உள்ளடக்கப்பட்டிருந்த வடக்கு மாகாண சபை » 23

ஹெரோயின் வைத்திருந்தவர் நேற்றிரவு கைது

யாழ்ப்பாணம், செப்.15

150 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று இரவு ஒருவர் காங்கேசன்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை, » 24

வட மாகாண அமைச்சரவை விவகாரத்தில் முதலமைச்சர் தரப்பு இணங்கும் சாத்தியம்

கொடுத்து உடன் பறிக்கும் யோசனையும் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 15

வடக்கு அமைச்சரவைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக டெனீஸ்வரனுக்கு அமைச்சுப் பதவி வழங்கி உடனேயே அவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சரால் வடக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதம் மூலம் யோசனை தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஆளுநர் » 25

யாழ்ப்பாணம், செப். 15

வடக்கு மாகாண அமைச்சரவைச் சிக்கலைத் தீர்ப்பதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தரப்பு இணங்கிவரும் சாத்தியம் உள்ளது என்று தெரியவருகின்றது.

தற்போது அமைச்சரவையிலுள்ள ஒருவரை நீக்கி, அவருக்குப் பதிலாக டெனீஸ்வரனை » 25

முந்திரிப் பருப்பு அரசியல்

கொழும்பு, செப். 15

நேபாளத்தில் இருந்து சிறிலங்கன்எயார்லைன்ஸ்வானூர்தி மூலம் இந்தியா ஊடாக இலங்கை வரும் போது. நாய்கள் கூடச்சாப்பிடமுடியாதவகையிலான முந்திரிப் பருப்புகள் தனக்கு வழங்கப்பட்டதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் குற்றம்சுமத்தியிருந்தார்.

அரச தலைவர் மைத்திரிபாலவின் இந்தக் கூற்றை பொய்யாக்கும் வகையில் நாமல் கீச்சகத்தில்ஒருகருத்தைப்பதிவிட்டுள்ளார்.

இந்தியாவிலிருத்து இலங்கைக்கு சிறிலங்கன் எயார்லைன்ஸ் வானூர்தி மூலம் வரும் போது. முந்திரி பருப்புக்களைஉண்பதுபோன்றஒளிப்படங்களைப் பதிவேற்றியுள்ளார். அத்துடன். அப்படி ஒன்றும் இந்த விதைகளில் இல்லை, எனவும்குறிப்பிட்டுள்ளார். (5)

கஞ்சா கடத்துவதற்கான கேந்திரநிலயமாவவுனியா?

மக்கள் கடும் விசனம்

வவுனியா, செப் 15

வவுனியாமாவட்டத்தினூடாககடத்திச்செல்லப்படும்கஞ்சாபோதைப்பொருள்களில் சில தொடர்ச்சியாக பொலிஸாரால் மீட்கப்பட்டு வருகிறது. கஞ்சா கடத்துபவர்களும் கைது செய்யப்படுகின்றனர். இந்த நிலையில் கஞ்சா கடத்துவதற்கான கேந்தி நிலையமாக வவுனியா மாறிவிட்டதா என்று மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

வவுனியாவில் வவுனியாபேருந்துநிலையங்கள், வவுனியாவூடாக வெளிமாட்டங்களுக்குச் செல்லும் பேருந்துகளிலேயே அதிகளவில் கஞ்சா கடத்தப்படுகிறது, என்று பொலிஸாருடைய தகவல்களில் இருந்து அறியமுடிகிறது.

நேற்று முன்தினம் 8 கிலோக்கிராம் கஞ்சா வவுனியாவில் மீட்கப்பட்டுள்ளது. ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அந்தக் கஞ்சா பேருந்தில் கடத்திச் செல்லப்பட்டது என்றுபொலிஸார்தெரிவித்துள்ளனர். நேற்றையதினம் இரண்டுகிலேக்கிராம்கேரளக்கஞ்சாமீட்கப்பட்டுள்ளது அதை உடமையில் வைத்திருந்தார் என்று தெரிவித்து நபர்ஒருவர்வவுனியாபோதைஒழிப்புப்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். வவுனியா புதியபேருந்து நிலையத்தில் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதே வேளை செட்டிகுளம் பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூன்றுபேரை செட்டிகுளம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அவர்களில் இருவர் நேற்று முன்தினமும், ஒருவர் நேற்றும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்என்றுபொலிஸார்தெரிவித்துள்ளனர். அவர்களிடம் இருந்து கஞ்சாப்பொட்டலங்களையும் மீட்டுள்ளதாக செட்டிக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச்சம்பவங்களுக்குமுன்னர் வவுனியாவில் ஏராளமான கஞ்சா மீட்கப்பட்டுள்ளது அவை பேருந்துகளில் கொண்டு செல்லும்போதும், பேருந்து நிலையத்திலிருந்துமே மீட்கப்பட்டுள்ளன. எனவே கஞ்சா என கடத்தலின் கேந்திர நிலையமாகிவிட்டதா வவுனியா மக்கள் கடும் விசனத்தை வெளியிட்டுள்ளனர். (21,110)

மணிவண்ணனுக்குஎதிராக குற்றப் பத்திரிகை தாக்கல்

5ஆம் திகதி விளக்கத்துக்கு வருகின்றது வழக்கு

யாழ்பாணம், செப்.15

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் இரட்ணஜீவன்கூலைஅச்சுறுத்தும்வகையில்கருத்துத் தெரிவித்தார்என்றகுற்றச்சாட்டில்தொடரப்பட்டவழக்கில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும்யாழ். மாநகரசபைஉறுப்பினருமானசட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுத்தாக்கல் செய்யப்பட்டது.

தம் மீதான குற்றச்சாட்டை நிராகரித்த சட்டத்தரணி வி.மணிவண்ணன், சுற்றவாளி என மன்றுரைத்தார். அதனால்வழக்குவரும்ஒக்டோபர்5ஆம்திகதிக்குவிளக்கத்துக்காகநியமிக்கப்பட்டது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் பரப்புரையின் போது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் தமிழ் தேசிய மக்கள்முன்னணிதமிழ்தேசியபேரவைஎன்றதேர்தல் கூட்டில் போட்டியிட்டது.

அந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கை கடந்த ஜனவரி மாதம்17ஆம்திகதிநல்லூர்இளங்கலைஞர்மண்டபத்தில் வெளியிடப்பட்டது. தேர்தல் அறிக்கையை வெளியிட்டு வைத்த பின் உரையாற்றிய தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ். மாநகர சபைக்கான முதல்வர் வேட்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தம்மை அவதூறாகப்பேசினார்என்றுதேர்தல்கள்ஆணைக்குழுவின் உறுப்பினர் சாமுவேல் இரட்ணஜீவன் கூல், யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடுவழங்கியிருந்தார்.

சட்டத்தரணிவி.மணிவண்ணன்தன்மீதுஅவதூறாகப் பேசியவிடயத்தைதான்ஊடகங்கள்வாயிலாகஅறிந்ததாகவும்அதுதொடர்பில்உரியவிசாரணைவேண்டும் எனவும்பிரதிப்பொலிஸ்மாஅதிபரிடம்அவர்கேட்டிருந்தார். அந்தக்காலப்பகுதியில்சட்டத்தரணிவி.மணிவண்ணன் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலும் தன்னை அச்சுறுத்தும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்தார் எனதேர்தல்கள்ஆணைக்குழுவின்உறுப்பினர்ரட்ணஜீவன்கூல்பொலிஸில்முறைப்பாடுவழங்கியிருந்தார். அது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தேர்தலுக்குப் பொறுப்பாகஇயங்கும்பிரிவுக்குபிரதிப்பொலிஸ்மாஅதிபர்கட்டளை வழங்கியிருந்தார்.

சம்பவம் தொடர்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் உள்ளீட்டவர்களிடம்பொலிஸார்வாக்குமூலங்களைப் பெற்றிருந்தனர். முறைப்பாடு தொடர்பில் இணங்கிச் செல்வதற்கு முறைப்பாட்டாளரான இரட்ணஜீவன் கூல் மறுப்புத் தெரிவித்தார். அதனால் சட்டத்தரணி வி.மணிவண்ணனுக்குஎதிராகயாழ்ப்பாணம்நீதிவான்நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கு யாழ்ப்பாணம்நீதிமன்றில்நீதிவான்சி.சதீஸ்தரன்முன்னிலையில்நேற்றுவிசாரணைக்குவந்தது. முறைப்பாட்டாளர் மன்றில் தோன்றினார்.

எதிராளியான சட்டத்தரணி வி.மணிவண்ணன் மன்றில் முன்னிலையானார். அவர் சார்பில் சட்டத்தரணி கு.குருபரன் முற்பட்டார். குற்றவியல் சட்டக்கோவை 486ஆம் பிரிவின் கீழ் ஆள் ஒருவரை அச்சுறுத்தினார் என்றுசட்டத்தரணிமணிவண்ணனுக்குஎதிராகபொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். குற்றப்பத்திரிகை மன்றில் வாசித்துக் காண்பிக்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவரான சட்டத்தரணி வி.மணிவண்ணன்சுற்றவாளிஎன மன்றுரைத்தார்.

அதனால் வழக்கை விளக்கத்துக்கு நியமிப்பதாக நீதிவான் சி.சதீஸ்தரன் அறிவித்தார். வழக்கை விரைந்து முடிப்பதற்கு குறிகிய காலத்தில் தவணையிடுமாறு சட்டத்தரணி வி.மணிவண்ணன்சார்பில்மன்றில்கோரப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்டமன்று வரும்ஒக்டோபர்5ஆம்திகதி வழக்கை விளக்கத்துக்கு நியமித்தது. (ற)

கசிப்புடன்பெண்கைது

யாழ்ப்பாணம், செப்.15

15 லீற்றர் கோடா, 1600 மில்லி லீற்றர் கசிப்புடன் 60 வயதுடையபெண்ஒருவரைக்கைதுசெய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சிதுன்னாலைப்பகுதியில்குறித்தபெண்நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் தனது வீட்டில் கசிப்பு வடித்துக் கொண்டிருந்த போதே அவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின் அவர் நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார்என்றுநெல்லியடிப்பொலிஸார்தெரிவித்தனர்.

(21,26)

அரசதலைவர்வேட்பாளராக களமிறங்க சமல் தயாராம்

கொழும்பு, செப். 15

அரசதலைவர்தேர்தலில்வேட்பாளராகப் போட்டியிடத் தயாராக இருப்பதாக மகிந்தவின் சகோதரரும், முன்னாள்சபாநாயகருமான சமல்ராஜபக்சதெரிவித்துள்ளார்.

அடுத்த அரச தலைவர் தேர்தலில் தனது சகோதரர் வேட்பாளராக முன்னிறுத்தப்படுவார்என்றுமுன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார். எம்பிலிப்பிட்டியபிரதேசத்துக்குநேற்றுமுன்தினம்பயணம்மேற்கொண்டிருந்த சமல்ராஜபக்சவிடம்ஊடகவியலாளர்கேள்விஎழுப்பியிருந்தார்.

இதற்குப்பதிலளித்தசமல்ராஜபக்ச, எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் மகிந்தவே மீண்டும் போட்டியிடவேண்டும்என்பதுபொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. அது முடியாதபட்சத்தில்அவருக்குபதிலாக சகோதரர்களில் ஒருவர் களமிறக்கப்படலாம். அவ்வாறான சகோதரர்கள் வரிசையில் நான், கோத்தபாய மற்றும் பசில் ராஜபக்ஸ ஆகியோர் தயார்நிலையில் இருக்கின்றோம். தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் யாரை வேட்பாளராக களமிறக்குவது என்பது தொடர்பில் பொருத்தமான தீர்மானத்தை மகிந்த ராஜபக்ச எடுப்பார் என்றார். (5)

பெண் பணியாளர்களுடைய கைப்பைகள் அபரிப்பு

சாவகச்சேரி செப்.15

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதநபர்களால், அரச பெண் பணியாளர்கள் இருவருடைய கைப்பைகள் அபகரிக்கப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது

வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தகல்வயலைச்சேர்ந்தஆசிரியையொருவரும்மருத்துவமனைப் பணியாளர் ஒருவருமே தமது கைப்பைகளைப் பறிகொடுத்துள்ளார்கள்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரிச் சாலை, கற்குழிச் சாலை ஆகிய இரு இடங்களிலும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கைப்பைகளைஅபகரித்துச்சென்றவர்கள்பையினுள்காணப்பட்ட அலைபேசி, பணம், வங்கியட்டைகள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு பைகளை வீசி விட்டுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அந்த இரு சம்பவங்களும் அப்பகுதியில்பொருத்தப்பட்டிருந்த மறைகாணியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மறைகாணியின் உதவியுடன் சந்தேகநபர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் சாவகச்சேரிப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (21,9)

திருவாசக அரண்மனையில் திருவாசக முற்றோதல் இன்று

நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனையில் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது. இந்தியாவின் திருச்சியைச் சேர்ந்த திருவாசக முற்றோதல் அமைப்பினரால் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

காலை 8 மணி தொடக்கம் பகல் ஒரு மணி வரை திருவாசக முற்றோதல் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய முக்கிய தலங்களிலும் இந்தியாவின் திருச்சியைச் சேர்ந்த திருவாசக முற்றோதல் அமைப்பினரால் திருவாசக முற்றோதல்கள் வரும் நாள்களில் மேற்கொள்ளப்படவுள்ளது. (21)

வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் முதியவர் சடலமாக மீட்பு

வவுனியா, செப்.15

வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் கிணற்றில் இருந்து முதியவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. தண்ணீர் அள்ளச் சென்றபோது அவர் தவறி வீழ்ந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவம் நெடுங்கேணி ஆறாம்கட்டைப் பகுதியில் நேற்று இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த நடராசா (வயது - 68) என்ற முதியவரே சடலமாக மீட்கப்பட்டார். கிணற்றடிக்குச் சென்ற முதியவரைக் காணவில்லை என்று உறவினர்கள் தேடியபோதே கிணற்றுக்குள் உயிரிழந்த நிலையில் அவர் மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் உறவினர்களால் நெடுங்கேணிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்த்தனர். இறப்பு விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ம-21,110)

இலங்கை திறந்த பல்கலையின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு!

யாழ்ப்பாணம், செப். 15

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் காலை 10 மணிமுதல் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். மதிப்புறு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்லூரி இயக்குனர் யேசுதாசன் யூட் வலன்டைன் கலந்துகொள்ளவுள்ளார். (ம)

2 மாத சிசு பரிதாபமாக உயிரிழப்பு

சாவகச்சேரியில் துயரம்

தென்மராட்சி, செப். 15

மூச்சு விடுவதற்கு சிரமப்பட்ட 2 மாதச் சிசு சாவகச்சேரி மருத்துவமனையில் நேற்றுக் காலை பரிதாபமாக உயிரிழந்தது.

சாவகச்சேரி தனங்களப்பு சாலையைச் சேர்ந்த மொகமட் உமர் என்ற சிசுவே அவ்வாறு உயிரிழந்தது. குறித்த சிசு கடந்த இரு தினங்களாக மூச்சு விடுவதற்குச் சிரமப்பட்டது. சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்பட்டது. சிகிச்சையின் நிறைவில் குழந்தையை பெற்றோர் வீட்டுக்குக் கொண்டு சென்றனர். எனினும் நேற்று அதிகாலையும் மொகமட் உமர் என்ற அந்தக் குழந்தை மூச்சு விடுவதற்கு சிரமப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. மொகமட் உமரை உறவினர்கள் உடனடியாக சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை வழங்கப்பட்டது. எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை அந்தச் சிசு உயிரிழந்தது.

இறப்புத் தொடர்பாக மருத்துவமனையினர் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு அறிவித்தனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கையிட்டனர். பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மூலம் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ம-21,9,159)

சதொசவில் மீட்கப்பட்ட எலும்புக்கூடால் அதிர்ச்சி

கைகள், கால்கள் கட்டப்பட்டு புதைக்கப்பட்டதா என சந்தேகம்

மன்னார், செப். 15

மன்னார் சதொச வளாகத்தில் கை மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படும் எலும்புக்கூடொன்று மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் 'சதொச' வளாகத்தில் பல வேறு கேள்விகள் சந்தேகங்களை ஏற்படுத்த கூடிய வகையில் தொடர்சியாகப் பல மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு வருகின்றன.

மன்னார் நீதவான் ரி.சரவணராஜா மேற்பார்வையில் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஸ மற்றும் களனி பல்கலைக்கழகப் போராசிரியர் தலைமையில் மன்னார் 'சதொச' வளாகத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள மற்றும் புதிதாக அடையாளப் படுத்தப்படும் மனித எலும்புக் கூடுகளை அப்புறப்படுத்தும் மற்றும் ஆய்வு செய்யும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அகழ்வுப் பணியின் போது கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகத்தை ஏற்படுத்தகூடிய மனித எச்சம் ஒன்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

கைகள் இரண்டும் நெருக்கமாக பிணைக்கப்பட்ட நிலையிலும் கால்கள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று குறுக்காக பிணைக்கப் பட்ட விதத்திலும் மீட்கப் பட்டுள்ளது அந்த எலும்புக்கூடு.

குறித்த மனித எலும்புக் கூடு கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் புதைக்கப்படதா? அல்லது மதச் சடங்குகளின் அடிப்படையில் புதைக்கப்பட்டதா? என்பது தொடர்பாக எந்த வித ஊகிப்புக்களும் தற்போது மேற்கொள்ள முடியவில்லை என்று தெரியவருகிறது.

நேற்று வெள்ளிக்கிழமை 71ஆவது தடவையாக அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன. இது வரை 126 முழுமையான மனித எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் 120 மனித எலும்புக்கூடுகள் அப்புறப்படுத்தப்பட்டு, பொதி செய்யப்பட்டு, நீதிமன்ற கட்டிடத்தொகுதியில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-56)

யாழ்ப்பாண பல்கலை வளாகத்தில் கைக்குண்டு

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகத்துக்குள் வெடிக்காத நிலையில் இருந்த கைக்குண்டு நேற்று மீட்கப்பட்டது.

குறித்த கைக்குண்டானது பரமேஸ்வரா ஆலயத்துக்கு அருகில் சுற்றுமதில் அமைக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை மீட்கப்பட்டது என்று தெரியவருகிறது. சுற்றுமதில் அமைக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கட்டடப் பணியாளர்கள் வழங்கிய தகவலை அடுத்தே குறித்த கைக்குண்டை கோப்பாய் பொலிஸார் மீட்டனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-7)

கஞ்சா வைத்திருந்த பெண்கள் கைது!

கிளிநொச்சி, செப். 15

கஞ்சாவை உடமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் பெண்கள் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியிலேயே இந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உடுத்துறையில் இருந்து இயக்கச்சிப் பகுதி நோக்கி மோட்டார் சைக்கிளில் கஞ்சா கடத்தப்படுகிறது என்று பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது என்று அறியவருகிறது. இதன்படி இரண்டு கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. பொலிஸாரைக் கண்டதும் பெண்ணொருவர் தப்பிச் சென்றார் என்றும், மடக்கிப் பிடிக்கப்பட்டவரின் தகவல்களின் அடிப்படையில் கஞ்சாவை விற்றவர் என்றுகருதப்படுபவரும் கைது கைது செய்யப்பட்டார். தப்பிச் சென்றவர் தேடப்பட்டு வருகின்றார்என்றுபளைபொலிஸ் நிலையத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ம-6)

இறைச்சிக்காக வெட்டப்படவிருந்த 'இமாலய' மாடு

யாழ்ப்பாணம், செப். 15

இறைச்சிக்காக நேற்றையதினம் வெட்டப்படவிருந்த மாடு ஒன்று தொடர்பான தகவல்கள் சமூக வலைத்தளங்களில் நேற்று வைரலாகப் பரவின.

யாழ்ப்பாணம் ஏழாலைப் பகுதியில் உள்ள பண்ணையாளர் ஒருவரினால் வளர்க்கப்பட்ட மாடொன்று நாவாந்துறை இறைச்சிக் கடை உரிமையாளருக்கு 4 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இறைச்சிக்காக அறுப்பதற்கு முன்னர் அந்த மாடு வளவொன்றில் நேற்றுக் கட்டப்பட்டிருந்தது. பலரும் நேரில்சென்று அந்த மாட்டைப் பார்வையிட்டனர்.

இறைச்சிக்காக மாடுகள் கொல்லப்படுவதற்கு நல்லூர் பிரதேச சபை கடந்த செவ்வாய்கிழமை தடை விதித்துத் தீர்மானம் மேற்கொண்டமையும், கடந்த 2012ஆம் ஆண்டு அப்போதைய மாவட்டச் செயலாளர் இமல்டா சுகுமார் இதுபோன்று வெட்டப்படவிருந்த மிகப்பெரிய மாடொன்றை யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் மூலம் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு கொள்வனவு செய்து வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது. (ம-105)



குடமுழுக்கு

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்ப்பாணம் இளவாலை மணல டைப்புஅருள்மிகுமனோன்மணிசமேத அண்ணமகேஸ்வரர் தேவஸ்தான பாலஸ்தாபன குடமுழுக்கு நிகழ்வு இன்றுநடைபெறவுள்ளது.

காலை8மணிக்குஅபிசேக்ஆராதனை களுடன்ஆரம்பமாகிநண்பகல்12மணி தொடக்கம் ஒரு மணி வரையான சுப வேளையில் குடமுழுக்கு நடைபெறும் எனத்தெரிவிக்கப்பட்டது. (மு-63)

தவறான முடிவெடுத்து இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 15

காரைநகர்வேம்படியைச்சேர்ந்தஇளை ஞரொருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்தார். நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த நபருக்கு மூளைக்காய்ச்சல் ஏற்பட்டிருந்தது. அதன்விளைவாகநரம் புத்தளர்ச்சியுடன்அவர்வாழ்ந்துவந்தார். இதனால் ஏற்பட்டமனவிரக்தியில்அவர் உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்படு கிறது. "எனது சாவுக்கு எவரும் காரண மில்லை" என்று எழுதி வைத்துவிட்டு அவர் தவறான முடிவெடுத்தார் என்றும் விசாரணைகளில் தெரியவந்தது. மேல திக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ம)

மீள்குடியமர்வுஅமைச்சால் தென்மராட்சிபிரதேசத்தில் 255மில்.வேலைத்திட்டம்

சாவகச்சேரி, செப். 14

மீள்குடியமர்வு அமைச்சால் தென்மராட் சிப்பிரதேசத்தில் 255 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

75 மலசலகூடங்கள், சிறப்புத் தேவையு டையவர்களுக்கான 33 மலசலகூடங் கள், 67 பேருக்கு வாழ்வாதார உதவி கள், இந்தியாவிலிருந்து வருகைதந்து மீளக்குடியமர்ந்துள்ள 26 குடும்பங்களுக்கும் வன்னிப் பிரதேசத்திலிருந்து மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கும் மீள்குடியமர்வுக் கொடுப்பனவு, 228 மண் அணைக ளைத் துப்பரவு செய்தல், 18 பொதுக் கிணறுகள் அமைத்தல் மற்றும் 7 தனியார் கிணறுகள் அமைத்தல் போன்ற வேலைத்திட்டங்களுக்கே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கால்நடை வளர்ப்பு, சுயதொழில் முயற்சி, மீன்பிடி உபகர ணங்கள், தையல் இயந்திரங்கள் போன்றவையும் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம9)

படகு இல்லாத காரணத்தால் ஏமாறித் திரும்பிய பிஞ்சுகள்

நெடுந்தீவில் நேற்றுக்காலை சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 15

'செயற்பட்டுமகிழ்வோம்'நிகழ்வுக்குயாழ்ப்பாணத்துக்குநேற்றுக்காலைவருகை தருவதற்காக நெடுந்தீவிலிருந்து புறப்பட்ட பாலர் பாடசாலை மாணவர்கள் படகுச்சேவையில்லாமல்ஏமாற்றத்துடன்மீண்டும்வீடுகளுக்குத்திரும்பினர்.

இது தொடர்பாக தெரியவருவ தாவது.

நெடுந்தீவுப் பாடசாலைகளில் இருந்து, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற செயற்பட்டு மகிழ் வோம் நிகழ்வுக்கு வருகை தர விருந்த மாணவர்களுக்கே இந்தநிலைமைநேரிட்டுள்ளது. குறித்தநிகழ்வில்கலந்துகொள் வதற்காக நெடுந்தீவில் உள்ள ஆரம்பப்பாடசாலை மாணவர் கள் 60 பேரும் பெற்றோர்கள் ஆசிரியர்கள்என60பேருமாக மொத்தம் 120 பேர் நேற்று அதி காலை நெடுந்தீவு இறங்கு துறையில் படகுக்காகக் காத்தி ருந்துள்ளனர். அப்போதுஅங்கு தனியார்படகுஒன்றேபுறப்படத் தயராக இருந்துள்ளது. எனி னும் அதில் மாணவர்களை ஏற்றமறுத்துள்ளனர்.

இதனால் குழப்பமடைந்தவர் கள்என்னசெய்வதுஎன்றுஅறி யாது பிரதேச செயலகத்தின் முன் ஒன்றுகூடினர். பின்னர் நிகழ்வில் கலந்து கொள்ளாது வீடு களுக்குத் திரும்பிச் சென் றுள்ளனர்.

"கோட்டக் கல்விப் பணிமனை மாணவர்களின் போக்குவரத் துக்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யாதகாரணத்தால்மாண வர்கள் காலையிலிருந்து நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. எனினும் பயனில்லாது வீடுகளுக்குத் திரும்பினோம்" என்று மாண வர்களின் பெற்றோர்கள் தெரி வித்தனர்.

இது தொடர்பாக நெடுந்தீவுக் கோட்டக் கல்விப் பணிப்பாள ரைத் தொடர்பு கொள்ள முயற் சித்த போதும் அது பயன் அளிக் கவில்லை. (மு-8)

வடமராட்சி வதிரி உல்லியனொல்லை அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலயத்தின் தேர் உற்சவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 10 மணியளவில்நடைபெற்றது. (மு-124)

வரலாற்றுப் புகழ்பெற்ற அருள் மிகு வரணி சிட்டிவேரம் கண் ணகை அம்மன் கோவிலின் சப்ததள இராஜகோபுர அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுக் காலை 7.50 மணிக்கு நடைபெற்றது. கல்வி மற்றும் பண்பாட்டு விளையாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலனால் அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது. இந்த நிகழ் வில்நாடாளுமன்றஉறுப்பினர் சி. சிறிதரன், பிரதேசசபை உறுப்பினர் சி.பிரபாகரன் மற் றும் இந்து பௌத்த கலாசார பேரவையின் செயலாளர் தேச மானிய எம்.ரி.எஸ்.இராமச்சந் திரன், ஆலயதலைமைக்குருக் கள் மற்றும் பக்தர்கள் நலன் விரும்பிகள் பாடசாலை மாண வர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (மு-159,9)

சின்னம் சூட்டும் நிகழ்வு



யாழ்ப்பாணம், செப். 15

பண்ணாகம் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் மாணவத் தலைவர்கள், வகுப்பு முதல்வர்களுக்குச் சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. பாடசாலையின் அதிபர் ஸ்ரீபன் றெக்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம)

மிருசுவில் மகளிர் குடியேற்றத்திட்டத்தின் கீழ் ஜேர்மனியின் நம்பிக்கை ஒளி அமைப்பினரால் இலவசதையல் பயிற்சிமையம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தப் பயிற்சி மையத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த 25 யுவதிகளுக்குத் தையல் பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன. இந்தப்பயிற்சிநிலையத்தைமிருசுவில்பங்குத்தந்தை எக்ஸ். டபிள்யு. ஜேம்ஸ் அடிகள் நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் தென்மராட்சி பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ. சுபச்செல்வன் சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் கா. சண்முகதாசன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (மு-9,159)

வலி.வடக்குச் செயலகத்தில் அரசதலைவர்மக்கள்சேவை

யாழ்ப்பாணம், செப். 15

வலி வடக்கு பிரதேச செயலகத்தால் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் 'நிலமெஹாவர' அரச தலை வர் மக்கள் சேவை இன்று நடைபெறவுள்ளது. காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இந்தச் சேவை நடைபெறும் என்று தெரிவிக்கப் பட்டது.

பிறப்பு, இறப்பு, திருமணம், சாவுச்சான்றிதழ்கள்மற் றும் தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளல் தொடர்பானசேவைகள், பதிவுசெய்யப்படாதபிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவுகள், வாகன அனும திப் பத்திரம் பெற்றுக்கொடுத்தல் மற்றும் மோட்டார் வாகனத் திணைக்களத்தின் ஏனைய சேவைகள், ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஏனைய சேவைகள், வீட்டுக் கடன் வசதி பெற்றுக் கொள்ளல், முதியோர் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளல், வங்கிக் கடன் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல், பொதுவானமருத்துவச்சேவை களையும்கண்சிகிச்சை சேவைகளையும் பெற்றுக் கொள்ளல், சமுர்த்தி, முதியோர் கொடுப்பனவு, ஓய் வூதியக் கொடுப்பனவு தொடர்பான சேவைகள், காணி உரிமை சம்பந்தமான பிரச்சினைகள் தீர்க் கப்படுவதுடன் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங் குதல், மதத் தலங்களைப் புத்துயிரூட்டுவதற்கான திட்டங்கள், தனியார் துறையில் தொழில் வாய்ப்பிற் கானவழிகாட்டல்களையும்விண்ணப்பங்களையும் பெற்றுக்கொள்ளல், வெவ்வேறு துறைகளில் பயிற் சிகள் பெறுவது தொடர்பாக இளைஞர், யுவதி களுக் கான அறிவுரைகள், சிறுதொழில் தொடங்குவது தொடர்பாக அறிவுரைகளையும் வழிகாட்டல்களை யும் பெற்றுக்கொள்ளல், அபிவிருத்தித் திட்டங்களுக் குத்தேவையானஉதவிகளைப்பெற்றுக்கொள்ளல், விவசாயம், கல்வி, சுகாதாரம் தொடர்பான பிரச்சி னைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட சேவைகளை இன்று பெற்றுக்கொள்ள லாம். (ம)

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு காவலரண்களில் சிறப்பானபணியினைமுன்னெடுக்க உதவிய சாரணர்கள், மற்றும் குருளைச்சார ணர்கள் ஆகியோரை மதிப்புறுத்தும் நிகழ்வு நல்லூர் ஆதீன மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வின் விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.த. ஜெயசீலன் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (ம)

நாவற்குளியில் இளம் யுவதிமீது வாள்வெட்டு

சாவகச்சேரி, செப். 15

தலையில் வாள்வெட்டுக் காயத்துடன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நாவற்குளியைச் சேர்ந்த 22 வயதுப் பெண் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நாவற்குளியில் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ம-9)

கா.பொ.த.சா.த. மாணவர்களின் துயரம் நீங்க

எழுவைதீவில் இம்முறையாவது அமையுமா பரீட்சை மண்டபம்?

யாழ்ப்பாணம், செப். 15

எழுவைதீவு மாணவர்களுக்கு இந்த முறையாவது கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்கான மண்டபம் அமைக்கப்படுமா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. மாணவர்களின் அலைச்சலைத் தவிர்க்கும் பொருட்டு மண்டபம் அங்கு அமைத்துக்கொடுக்கப்படவேண்டும்என்றுஎழுவைதீவுமக்கள்கோரிக்கையைமுன்வைத்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தீவகம் கல்வி வலயத்தின் கீழ் தனித் தீவுகளாக நான்கு தீவுகள் உள்ளன. இவற்றில் மூன்று தீவுகளில் க.பொ.த சாதாரணப் பரீட்சைக்கான பரீட்சை நிலையம் ஏற்படுத்தப்படுகின்றது.

இருப்பினும் மற்றுமோர் தீவான எழுவைதீவில் மட்டும் பரீட்சை மண்டபம் அமைக்கப்படுவது கிடையாது.

இதனால் வருடாந்தம் இடம்பெறும் பரீட்சைகளுக்கு எழுவைதீவில் கல்வி பயிலும் மாணவர்கள் தினமும் ஐந்து கடல்மைல் தூரம் பயணம் செய்தே ஊர்காவற்றுறையில் பரீட்சைக்கு தோற்றுகின்றநிலமை காணப்படுகின்றது.

இதன்காரணமாக எழுவைதீவில் க.பொ.த சாதாரணப் பரீட்சை நிலையமொன்றை அமைக்குமாறு கடந்த 2015ஆம் ஆண்டு முதல் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. எனினும் இன்னமும் அது கவனத்தில் கொள்ளப்படவேயில்லை. இந்த நிலையில் குறித்த வேண்டுகையினை இந்த ஆண்டிலாவது வடக்கு மாகாண கல்வி அமைச்சு கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டும் என்று எழுவைதீவு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

"குறித்த விடயம் தொடர்பில் கடந்த இரு ஆண்டுகளாக கவனம் செலுத்தப்பட்டபோதும் அதற்கான இறுதி முடிவின் பிரகாரம் பல நெருக்கடிகள் சுட்டிக்காட்டப்பட்டு அவை சாத்தியமாகல்லை.

இருப்பினும் 2018ஆம் ஆண்டிற்கான நிலையங்கள் தொடர்பில் இந்த மாதம் இறுதியில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலிலேயே தீர்மானிக்கப்படும். அதன்போது குறித்த தீவு தொடர்பில் சிறப்பாக ஆராயப்படும். அதன் முடிவின் பின்னரே இறுதி முடிவு தொடர்பில் உறுதியான முடிவு எட்டப்படும்" -என்றனர்.

(ம-105)

வடக்கு உறுப்பினர் விந்தனின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் சீரமைக்கப்படுகிறது கோவில்

யாழ்ப்பாணம், செப். 15

வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணத்தின் நிதிஒதுக்கீட்டின் மூலம் அரியாலை நாவலடி முதலாம் குறுக்கு அம்மன்வீதி அருள்மிகு நாகபூசணி அம்மன் ஆலய சீரமைப்புப் பணிக்காக 75 ஆயிரம் ரூபா வழங்கிவைக்கப்பட்டது.

ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் அனைவரினதும் கோரிக்கைக்கு அமைவாக குறித்த பகுதியில் அமைந்துள்ள கோவிலை நேரில்சென்று பார்வையிட்ட என்.விந்தன் கனகரட்ணம், நல்லூர் பிரதேச சபை உபதவிசாளர் ஆர்.ஜெயகரன் ஊடாக நேற்று முன்தினம் இந்த நிதியை வழங்கிவைத்தார். இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் திருமதி.அன்ரன் யோகநாயகம் எழிலரசி, நல்லூர் பிரதேச கலாசார உத்தியோகத்தர் விஜிதா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ம)

உரிய ஆவணங்கள் இல்லாமல் ஓடிய கரவெட்டி சபைக்குரிய உழவியந்திரம்

யாழ்ப்பாணம், செப். 15

கரவெட்டி பிரதேச சபைக்குரிய உழவியந்திரமொன்று கடந்த 10 வருடங்களாக உரிய ஆவணங்கள் இல்லாமல் ஓடித்திருந்தமை தற்போது தெரியவந்துள்ளது.

கரவெட்டி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது அதன்போதே இந்தத் தகவல் வெளிப்பட்டது.

கடந்த பத்து வருடங்களாக உரிய ஆவணங்கள் இன்றிப் பயன்படுத்தப்பட்ட கரவெட்டி பிரதேச சபைக்குரிய உழவுஇயந்திரத்துக்கு தற்போதைய நிர்வாகமே உரிய ஆவணங்களைப்பெற்றது என்று தவிசாளர் த.ஜங்கரன் தெரிவித்தார்.

(ம-26,173)

சேவைநலன் பாராட்டு நிகழ்வு

கொடிகாமம், செப். 15

யாழ்ப்பாணம் போக்கட்டி அ.த.க. பாடசாலையின் ஆசிரியராக சேவையாற்றி அகவை அறுபது கண்டு ஓய்வு பெறும் ஆசிரியர் பொ. திருப்பதிக்கும், அத்துடன் பாடசாலையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியை திருமதி அருட்சோதிக்கும் பாராட்டு விழா பாடசாலைச் சமூகத்தால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவத்திரை சிவநாதன், ஆரம்பக்கல்வி ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் சிறீஸ்கந்தராசா, ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. முத்துலிங்கம், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ம-159,9)

சுழிபுரம் விக்டோரியன்ஸ் விளையாட்டுக் கழகத்தால் விக்டோரியாக்கல்லூரியில்கல்விகற்றும்,பொருளாதாரரீதியில் பின்தங்கிய குடும்பமொன்றைச் சேர்ந்த மாணவனுக்கு ஈருருளியொன்று நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. (ம)

பன்னாட்டு முதியோர் தின விளையாட்டுப் போட்டிகள்

பன்னாட்டுமுதியோர்தினத்தையொட்டி தென்மராட்சி பிரதேச முதியோர்களுக்கானவிளையாட்டுப்போட்டிகள்சாவகச்சேரிஇறிபேக்கல்லூரிமைதானத்தில்எதிர்வரும்18ஆம்திகதிநடைபெறவுள்ளன. ஆண் முதியோர்களுக்கு வேகநடை, சங்கீதக் கதிரை, நீர் நிரப்புதல் ஆகிய போட்டிகளும்பெண்முதியோர்களுக்குகிடுகுபின்னுதல், நீர்நிரப்புதல், சங்கீதக் கதிரை ஆகிய போட்டிகளும் நடை பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டிகளில்வெற்றிபெறுவோருக்கான பரிசில்கள் பிரதேச முதியோர் தினவிழாவில்வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

(ம-9,159)

சட்டவிரோத மண்ணகழ்வு தொடர்பில் நீதிமன்ற அதிகாரிகள் நேரில் பார்வை

கிளிநொச்சி, செப் 15

சட்டவிரோதமாக மண்ணகழ்வு மேற்கொள்ளப்படும் பகுதியைக் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் பார்வையிட்டது.

சட்டவிரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்படும் பிரதேசங்களைக் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் தலைமையிலான குழுவினர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கிளிநொச்சி வட்டக்கச்சி, பன்னங்கண்டிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோத மண்ணகழ்வு தொடர்பில் பார்வையிடப்பட்டது.

இந்தப் பகுதியில் சட்டத்திற்கு முறணாக மண் ஏற்றிய சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கொன்று நேற்றுப் பதிவு செய்யப்பட்டது.

வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மன்று அந்தப் பகுதியை நேரடியாகச் சென்று பார்வையிட்டு விசாரணை அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டது.

இதனை அடுத்து நேற்றுப் பகல் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் சிவபாளினி சண்முகராஜ் மற்றும் கிளிநொச்சிப் பொலிஸ் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது அந்தப்பகுதியில் வெவ்வேறு இடங்களில் சட்டவிரோதமாக அகழப்பட்டுக் குவிக்கப்பட்டிருந்த மண் ஏற்றும் பகுதிகள் கிளிநொச்சி நீதிவான் நிதிமன்றினால் அடையாளமிடப்பட்டது.

குறித் பகுதியில் ஆங்காங்கே பெருந் தொகை மணல் திட்டுக்கள் உருவாக்கப்பட்டமை தொடர்பில் பார்வையிட்ட குழுவினர் சம்பவம் தொடர்பிலான விசாரணை அறிக்கையைத் தாயாரித்துள்ளனர்.

சட்டவிரோத மணல் அகழ்வினால் தென்னை, பனை உள்ளிட்ட மரங்கள் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளன. (214, 6, 35)

பூநகரி முழாங்காவில் குமுழமுனை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அமைக்கப்பட்ட மணிக்கோபுரத்துக்கான குடமுழுக்கு நேற்றுக் காலை நடைபெற்றது. (159- 9)

அலைபேசிகள் திருத்தும் பயிற்சி பிற்போடப்பட்டுள்ளது

கிளிநொச்சி செப். 15

கிளிநொச்சி மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இன்று ஆரம்பிக்கப்படவிருந்த அலைபேசிகள் திருத்தும் பயிற்சி வகுப்புத்தவிர்க்கமுடியாதகாரணத்தினால்பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பிற்போடப்பட்டு எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலக மண்டபத்தில் ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சனி, ஞாயிறு உட்பட 5 நாள்களைக் கொண்ட (40 மணித்தியாலயங்கள்) பயிற்சி நெறியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 10 மாற்றுத் திறனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (9 - 159)

விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயம்

வவுனியா, செப் 15

உந்துருளியுடன் முச்சக்கரவண்டி மோதியதில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து வவுனியா தவசிகுளம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

வவுனியா மதகுவைத்தகுளம் பகுதியிலிருந்து பயணித்த முச்சக்கரவண்டியுடன் வவுனியாவிலிருந்து பயணித்த உந்தருளி மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில் உந்துருளியில் சென்ற மதகுவைத்தகுளம் பகுதியைச் சேர்ந்த 21, 22 வயதுடைய இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பாடசாலைக்கு காவலாளியை நியமிக்குமாறு கோரிக்கை

வவுனியா, செப்·15

வவுனியா வடக்கு வலயத்திற்குட்பட்ட தரணிக்குளம் கணேஸ்வித்தியாலத்துக்குப் பகல்நேரக் காவலாளி இல்லாமையால் பல சிரமங்களை எதிர் நோக்குவதாக கிராமஅபிவிருத்திச் சங்கம் மற்றும் பாடசாலை சமூகம் ஆகியன விசனம் தெரிவிக்கின்றன.

எற்கனவே பாடசாலையில் கணினி உட்படசில பொருள்கள் திருட்டுப் போயுள்ளது. அத்துடன் குடியிருப்புகளுக்கு அருகாமையில் பாடசாலை இருப்பதால் காவலாளி கட்டாயத் தேவையாகவும் இருக்கிறது.

பாடசாலை மதியம் 2 மணிக்கு முடிவுற்ற பின்னரும் விடுமுறைநாள்களிலும் பாடசாலையில் யாரும் இல்லாமையினால் பாதுகாப்பில்லாதநிலமை இருக்கிறது.

சிலர் தண்ணீர்க் குழாய்களை சேதப்படுத்துவதுடன் பாடசாலைக் கண்ணாடிகளும்உடைக்கபட்டுப்பொருள்களும் களவாடப்படுகின்றன. கட்டாகாலி கால்நடைகள் வளாகத்திற்குள் வந்துசெல்கின்றன.

300 ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்கும் பாடசாலையில் நிரந்தரமாக ஒருகாவலாளி நியமிக்கபடவில்லை இரவுநேரத்திற்கு மாத்திரமே காவலாளி நியமிக்கபட்டிருக்கிறது.

எனவே இந்தப் பாடசாலைக்கு பகல் நேரக் காவலாளி ஒருவரை நியமக்க வேண்டும் என்பது கிராம அபிவிருத்திசங்கம், மற்றும் பாடசாலைசமூகத்தின் வேண்டுகோளாகவிருக்கிறது.

குறித்தவிடயம் தொடர்பாகக் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. எனினும் உரிய அதிகாரிகள் கூட்டத்துக்கு சமூகம் தராமையினால் இந்த விடயம் தொடர்பாகப் பேசப்படவில்லை.

இதுதொடர்பாக வவுனியா வடக்கு வலயகல்வி பணிப்பாளர் அன்னமலர்சுரேந்திரனிடம்கேட்டபோதுகுறித்த பாடசாலைக்கு இந்தவருடஇறுதிக்குள் காவலாளிஒருவரை நியமிப்பதற்குரியநடவடிக்கைகளைமேற்கொள்வதாகத் தெரிவித்திருந்தார். (110)

அரசியல் கருத்தரங்கு

வவுனியா,செப் 15

புதியஜனநாயக மாக்சிசலெனினிசக கட்சியின் 40 ஆவது அண்டு நிறைவை முன்னிட்டு அரசியல் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபையின் உணவக மண்டபத்தில் பிற்பகல் 3.மணிக்கு இடம்பெறும் கட்சியின் வன்னிமாவட்டச் செயலர் நி.பிரதீபன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் "மக்களின்சுமைகளும் அரசியல்நெருக்கடிகளும்" எனும் தலைப்பில் கருத்துக்கள் பகிரப்படவுள்ளன.

த.சிறிப்பிரகாஷின் ஒழுங்கமைப்பில், கட்சியின்பொதுசெயலாளர் சி.கா.செந்திவேல், அரசியல் குழு உறுப்பினர்களான சோ.தேவராயா, க.தணிகாசலம், தேசியஅமைப்பாளர் வெ.மகேந்திரன், வடபிராந்தியசெயலாளர் கா.கதிர்காமநாதன், மலையகப் பிராந்தியச் செயலாளர் டேவிட்சுரேன், எஸ். மோகனதர்சினி, மு.மயூரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (110)

தேசியநிலைப் போட்டியில் வெற்றிபெற மாணவர்களுக்கு உதவித்தொகை

கிளிநொச்சி, செப் 15

அக்கராயன் கோட்டைகட்டியகுளம் மகா வித்தியாலய மாணவர்கள் தேசிய மட்டப்போட்டிக்குப் பங்கு பற்றும் வகையில் உதவு தொகையாக 60 ஆயிரம் ரூபா அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

அக்கராயன் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் பிரான்ஸ் நாட்டு தொடுவாணம் என்ற அமைப்பினால் இந்த அன்பளிப்பு செய்யப்பட்டது.

இப்பாடசாலையில் இருந்து 2 அணிகள் கோட்ட, வலய, மாகாண மட்டங்களில் சாதனை படைத்து தேசிய மட்டப் போட்டியில் பங்கு பற்றச்செல்கின்றன.

இம்மாணவர்களின் ஆற்றல்கள் திறன்களை ஊக்குவிக்கும் வகையில் உடைகளுக்காக 50 ஆயிரம் ரூபாவும் போக்குவரத்துச் செலவுகளுக்காக 10 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட்டுள்ளது. (72)

தண்ணீர் தட்டுப்பாட்டுக்கு மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

அதிபர் தெரிவிப்பு

வவுனியா, செப் 15

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் குடி தண்ணீர் தட்டுப்பாட்டுக்கு மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

பாடசாலையின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு கிணற்றிலிருந்து வழங்கப்பட்டு வந்த குடி தண்ணீர் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியுடனான காலநிலை காரணமாக வற்றிப்போயுள்ளது. இதையடுத்து மாணவர்களுக்கு குடிதண்ணீர் உட்பட ஏனைய தேவைகளுக்கு பயன்படுத்துவதற்குத் தண்ணீருக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகப்பெற்றோர்கள்தெரிவித்துள்ளனர். இதையடுத்து பாடசாலையின் அதிபர் திரு. த. அமிர்தலிங்கத்திடம் இது தொடர்பாக வினவியபோது மாணவர்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு தற்போது கிணற்றில் தண்ணீர் வற்றிப்போயுள்ளது. எனினும் மாற்றுவழிகள் மேற்கொள்ளப்பட்டு மாணவர்களுக்குத்தட்டுப்பாடுகள் இன்றி நேற்று முன்தினம் தொடக்கம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது. - என்றார்.

சாதியவழி இங்கு வேரூன்றிவிட்டது அதற்குஎவரும்இடமளிக்கக்கூடாது

முகாமைத்துவ உதவியாளருக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் முதலமைச்சர் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், செப். 15

சாதிய வழியில், வர்க்கவழியில், வம்ச வழியில் மக்களைப் பார்க்கும் ஒருபழக்கம் இங்கு வேரூன்றிவிட்டது. இதை நாங்கள் மாற்றவேண்டும். அரச அலுவலர்களாக நாங்கள் பரிமாணம் பெற்றபின் இவ்வாறான எண்ணங்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது. மக்கள் சேவையை மகேஸ்வரன் சேவையாகவே கணித்து நாங்கள் நடந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறுவடக்குமாகாணமுதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தினார்.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமான தெரிவுகள் மூலம் மாகாண முகாமைத்துவஉதவியாளர்கள்பதவிக்கானநியமனக்கடிதம்வழங்கும்நிகழ்வு கைதடியிலுள்ள முதலமைச்சர் மாநாட்டுமண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும்தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையின் ஆட்சிக்குட்பட்டதிணைக்களங்கள், அமைச்சுக்கள் ஆகியவற்றில் காணப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் மொத்த வெற்றிடங்கள் 171 இல் 70 வீதமான நியமனங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலமாகவும், 30வீதமானவெற்றிடங்கள்மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் மூலமாகவும் தெரிவுசெய்யப்பட்டுத் திறந்த போட்டிப் பரீட்சை மூலமான தெரிவுகளில் 110 பேருக்குக் கடந்த மாதம் 17 ஆம் திகதி நியமனங்கள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின்பெறுபேற்று வெட்டுப்புள்ளியாக 110 புள்ளிகள் என்று வரையறுக்கப்பட்டு இந்த நியமனங்களைப் பெறுவதற்கு 51 பேர் தகமை பெற்றிருப்பது மகிழ்வைத் தருகிறது.

இதுவரை காலமும் காரியாலய உதவியாளர்கள் தரங்களிலோ அல்லது சாரதியப்பணிகளிலோகடமையாற்றிஇன்று நியமனம் பெறுகின்றநீங்கள் 51 பேரும் இன்றில்இருந்துஉத்தியோகத்தர்களாக நியமனம் பெற்றுள்ளீர்கள் என்பதை மனத்தில் இருந்திக் கடமைகளை ஆற்றப்பழகிக்கொள்ளவேண்டும்.

நீங்கள்உத்தியோகத்தர்களாகமாற்றப்பட்டுள்ளீர்கள். எனவே சிற்றூழியர் தரங்களில் உள்ள உங்கள் நண்பர்களையும் மற்றும் தெரிந்தவர்களையும் தூரத்தள்ளிவைக்கவேண்டும் என்பது கருத்தல்ல. மாறாக அவர்களையும் இணைத்துக்கொண்டு உங்களுக்குத் தரப்பட்டகடமைகளையும்பொறுப்புக்களையும்நன்குபுரிந்துகொண்டுஉங்கள் பணிகளை ஆற்ற முன்வரவேண்டும். மேலும் இந்தப் போட்டிப் பரீட்சைகள் மூலம் நீங்கள் உங்கள் திறமைகளை வெளிப்படுத்திமுகாமைத்துவஉதவியாளர்களாக வந்திருக்கின்ற நிலையில் உங்கள் கற்றல் நடவடிக்கைகள் இத்துடன்முடிந்துவிட்டதாகஅர்த்தம்இல்லை. மாறாகநீங்கள்தினமும்உங்கள்உத்தியோகபூர்வ மேம்பாட்டில் ஊக்கம் கொண்டவர்களாகக் காரியாலய வழிகாட்டி நூல்களையும் அறிக்கைகளையும் நிதி, நிர்வாகப் பிரமாணக் குறிப்புப் புத்தகங்களையும் தினமும் வாசித்துப் புதியபுதிய விடயங்களைக் கற்றுக் கொள்ளஆர்வம்கொண்டிருக்கவேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் சிறந்த முகாமைத்துவ உதவியாளர்களாகமிளிரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

அரசநியமனம்என்பதுபொதுமக்களுக்குச் சேவையாற்றுவதற்காக இறையருளால் வழங்கப்பட்ட ஒரு சந்தர்ப்பம். இதைமனத்தில்இருத்திச்சேவைகளை ஆற்ற நீங்கள் பழகிக் கொள்ளவேண்டும். உங்களிடம் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காகப் பலபொதுமக்கள் பணியகங்களுக்கு வந்துஅங்குள்ள கதிரைகளில் காத்திருக்க, நீங்கள் உங்கள்நண்பர்களுடன்அல்லதுஅலைபேசியில்நீண்டநேரம்தேவையற்றஉரையாடல்களைவளர்த்துக்கொண்டுஅவர்களைக் காத்திருக்க வைக்கின்ற பழக்கங்களைவிலக்கிக்கொள்ளவேண்டும். அவர்களுள் பலர் அதிகாலையில் எழுந்து தூரபிரதேசங்களில் இருந்து ஆவலுடன் எதிர்பார்த்து வந்தவர்கள். அவர்களை மக்களாகப் பார்க்க நீங்கள் பழகிக் கொள்ளவேண்டும்.

பொதுமக்களைஅதிகநேரம்காத்திருக்கவைக்காமல்அவர்களின்சேவைகளை உடனுக்குடன்நிறைவுசெய்துஅனுப்பக் கூடியதாக நாம் பழகிக் கொள்ளவேண்டும். உங்களிடம்சேவைகளைப்பெறவரும் பொதுமக்களைக் கதிரைகளில் அமரச்செய்து அவர்களின் தேவைகளைக்கேட்டறிந்துஅவற்றைவிரைந்து பூர்த்திசெய்து அனுப்புவது காலக்கிரமத்தில்பொதுமக்கள்மனதில்எம்மீதுநல்ல அபிப்பிராயத்தை உருவாக்க இடமளிக்கும்.

ஒவ்வொருநாளும் கடமை முடிந்து வீடு சென்றதும் இன்று எத்தனை பொதுமக்களுக்கு தன்னலமற்ற சேவைகளை வழங்கியிருக்கின்றோம், எத்தனை தரம் தாமதமாகக் கடமைகளை நிறைவேற்றியிருக்கின்றோம்என்றுஎண்ணுவீர்களாயின்உங்களைநீங்களேமதிப்பிட்டு அடுத்தநாள் கூடிய திறனுடன் சேவைவழங்கஅந்தமதிப்பீடுஇடமளிக்கும்.

முன்னைய காலங்களைப்போல் அல்லாது தற்போது உங்கள் நியமனங்கள் உங்கள்வீட்டிற்கருகாமையில்அல்லது வீட்டில் இருந்து தினமும் பிரயாணம் செய்து திரும்பக் கூடியளவு தூரத்தில் கிடைக்கின்றது. எனவே உங்களிடம் சேவைகளைப் பெறவருபவர்கள் உங்கள் நண்பர்களாகவோ அல்லது உறவினர்களாகவோஅல்லதுதெரிந்தவர்களாகவோ இருப்பார்கள். இவர் தெரிந்தவர், இவர் நண்பர், இவர் உறவினர் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் திணைக்கள நடைமுறைமைக்கு அமையபாரபட்சமின்றிக்கடமைகளை ஆற்றப்பழகிக்கொள்ளவேண்டும். சிங்கப்பூர், யப்பான் ஆகிய நாடுகளின் அரச பணியாளர்கள் பக்கச்சார்பின்றித் திறமையுடன் செயலாற்றுபவர்கள் என்று பெயர் எடுத்துள்ளார்கள். அவர்களின் அவ்வாறான சேவைதான் அந்த இரு நாடுகளையும் பொருளாதார விருத்தியில்உச்சக்கட்டத்துக்குக்கொண்டுபோயுள்ளது.

இன்று சாதாரணமாக வருடாந்த இடமாற்றங்களில்கூட எத்தனையோ முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. தமக்குத் தெரிந்தவருக்கு தமது உறவினருக்கு அண்மையில் உள்ள நிலையங்களைக் கொடுத்துவிட்டு ஏனையவர்களுக்குவன்னிப்பிரதேசங்களிலும்மற்றும்அதிகஷ்டப்பிரதேசங்களிலும் மாற்றங்களை அல்லது நியமனங்களை வழங்குவது பற்றி முறையிடப்படுகின்றது. விசாரித்துப் பார்த்தால் அந்த முறைப்பாடுகளில் உண்மை இருக்கத்தான் செய்கின்றன. இவை தொடர்பாக ஒரு சீரிய முறையைக் கடைப்பிடிப்பதற்காகவேசட்டம் பற்றிய கைநூல்களும்ஒழுங்குவிதிகளும்தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் கூறப்பட்டிருப்பனவற்றை முறையாகக் கடைப்பிடிப்பீர்களேயாயின் இவ்வாறான முறைப்பாடுகள் எழுவதற்கு இடமிருக்காது. சட்டத்துக்கு அமைவாக நடக்கப் பழகிக் கொள்ளுங்கள். ஆனால் மக்கள் நலனுக்காகச் சட்டங்களைப் பாவிக்கவும் கற்றுக் கொள்ளுங்கள். அவர்களைத் துன்புறுத்த சட்டத்தைப் பாவிக்காதீர்கள்.

எதிர்காலத்தில் நீங்கள் அனைவரும் வெறுமனே பணியாளர்களாக அல்லாமல்சிறந்தமக்கள்சேவையாளர்களாகப் பரிணமிக்கவேண்டும் - என்றார்.



உப்புக்குளத்தில் சிறப்புற்ற முன்பள்ளிக் கண்காட்சி

மன்னார், செப். 15

மன்னார் உப்புக்குளம், அல்.அஸ்ஹர் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த கண்காட்சி நேற்றுமுந்தினம் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்ராஸ் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக மன்னார் நகர சபை உறுப்பினர் நி.நகுசீன் கலந்து கொண்டார்.

கண்காட்சியில் முன்பள்ளி மாணவர்களின் கைப்பணி பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. குறித்தகண்காட்சியில் பாடசாலை நிர்வாகத்தினர், பெற்றோர், நலன்விரும்பிகள், மாணவர்கள் என்று பலரும் கலந்து சிறப்பித்தனர். (4.56)

வவுனியா மாவட்டத்தின் முதலாவது மீனாட்சி அம்மன் ஆலயமும், வடக்கு மாகாணத்தில் இரண்டாவது மீனாட்சி அம்மன் ஆலயமுமான மணிபுரம் ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய குடமுக்கு நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது. மீனாட்சி அம்மன் ஆலய மகா கும்பாபிசேகம் சிவசிறி.நா.பிரபாகரக்குருக்களின் தலமையில் இது இடம் பெற்றது. (110)

பாலர் பாடசாலைக்கான கட்டடம் நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம், செப். 15

நெளுக்குளம் பாலர் பாடசாலையில் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் ம. தியாகராசாவின் முன்மொழிவில் வடக்கு மாகாண சபையின் நிதியிலிருந்து தலைமைச் செயலாளரால் ஒதுக்கப்பட்ட ஒரு மில்லியன் நிதியில் குறித்த கட்டடம் அமைக்கப்பட்டது.

வவுனியாதெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் து.நடராஜசிங்கம் தலமையில் இது நடைபெற்றது.

நிகழ்வில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் செயலாளர் சுகந்தி கிசோர் மற்றும் பொது அமைப்புக்கள், ஆலயங்களின் தலைவர், செயலாளர் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4)

வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலத்திலிருந்து குண்டெறிதல் நிகழ்வுக்குத் தேசியமட்டத்துக்காகத் தெரிவுசெய்யபட்டுள்ளனர். அவர்கள் பத்துபேரும் இரத்தினபுரி மாவட்டத்துக்குச் சென்றுபோட்டியில் கலந்துகொள்வதற்கான செலவாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. இலண்டனில் வசிக்கும் திலீபன் என்பவர் குறித்த நிதியை வழங்கினார். நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சமூகநல அமைப்பினர் ஆகியோர்கலந்துகொண்டனர். (110)

கல்லூரி விரிவுரையாளர்களுக்கு திருகோணமலையில்செயலமர்வு

யாழ்ப்பாணம், செப். 15

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடமை யாற்றும்ஆசிரியமத்தியநிலையமுகாமையாளர்கள், கோப்பாய்ஆசிரியர்பயிற்சிக்கலாசாலைவிரிவுரை யாளர்கள்மற்றும்மட்டக்களப்புகல்வியியற்கல்லூரி விரிவுரையாளர்களுக்கும் செயலமர்வொன்று ஏற் பாடுசெய்யப்பட்டிருந்தது.

திருகோணமலைபுதியஆசிரியமத்தியநிலையத்தில் இது நடைபெற்றது.

இதன்போது சிமாட் போட் பயன்படுத்தும் முறைகள் தொடர்பாக சிறப்பான விளக்கங்களுடன் விரிவுரை கள் இடம்பெற்றன.

இந்தச்செயலமர்வைப்புறோமோபொறியியலாளர் நிறுவனம் கல்வி அமைச்சின் அனுசரனையுடன் நடத்தியது. மாறிவரும் கல்வித் திட்டத்துக்கும் தொழில் நுட்ப வளர்ச்சிக்கும் இது பெரிதும் சிறந்தது எனப் பங்குபற்றியவர்கள் தெரிவித்தனர். (4,72)

தனிநாயகம் அடிகள் விழா யாழ்ப்பாணத்தில் நாளை

வடக்கு கிழக்கு இளையோர் சொற்சமர்

தமிழ்த்தூதுதனிநாயகம்அடிகள்நினைவுஅரங்கம் நாளைஞாயிற்றுக்கிழமைமாலை4மணிக்குஇடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கம்முன்னெடுக்கும்இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் உள்ள கலைத்தூது கலையகத்தில்நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் உபதலைவர் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகள் தலை மையில்நடைபெறவுள்ளஇந்தநிகழ்வுதனிநாயகம் அடிகள் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணி வித்தல், மலர் வணக்கம் செய்தலுடன் ஆரம்பமா கும்.

கலைத்தூது கலையகத்தில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்களின் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து வரவேற்புரையை தமிழ்ச்சங்க ஆட்சிக் குழுஉறுப்பினர்சி.சிவஸ்கந்தசிறிஆற்றுவார். தனி நாயகம்அடிகளார்ஆய்வுமையபணிப்பாளர்அருட் கலாநிதி அ.பி.யெயசேகரம் அடிகளார் ஆசியுரை வழங்குவார். யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கத்தலைவர் விரிவுரையாளர் ச.லலீசன் தொடக்கவுரையாற்று வார்.

'தமிழ் அடையாள உருவாக்கம் திருவள்ளுவரை முன்னிறுத்தி'என்றபொருளில்தனிநாயகம்அடிகள் நினைவுப்பேருரைஇடம்பெறும். இதனைப்பேரா னைப்பல்கலைக்கழகதமிழ்த்துறைப்பேராசிரியர் வ.மகேஸ்வரன் வழங்குவார்.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் 35 வயதுக்குட்பட்ட இளையோரிடையேமுன்னெடுத்தவிவாதச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி சிறப்பு நிகழ்வாக இடம் பெறவுள்ளது. வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தும் கவிஞர் புதுவை இரத்தினதுரை அணி யும்கிழக்குமாகாணத்தைப்பிரதிநிதித்துவப்படுத்தும் சுவாமி விபுலாநந்தர் அணியும் இதில் சொற்சமர் ஆடவுள்ளன.

வெற்றிபெறும்அணிக்கானவெற்றிக்கேடயத்தைத் தமிழ்ச் சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வழங்குவார். ஆட்சிக்குழு உறுப் பினர்லோ.துஷிகரன்நன்றியுரைஆற்றுவார்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

மடுபுனித பிரதேசத்தை வரைபடமாக்கத்திட்டம்

மடுவில் நேற்று நடந்த கூட்டத்தில் மைத்திரியின் செயலாளர் தெரிவித்தார்

மன்னார், செப். 15

மடுப்பகுதியில் புனித பூமியாக மாறவுள்ள இடங்கள் விரைவில் வரைபடமாக்கப்படவுள்ளன.அதற்கானபணியைத்துரிதப்படுத்து மாறுநிலஅளவைவனஜீவராசிகள்வன இலாகாவினருக்குஅரசதலை வரின் செயலாளர் பணித்துள்ளார்.

மடுபிரதேசத்தை புனிதபூமியாக அறிவிக்கும் இரண்டாவது கூட்டம் மடு பிரதேச செயலகத் தில் மாவட்டச் செயலர் சி.ஏ. மோகன்றாஸ் தலைமையில்நேற்றுநடைபெற்றது. அனைத் துத்திணைக்களங்களுக்கும்அதற்குஅழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அதன்போதே அரசதலைவரின் செயலாளர் மேற்கண்டவாறு பணித்தார்.

கடந்தஆடி,ஆவணிமடுத்திருவிழாநாள்களில் மடுக்கோவில் பகுதி புனிதப் பிரதேசமாக அறி வித்து அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

கடந்த ஆவணித் தருவிழாவை முன்னிட்டு மடுவுக்கு வந்த அரசதலைவர் அதை உறுதிப் படுத்தினார்.

மடுத் திருத்தல பகுதியை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்துவது தொடர்பில் அமைச்சர வையின் அங்கிகாரம் கிடைத்த நிலையில் நேற்றைய கூட்டம் இடம்பெற்றது.

சூழலியல்சுற்றுலாவனஇலாகாவனஜீவராசி கள் எவற்றுக்கும் பாதிப்புகள் ஏற்படாதவாறு புனித பூமிக்கான எல்லை காண்பது மிக அவ சியம் என்று வலியுறுத்தப்பட்டது.

நகர அபிவிருத்தி மாநகர திட்டமிடல் அமைச்சு நிதிஅமைச்சுடன்கலந்தாலோசித்துபுனிதபூமி மற்றும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களை அபிவிருத்திசெய்யநாடாளுமன்றஅங்கீகாரத் துக்கு அனுப்பி புனித பூமி அபிவிருத்தியை முன்னிலைப்படுத்தி2019வரவுசெலவுதிட்டத் தில்நிதிபெறப்படும்.

எதிர்வரும்காலங்களில்புனிதபூமிசெயற்பாட் டுக்குழுமன்னார்ஆயர்தலைமையில்செயற் படும்.

நகர மற்றும் மாநகர திட்டமிடல் குழு விரை வாக புனித பூமியாக அறிவிக்கப்படக் கூடிய இடங்களை இனங்கண்டு அந்த இடங்களை அடையாளப்படுத்துவதன்மூலம்அவைஅரசி தழில் பிரசுரம் செய்யப்படும். அடையாளம் காணப்படும்பிரதேசங்களில்ஏதேனும்சிக்கல் பிரச்சினை இருந்தால் அதைச் சம்பந்தப்பட்ட வர்களுடன் கலந்துபேசி எவருக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு புனித பூமிக்கான எல்லை காண்பதுஅவசியம்.அதற்கானவரைபடத்தை தயாரித்துத் தாருங்கள் என்று திட்டமிடல் குழு விடம் அரசதலைவரின் செயலர் கேட்டுக் கொண்டார்.

மடு ஆலயத்துக்கு உள்வரும் முதன்மை வீதி கள், உள்ளக வீதிகளை அபிவிருத்தி செய்வது யாத்திரை வரும் ஆண், பெண்கள் குளிப்ப தற்காக மடுபிரதேசத்தினுள்உள்ளசிறுகுளங் கள் சீரமைப்பு, மடுக்கோவிலுக்குள் வரும் வீதிகளில் கோபுர வளைவுகள் கட்டுவது, திரு விழாக் காலங்களில் பக்தர்கள் தங்கிச் செல்வ தற்கான விடுதிகள் அமைப்பது நிரந்தரமான குடிதண்ணீர் வசதிகளைச் செய்வது, தீய னைப்புவசதி, திருவிழாக்காலங்களில் வரும் பெரும்எண்ணிக்கையிலானவாகனங்களை நிறுத்துவதற்காக வாகன தரிப்பிடம் அமைத் தல்,திருவிழாஇல்லாதசாதாரணகாலங்களில் அதை மன்னார் அரச, தனியார் பேருந்துகள் பயன்படுத்திக்கொள்ளும்.

திருவிழாக் காலங்களில் குவியும் கழிவுப்பொ ருள்களை அகற்றுவதற்கான முகாமைக்குழு அமைக்கப்படுவதுதொடர்பாகவும்ஆராயப்பட் டது

மருத்துவம்தொடர்பாகஆராயப்பட்போதுபண் டிவிரிச்சான் பிரதேச மருத்துவனையைத் தர முயர்த்துவதனூடாகச் சிறந்த மருத்துவத்தைப் பெறமுடியும்என்றுபேசப்பட்டது.

மாவட்டச்செயலர்மோகன்றாஸ்தலைமையில் செற்படும் புனித பூமி செயற்பாட்டுக் குழு ஒவ் வொரு மாதமும் ஒன்றுகூடி வேலைத்திட்ட முன்னெடுப்புகள் பற்றி ஆராயும் என்று மாவட்ட செயலர் தெரிவித்தார்.

இந்த மடுப்புனித பூமி மீளாய்வு கூட்டத்தில் அரசதலைவரின் ஆலோசகர் உதய செனவி ரெத்ன,அரசதலைவரின்மேலதிகசெயலாளர் எசல வீரக்கோன், தலைமை அமைச்சரின் செயலாளர்கிங்ஸ்லி,வடக்குமாகாணதலை மைச் செயலாளர் அ.பத்திநாதன், மன்னார் மாவட்டச் செயலர் மோகன்றாஸ், மன்னார் மாவட்ட குருமுதல்வர் விக்டர் சோசை, நானாட்டான், மாந்தை பிரதேசசபைகளின் தவிசாளர்கள்,இராணுவத்தினர்,பொலிஸார், கடற்படை அதிகாரிகள் மற்றும் அனைத்துத் திணைக்களஅதிகாரிகளும்கலந்துகொண்ட னர்.

மடுபுனிதபூமியாக அறிவிப்பது தொடர்பான முதலாவது கூட்டம் இந்தமாத ஆரம்பத்தில் அரசதலைவரின்தலைமையில்அரசதலைவர் செயலகத்தில்நடைபெற்றது.

(4,213,56)

முன்னாள் எம்.பிக்கு சிலை அமைப்பதில் உறுப்பினர்கள் வாக்குவாதம்

வவுனியா, செப். 15

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்சி.சுந்தரலிங்கத்துக் குச் சிலை அமைக்கும் விடயத் தில், நகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பி னர்களுக்கிடையில் வாக்குவா தம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா நகரசபையின் ஆறா வது அம்ர்வு சபையில் தவிசா ளர் இ.கௌதமன் தலமையில் நேற்றுமுன்தினம் நடைபெற் றது.

சுந்தரலிங்கம் நினைவாக அவ ரது சிலையை திருநாவற்குளம் பகுதியில் அமைக்கவேண்டும் என்றும் சுந்தரலிங்கம்நகர் திரு நாவற் குளம் என்று பெயர் மாற் றுமாறும் கூட்டமைப் பின் நகர சபை உறுப்பினர் ரி.கே.ராஜ லிங்கம் தீர்மான வரைவைச் சமர்ப்பித்திருந்தார். அது விவா தத்துக்கு வந்தபோது கூட்ட மைப்பின் நகரசபை உறுப்பி னர் சுமந்திரன் எதிர்ப்புத் தெரி வித்தார். சிலைகள் வைப்ப தற்கு அங்கு இடமில்லை. வைத்த சிலைகளையே சரியா கப் பராமரிக்கமுடியவில்லை. சிலைகளை வைத்து நாம் எதைச் சாதித்தோம் என்று காட் டமாக்கூறினார். இதன்போது உறுப்பினர் ராஜலிங்கம் சுமந் திரனைப் பார்த்து, உங்களுக் குச் சுந்தரலிங் கத்தை யார் என்று தெரியுமா என்றுகேட் டார். இதனால் கோபமடைந்த சுமந்திரன் காரசாரமாக பதில் வழங்கிக்கொண்டிருந்தார். அதன்போது பேசியதிருநாவற் குளம் வட்டார உறுப்பினர் காண்டீபன், திருநாவற்குளம் மக்கள் விரும்பினால் மாத்தி ரமே அதன்பெயரை மாற்றமுடி யும் என்று தெரிவித்திருந்தார். இறுதியில் குறித்த தீர்மான வரைவு தள்ளுபடி செய்யப்பட் டது.

இதேவேளை,

நகருக்குட்பட்ட சிறுவர் இல்லங் களுக்கு மலக் கழிவகற்றும் வாகனங்களை இலவசமாக வழங்குவதாக சபையில் நேற் றுமுன்தினம் தீர்மானிக்கப்பட் டது.

அதன் தேவை குறித்து சில சிறு வர் இல்லங்களின் பொறுப்பா ளர்கள் நகரசபையிடம் வேண்டுகோள் விடுத்திருந் தன. அது தொடர்பில் சபையில் கலந்துரையாடப்பட்டது. இறுதி யில் குறித்த வாகனங்களை இனிவரும் காலங்களில் இலவ சமாக வழங்குவது என்று தீர்மா னிக்கப்பட் டது. (4,110)

பொய்க் கருத்துக்களுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம்,செப்.15

வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.அஸ்மி னுக்கு ஆதரவாகவும், பொய் யான கருத்துகளை தெரிவிக்கும் ஊடகங் களுக்கு எதிராகவும் நேற்றுப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

உண்மைக்கான வடக்கு மக்கள் என்னும் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று மதியம் முஸ்லிம் கல்லூரி வீதி, ஆசாத் வீதி முச்சந் தி யில் இந்தப் போராட்டம் முன்னெ டுக்கப் பட்டது. இன அமைதிக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகை யில் செயற்பட்ட ஊடகத் துக்கு எதிராக வழக்கு தாக் கல் செய்யவுள்ளதாகவும், முஸ்லிம்கள் பற்றி வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் கூறாத கருத்தை கூறியதாக வும் தெரிவித்து இந்த போராட்டம் முன்னெடுக்கப் பட்டது

என்று போராட்ட ஏற்பாட்டாளர்கள் தெரி வித்தனர். (7)


கோப்புப் படம்

ஜெனீவா செல்வதற்கு நுழைவிசைவு மறுப்பு

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கொந்தளிப்பு

முல்லைத்தீவு, செப். 15

ஜெனீவாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கூட்டத் தொடரில் நாங்கள் கலந்து சாட்சியமளிக்க முடியவில்லை. எமக்கு நுழைவிசைவு மறுக்கப்பட்டுள்ளது. இதற்குப் பின்னணி இலங்கை அரசுதான் என்று முல்லைத்தீவு மாவட்ட காணாமல் போனவர்களின் உணவினர்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகள் 557 ஆவது நாளாக நேற்றுப் போராட்டம் நடத்திவருகின்றனர். அவர் கள்நேற்றுமுன்தினம் தமது கொட்டகையில் ஊடக சந்திப்பு நடத்தினர். அதில் சங்கத்தின் தலைவி ம.ஈஸ்வரி தெரிவித்ததாவது,

39 ஆவது ஜெனீவா கூட்டத்தொடர் தொடங்கப் பட்ட நிலையில் எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று ஏற்கனவே ஜக்கிய நாடுகள் சபை யில் கேட்டிருந்தோம். எங்களுக்கு நியாயமான தீர்வு பெற்றுத்தரவேண்டும் என்று கோரியிருந் தோம். இந்த நிலையில் நுழைவிசைவு மறுக்கப் பட்டுள்ளது. இதற்குப் பின்னணி இலங்கை அர சுதான்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எட்டு மாவட்ட உறவுகளுக்கும் அரசின் இந்தச் செயற்பாடு மன அழுத்ததம்தைக் கொடுத்துள்ளது. பயத்தைக் கொடுத்துள்ளது.

குற்றம் புரிந்த இரணுவத்தினருக்கு நுழைவி சைவு கொடுத்து அவர்களை அனுப்பி எங்க ளுக்கு மறுப்பு தெரிவித்துள்ளமை வேதனைக்கு ரிய விடயம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பணிய கம் நீண்டகாலமாக வேண்டாம் என்றே கூறி வருகின்றோம். வெளிநாட்டு நிறுவனங்களும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பணியகத்தை திணித்துக்கொள்கின்றார்கள். இதனால் கிடைக் கும் எந்தத் தீர்வும் வேண்டாம்.

எங்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டும். எங்க ளின் உறவை மீட்கப் பன்னாடுகள் உதவவேண் டும். இலங்கை அரசின் காணாமல் ஆக்கப்பட்ட வர்களுக்கான பணியகத்துக்கு துணை போகா மல் எங்களுக்கு ஆதரவு தந்து நீதியைப் பெற் றுக்கொடுக்கவேண்டும்.

எங்கள் உறவுகளை மீட்க, நீதி கிடைக்க புலம்பெ யர் தமிழர்கள் எங்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கவேண்டும். எங்கள் நிலையை உலகுக் குத் தெரிவிக்கவேண்டும் என்று பன்னாடுகளில் வாழ்கின்ற எங்கள் சமூகத்தை நாங்கள் கேட் கின்றோம், கையேந்தி நிற்கின்றோம்.

நுழைவிசைவு மறுக்கப்பட்ட மனவேதனையில் நாங்கள் இருக்கின்றோம். நாங்கள் நியாயம் கேட்பதற்கும் எந்த நாட்டுக்கும் செல்வதற்கும் எங்களுக்கான ஒரு சூழலை அமைத்துத் தர வேண்டும் என்றும் வேண்டுகின்றோம்.

எங்களுக்கு இலங்கை அரசின் காணாமல் போனவர்கள் பணியகத்தின் ஆறாயிரம் ரூபா மாதக் கொடுப்பனவு வேண்டாம். இந்தப் பணிய கத்தை நாங்கள் முழுமையாகப் புறக்கணிக்கின் றோம். இந்தப் பணியகத்தால் எங்களுக்கு எந்தப் பயனும் இல்லை - என்றார்.

(4,ரி3)

சிறப்புத் தேவையுடைய கலைஞர்களுக்கான இறுதிப் போட்டிகள் நாளை

வவுனியா, செப். 15

சிறப்புத் தேவையுடைய கலைஞர்க ளுக்கான சுப்பர் சிங்கர் இறுதிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெ றும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாற்று வலுவுள்ளோருக்கான இந்தச் சுப்பர் சிங்கர் இறுதிப் போட்டி வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள சிறப்புத் தேவையுடையவர்களின் திறன்களை வெளிக்கொணர களம் அமைக்கும் நோக்குடன் கடந்த 24ஆம் திகதி வரோட் என்றழைக்கப்படும் சிறப்புத் தேவையுடையோருக்கான வலுவூட் டல் அமையம் மற்றும் யாழ்ப்பாணம் உடுவில் குபேரகா கலைமன்றம் இணைந்து சிறப்புத் தேவையுடைய கலைஞர்களுக்கான போட்டிகளை வரோட் நிறுவன வளாகத்தில் நடத்தியி ருந்தது.

இந்த நிகழ்வில் வவுனியா, யாழ்ப்பா ணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங் களில் இருந்து மொத்தமாக 26 போட்டி யாளர்கள் பங்குபற்றினார்கள். அன் றைய நாளில் இரண்டு சுற்றுக்கள் இடம்பெற்றன. இந்தச் சுற்றில் பாடல் கள் யாவும் கரோக்கி இசையுடன் இசைக்கப்பட்டு 13 போட்டியாளர்கள் இறுதிச் சுற்றுக்காகத் தெரிவு செய்யப்பட் டார்கள்.

அதன் இறுதிச்சுற்றே எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது. வாத்திய கலைஞர்களின் இசையுடன் நேரடியா கப் பாடல் போட்டிகள் இடம்பெறவுள் ளன என்று மேலும் தெரிவிக்கப்பட் டது. (4,110)

வடக்குக் கிழக்கிலுள்ள

சிறப்புத் தேவையுடைய அமைப்புகள் 2 மாதங்களுக்கு ஒருமுறை கூடவுள்ளன

யாழ்ப்பாணம், செப். 15

வடக்கு கிழக்கில் சிறப்புத் தேவையுடை யவர்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாகாண சந்திப்பும் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை மாவட்டச் சந்திப்பும் நடத்துவதென்று கலந்துரை யாடலில் தீர்மானித்துள்ளனர்.

வடக்கு கிழக்கிலுள்ள சிறப்புத் தேவையு டையவர்களுக்கான சந்திப்பு வவுனியா சேவா லங்கா மண்டபத்தில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

வேள்ட் விசன் வடக்கு கிழக்குக்கான மாற்றுத் திறனாளிகளின் ஆலோசகர் பிரபாகரன் தலமையில் கலந்துரையா டல் இடம்பெற்றது. சிறப்புத் தேவையு டையவர்கள் அமைப்பு மற்றும் லைவ் ஒருங்கிணைப்பும் வலையமைப்பும் அதனை ஏற்பாடு செய்திருந்தது. அதில் எட்டு அமைப்புகள் கலந்துகொண்டன. சிறப்புத் தேவையுடைய அமைப்புக ளாக சபையிலிருந்து வடக்கிலிருந்து 3அமைப்புகளும் கிழக்கிலிருந்து 5அமைப்புகளும் கலந்துகொண்டன. ஒவ்வொரு அமைப்பும் தங்களின் செயற் பாடுகள் சம்பந்தமாகக் கலந்துரையாடின. வடக்கு கிழக்கு அமைப்புகள் கலந்து கொண்டு நடைபெற்ற இந்தச் சந்திப்பு ஒரு உறவுப் பாலமாக அமைந்ததாக அதில் கலந்துகொண்டவர்கள் தெரிவித் தனர். (4,159)

பாடசாலை வாசலில் நின்று

மகனைத் தாக்கிய தந்தைக்கு மறியல்

சாவகச்சேரி, செப். 15

பாடசாலை வாயிலில் வைத்து மக னைத் தாக்கினார் என்ற குற்றச்சாட் டில் தந்தையை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதி மன்று நேற்றுமுன்தினம் உத்தர விட்டது.

தந்தை வீட்டில் வைத்து தாக்கினார் என்றும் அதனால் அச்சமடைந்த மாணவன் வேறொரு இடத்தில் தங்கி கல்வி கற்று வருகிறார் என் றும் தெரிவிக்கப்பட்டது. மகன் தொடர்ந்து வீட்டுக்கு வராததால் அவரை அழைத்துச் செல்ல தந்தை பாடசாலை வாசலில் நின் றுள்ளார். மகன் பாடசாலைக்கு வந்தபோது வீட்டுக்கு வருமாறு அழைத்துள்ளார். மாணவன் வீட் டுக்குச் செல்ல மறுத்ததால் கோபம டைந்த தந்தை பாடசாலை வாச லில் வைத்து தாக்கியுள்ளார் என்று தந்தை மீது குற்றஞ்சாட்டப்பட்டுள் ளது. இதனைப் பாடசாலையின் அதிபர் கண்டு தடுக்கச் சென்றுள் ளார் என்றும் அதனால் மாணவ னின் தந்தை அதிபரைத் தகாத வார்த்தைகளால் ஏசிவிட்டுச் சென் றுள்ளார் என்றும் முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

பாடசாலை வாசலில் வைத்து மாணவன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து தந்தை கைது செய்யப்பட்டார். நீதி மன்றில் நேற்றுமுன்தினம் முற்ப டுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிவான் மாணவனின் தந்தையை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விட்டார்.

இவர் ஏற்கனவே பல வழக்குகள் தொடர்பாக நீதிமன்றங்களால் பிடி யாணை பிறப்பிக்கப்பட்டுத் தேடப் பட்ட வருபவர் என்றும் பொலிஸா ரால் கூறப்பட்டுள்ளது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது வாக்குச் சேகரிக்கச் சென்றி ருந்த கட்சி ஒன்றின் வேட்பாளரைத் தாக்கியிருந்தார் என்றும் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள. (4,9)

பொலிஸ் வாகனத்தைக் கடத்தினாரென்று கைதான மற்றொருவருக்கும் விளக்கமறியல்

தென்மராட்சி, செப். 15

கெரடிகாமம் பொலிஸ் நிலைய வாகனம் கடத்த லுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

அவர் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட் டார். அவரை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத் தரவிட்டது.

பாலாவியில் கடந்தவாரம் மோதல் நடைபெறுவ தாக கிடைத்த தகவலையடுத்து கொடிகாமம் பொலிஸார் அங்கு சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அங்கு மோதலில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்ய முற் பட்ட வேளையில் கடமையிலிருந்த பொலிஸா ரைத் தாக்கிவிட்டு பொலிஸாரின் வாகனத்தைக் கடத்திச் சென்றிருந்தனர். அங்குநின்ற மோட் டார் சைக்கிளைப் பெற்றுப் பொலிஸார் துரத்திய போது வாகனத்தைக் கடத்தியவர் அங்குள்ள கோவிலுக்கு முன்பாக உள்ள மரத்துடன் வாக னத்தை மோதிவிட்டு தப்பியோடிவிட்டார்.

வாகனத்தை மீட்ட பொலிஸார் தேடுதல் நடத்தி மோட்டார் சைக்கிள் வழங்கியவர் மற்றும் தோட் டத்துக்குச் சென்று திரும்பியவர் எனத் தெரிவிக் கப்படுவோர் உட்பட ஐவரைக் கைது செய்திருந் தனர்.

மறுநாள் இரவு 10மணிக்கு சாவகச்சேரி நீதி வான் முன்னிலையில்அவர்கள் முற்படுத்தப்பட்ட னர். வழக்கை விசாரித்த நீதிவான் ஐவரையும் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த ஐந்து பேர் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி களான க.சதீஸ்வரன், திருமதி வே.தியாந்தினி ஆகியோர் சந்தேகநபர்களைப் பிணையில் விடு மாறு மனு சமர்ப்பித்தனர். பொதுச் சொத்துக களைக் கடத்தியதுடன் அதனைச் சேதப்படுத்திய வர்களை பிணையில் விடமுடியாது எனக் கூறி பிணை மனுக்களை நீதிவான் நிராகரித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு மேலும் ஒருவரைக் கைதுசெய்து நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர். அவரை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக் கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட் டார் என்று தெரிவிக்கப்பட்டது. (4,9,159)

தகவல் அறிந்து கொள்ளும் பன்னாட்டுத் தினம் செப்ரம்பர் 28 ஆம் திகதி

தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை தொடர்பான பன்னாட்டுத் தினம் செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைவாக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரையிலான ஒருவாரம் தகவல் வாரமாக பிரகடனப்படு த்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் இந்தக் காலப் பகுதியில் தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமையை பயன்படுத்தும் முறை குறித்து பொது மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வுள்ளது.

"கிராமத்திற்கு தகவல் உரிமை என்ற தலைப்பில் தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை தொடர்பான சட்டம் தொடர்பான நடமாடும் சேவைகளும் முன்னெடுக்கப் படவுள்ளன.

நாடு முழுவதிலுமுள்ள பாட சாலைகளை உள்ளடக்கிய வகையில் போட்டிகளும் ஏற் பாடு செய்யப்படவுள்ளன.

நடமாடும் சேவை மூலம் மாணவர்களுக்கு சட்டம் தொடர்பில் தெளிவை ஏற்ப டுத்துவதற்காக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு எதிர் பார்த்துள்ள நிலையில், அமைச்சர் மங்கள சமரவீர இதற்காக சமர்ப்பித்த ஆவ ணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இராணுவ அதிகாரிகள் கைதை கண்டித்தார் மைத்திரி பால

கொழும்பு, செப் 14

நீதிமன்றநடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்குமுன் னர் உயர்மட்ட இராணுவ அரச தலைவர் செய் யும்நடவடிக்கைகளை அரைசதலைவர் மைத் திரிபால சிறிசேனக் கடுமையாக விமர்சித்துள் ளார்.

பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவை கைது செய்வ தற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்தே, அரச தலைவர் சிறப்புஅமைச்சரவைக்கூட்டத்தைநேற்றுமுன் தினம் கூட்டியிருந்தார்.

இதன்போது அரச தலைவர் மைத்திரிபால சிறி சேன இலங்கைப் பொலிஸார் மீது கடும் விமர்ச னங்களை முன்வைத்துள்ளார்.

நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவ தற்கு முன்னரே, பாதுகாப்பு உயர் அதிகாரிகள் இதுபோன்றுதுன்புறுத்தல்களுக்குஉள்ளாக்கப் படுகின்றனர்.

எந்தவொரு இராணுவ அதிகாரிக்கும் எதிராக குற்றச்சாட்டுகள் இருந்தால், அவரைக் கைது செய்து நீண்டகாலம் தடுத்து வைப்பதற்குப் பதி லாக, சட்டநடவடிக்கையை பொலிஸார் துரிதப் படுத்த வேண்டும் இராணுவத்தினரை கைது செய்த பின்னர் விசாரணைக்கு நீண்டகாலம் இழுத்தடிப்பது, அரசியல் விவகாரமாக மாறும் என்றும் அரச தலைவர் எச்சரித்துள்ளார்.

இலங்கை இராணுவத் தளபதி தொடர்பாக, அமைச்சர்பீல்ட்மார்ஷல்சரத்பொன்சேகாஅண் மையில் செய்த விமர்சனங்கள் தொடர்பிலும் இந்தஅமைச்சரவைக்கூட்டத்தில்அரசதலைவ ரால் விமர்சிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.



கோத்தபாய போட்டியிட்டால் கட்டுப்பணம் என்னுடையது

சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, செப் 15

மகிந்த குடும்பத்தில் கோத்தபாய ராஜ பக்ச போட்டியிடுவதாக இருந்தால், அவ ருக்கான வேட்பாளர் கட்டுப்பணத்தை நானே கட்டுவேன் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜ பக்ச இந்தியாவில் வைத்து தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரே அடுத்த அரச தலைவர் தேர்தலில் வேட்பாள ராக வருவார் எனத் தெரிவித்திருந் தார். இது தொடர்பில் #கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத் தாபாய ராஜபக்ச அரச தலைவர் வேட்பா ளராக போட்டியிட்டால், உங்களது கட்சி அவருடன் போட்டியிட தயாரா? என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப் பியதற்கு, பதிலளித்த சரத் பொன்சேகா எமது கட்சியின் தலைவர் பொருத்த மான ஒருவரை வேட்பாளராக நிறுத்து வார் என்றிருந்தால், கோட்டாவை வெற்றி கொள்வது சிரமமானதல்ல என்றார்.



திருக்கோணேஸ்வரத்தை புனித நகராக பிரகடனப்படுத்துக

கோரிக்கை மனு கையளிப்பு

கொழும்பு, செப் 15

திருக்கோணேஸ்வரத்தையும் அதனை அண்டிய பிரதேசங்களையும் புனித நகராக பிரகடனப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மணுவை இந்தியத் தூதர் தரன்ஜித்சிங் சந்துவிடம் இராவணசேனையினரால் நேற்றுக் கையளிக்கப்பட்டது. இராவணசேனையினரால் மக்களிடம் சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்கள் அடங்கிய கோரிக்கை மனுக்களையே திருக்கோணேஸ்வர ஆலயத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

ரணிலும் மஹிந்தவும் நாடு திரும்பினர்

கொழும்பு, செப் 15

ஆசிய பன்னாட்டு பொருளாதார மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவியட்நாம்சென்றிருந்ததலைமை அமைச்சர்ரணில்விக்ரமசிங்கநாடுதிரும்பியுள்ளார். மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ பயணத்தினை மேற்கொண்டு கடந்த 10 ஆம் திகதி வியட்நாமுக்கு சென்றிருந்தார்.

இந்நிலையில் தலைமை அமைச்சர் நேற்றுமுன்தி னம் இரவு சிறிலங்கன்வானூர்திசேவைக்குசொந் தமான யு.எல்.407 என்ற வானூர்தியினூடாக கட் டுநாயக்க, பன்னாட்டு வானூர்தி நிலையத்தை வந்தடைந்தார்.

இதேவேளை, கடந்த 10 ஆம் திகதி இந்தியாவிற்கு பயணம்மேற்கொண்டிருந்தமுன்னாள்அரசதலை வர் மகிந்த ராஜபக்ச, புதுடில்லியிலிருந்து சிறிலங் கன்வானூர்திசேவைக்கு சொந்தமானயு.எல்196 என்றவானூர்தியினூடாகநேற்றுமுன்தினம்இரவு நாட்டைவந்தடைந்தார்.

நாட்டின் பொதுப் போக்குவரத்து சேவை பயணிகளின் மதிப்பைப் பெற வேண்டும்

அரசதலைவர் வலியுறுத்துகிறார்

கொழும்பு, செப். 15

நாட்டின் பொதுப்போக்குவரத்து சேவையை பயணி களின் பாராட்டைப்பெறும் சேவையாக மாற்றுவது அவசியம்என்று அரசதலைவர் மைத்திரிபால சிறி சேன தெரிவித்தார்.

பொதுப்போக்குவரத்து சேவையின் தரத்தை மேம் படுத்தி முறையான போக்குவரத்து சேவையாக அதனைப்பேணுவது தொடர்பாக, அரசத்லைவர் பணியகத்தில் நேற்றுக் கலந்துரையாடல் இடம் பெற்றது. அதன்போதே அரசதலைவர் இதனை தெரிவித்தார்.

தரமான பொதுப்போக்குவரத்து சேவையை நாட் டுக்கு அறிமுகப்படுத்துவதற்காக 2016ஆம் ஆண் டுஆரம்பிக்கப்பட்ட "சஹசர" திட்டத்தின் முன்னேற் றம் பற்றியும் தரமான போக்குவரத்து சேவையை நாடு முழுவதும் முன்னெடுப்பது பற்றியும் இதன் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் பொதுப்போக்குவரத்து சேவையை பலப் படுத்தி மாற்றுப் போக்குவரத்து முறைகளுக்கு திரும்பியுள்ளபயணிகளை மீண்டும் பொதுப்போக் குவரத்துச் சேவையின்பால் ஈர்த்தல், அதன்மூலம் நாட்டின் வீதிப்போக்குவரத்து நெரிசல்களை குறைத்தல், பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்ப டுத்தல் உள்ளிட்டபொதுப்போக்குவரத்தை மக்கள் நேயப் பொறிமுறையாக மாற்றும் விரிவான வேலைத்திட்டம் தொடர்பாகஇதன்போது அரசத லைவர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

போக்குவரத்துப் பிரச்சினை நாட்டின் பொருளாதா ரத்துக்குப் பெருமளவு தாக்கம் செலுத்துகிறது. உரி யநேரத்துக்குப் பயணங்களை மேற்கொள்ள முடி யாதிருத்தல், பேருந்தில் அதிக நெரிசல், வீதிப் போக்குவரத்துநெரிசல்கள், நல்ல ஒழுக்கப் பண் பாட்டையுடைய சேவை கிடைக்காமை போன்ற பயணிகளுக்குப் பாதிப்பைஏற்படுத்துகின்ற விடயங் கள், பேருந்து உரிமையாளர்களின் வருமானம் குறைந்து அவர்களிடையேபோட்டித்தன்மை ஏற்ப டுதல், பேருந்து ஊழியர்களிடம் தொழில் பற்றிய மதிப்பின்மை போன்ற பல்வேறுபிரச்சினைகள் இதனால் உருவாகியுள்ளன என்றும் அவர் தெரி வித்தார்.

'கூட்டாட்சியின் விரிவாக்கம்' நினைவுப் பேருரை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், செப். 15

சிறுப்பிட்டி தமிழறிஞர் சி.வை.தாமோதரம் பிள்ளை 187ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, இன்றைய கூட்டாட்சியின் விரிவாக்கம் எனும் தலைப்பில் நினைவுப் பேருரையை, தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பின ரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் இன்று நிகழ்த்தவுள்ளார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (5)

மைத்திரி, கோத்தா மீது கொலை முயற்சி

சூத்திரதாரிகள் கைதாகும் வரை பொலிஸ் விசாரணையைப் புறக்கணிப்போம் என்கிறது மகிந்த அணி

கொழும்பு, செப். 15

கிழக்கு மாகாணத்தில் வைத்து முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் அரச தலைவர்மைத்திரிபால சிறிசேன ஆகியோரைக் கொலை செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இதன் சூத்திரதாரிகள் கைது செய்யப்படும் வரையில் பொலிஸ் விசாரணைகளை நாம் புறக் கணிப்போம். இவ்வாறு மகிந்த அணியினர் நேற்றுமுன்தினம் திடீர் அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

மகிந்த அணியின் பத்திரிகையாளர் சந்திப்புபொரளைஎன். எம். பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்றுமுன் தினம் மாலை நடைபெற்றது. நாடா ளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அழுத்கமகேகலந்துகொண்டுகருத் துக்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மைத்திரிபாலவைக் கொலை செய் வதற்கான சூழ்ச்சி குறித்த செய்தி இன்றையஇ(நேற்றுமுன்தினம்)பத்தி ரிகைகளில் வெளியாகியிருந்தது. அந்தச் சதியைப் பொலிஸாரே தீட்டி யுள்ளனர். பொலிஸ் மா அதிபர் மற் றும்பிரதிப்பொலிஸ்மாஅதிபர்நாளக சில்வாமீதுகுற்றச்சாட்டுமுன்வைக் கப்பட்டுள்ளது. அரச தலைவரைக் கொலை செய்வதற்கு பொலிஸ் திணைக்களம்சூழ்ச்சிமேற்கொள்கி றதென்றால் மக்களின் பாதுகாப்புக் குறித்து என்ன சொல்வது?

ஊழல் மோசடி எதிர்ப்பு செயலணி யின் வழிநடத்தல் பணிப்பாளர் நாமல்குமாரகண்டியில் ஊடகவிய லாளர்சந்திப்பொன்றைநடத்தினார். முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசே னவைக் கிழக்கு மாகாணத்தில் வைத்து கொலை செய்வதற்கு எடுக் கப்பட்ட சதி முயற்சி தொடர்பில் இதன்போதுதெளிவுபடுத்தியுள்ளார். அந்தச்சதிமுயற்சியைமுன்னெடுப் பதற்கு பாதாளஉலகக்குழுஉறுப்பி னர்ஒருவரைஉள்ளடக்கியதாகவும் அந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது குறிப்பிட்டிருந்தார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர், நாமல் குமாரவுடன் கலந்துரையாடும் அலைபேசி ஒலிப்பதிவையும் ஊட கவியலாளர் சந்திப்பின்போது அவர் வெளியிட்டுள்ளார். மேலும் அரச தலைவர்மற்றும்தலைமைஅமைச் சருக்கும் இடையில் சிக்கல் ஏற்பட் டுள்ளது.

தலைமை அமைச்சருக்கு இலாபம் கிடைக்கும் வகையில் செயற்பட வேண்டும். அரச தலைவர் மீது நம் பிக்கையில்லை. தலைமைஅமைச் சரின் மதிப்பை அதிகரிக்கச்செய்யும் வகையில் பணியாற்ற வேண்டும். 2020ஆம் ஆண்டுக்கு முன்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறி சேனமற்றும்முன்னாள்பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகி யோர் இணையலாம். அவ்விருவ ரும்எமக்குஅச்சுறுத்தலாகஅமைந்து விடுவர். அதற்கு முன்னர் அவ்விரு வருக்கும் ஏதாவது செய்ய வேண் டும். மைத்திரிபாலசிறிசேனமற்றும் கோத்தபாய ஆகியோரைப் பாதாள உலகக் குழுத் தலைவர் ஒருவ ரைக்கொண்டு கொலை செய்ய வேண்டும். அந்தப் பழி புஷ்பராஜ் என்பரின் தலையில் விழும் வகை யில் ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தப் பாதாள உலகக் குழுத்தலை வர்போதைப்பொருளுடன்தொடர்பு பட்டவர்.

அவர் மைத்திரிபால சிறிசேன மற் றும்கோத்தபாயராஜபக்சஆகியோர் களுக்கு எதிரானவர். அவரைப் பயன்படுத்த முடியும். அந்த பாதாள உலகக் குழுத் தலைவர் தற்போது வெளிநாட்டில் உள்ளார். அவருடன் தான் தொடர்பைப் பேணி வருவதா கவும் அப்பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவித்ததாக ஊடகவியலாளர் சந் திப்பில் நாமல் குமார குறிப்பிட்டுள் ளார்.

2015ஆம்ஆண்டுஜனவரிமாதம்8 ஆம் திகதிக்கு பின்னர் ராஜபக்ச குடும்பத்தினர் மற்றும் கூட்டு எதிர்க் கட்சியிலுள்ளவர்களுக்கு எதிராக நட வடிக்கை எடுத்தனர். தற்போது மைத்திரிக்கு எதிராகவும் சதி செய்ய ஆரம்பித்துள்ளனர்.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாளக சில்வாவை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று அரசிடம் கோரிக்கைவிடுக்கிறோம். பொலிஸ் மாஅதிபர்மற்றும்தலைமைஅமைச் சர் ரணில் விக்ரமசிங்கவிடவும்மும் வாக்குமூலம் பெறவேண்டும். நாமல் குமாரவுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் எனவும் அர சைக் கோருகின்றோம்.

இந்த விவகாரத்தை அடிப்படையா கக் கொண்டே இன்று (நேற்றுமுன் தினம்) அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றதாகஅறியக்கிடைத்துள் ளது. நாடு மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உடனடி யாக விசாரணைகளை மேற் கொண்டு சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய வேண்டும். இந்த விவகாரத்தில் நியாயம் கிடைக்கும் வரையில் நாம் பொலிஸ் நடவடிக் கைகளைப்புறக்கணிப்போம்- என் றார். (5,61)

கொலை குற்றச்சாட்டு விசாரணை நடத்துக

பொலிஸ் மா அதிபர் பணிப்பு

கொழும்பு, செப். 15

பயங்கரவாத விசார ணைப் பிரிவின் பணிப்பாளர் நாளக சில்வா மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்துமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர பொலிஸ் சிறப்புப் புலனாய்வுப் பிரிவுக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன மற்றும் கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் மீது கிழக்கு மாகாணத்தில் வைத்து தாக்குதல் நடத்தும் திட்டம் இருந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபரு மான நாளக சில்வா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஊழல் எதிர்ப்புப் படை யணியின் பணிப்பாளர் நாமல் குமார நேற்று முன்தினம் கண்டி பிரதேசத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த குற்றச்சாட்டை முன் வைத்திருந்ததுடன், இதுதொடர்பான ஒலிப்பதி வுகளையும் வெளியிட்டி ருந்தார்.

கிழக்கில் வைத்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மீது தாக்குதல் நடத்தப்பட்டால் அதனை வேறு பக்கம் திருப்பிவிடலாம் என்று நாளக சில்வா கூறியதாக ஊழல் எதிர்ப்பு படைய ணியின் பணிப்பாளர் நாமல் குமார நேற்று நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள குறித்த ஒலிப்பதிவுகள் குறித்தும், நாளக சில்வா மீதும் விசாரணையை ஆரம்பிக்குமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித் துள்ளது.

கடன் பொறி குற்றச்சாட்டிலிருந்து விடுவித்த ரணிலுக்கு சீனா வரவேற்பு

கொழும்பு, செப். 15

சீனாவின் கடன் பொறிக்குள் இலங்கை சிக்கிக் கொள்ளவில்லை என்று இலங்கைத் தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கவெளியிட்டுள்ள கருத்தை, சீனா வரவேற்றுள்ளது.

பீஜிங்கில்நேற்றுமுன்தினம்செய்தியாளர்சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது கருத்து வெளியிட்ட சீன அயலுறவு அமைச்சின் பேச்சாளர், ஜெங் சுவாங், இலங்கை தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கவின்கருத்துவரவேற்புக் குரியது.

இலங்கையைக் கடன்பொறியில் சிக்க வைத்து, அம்பாந்தோட்டைத்துறைமுகத்தைச்சீனாபெற்று விட்டதுஎன்ற'பெயருக்கு'இதுஒருவலுவானமறுப் பாகும்.

இலங்கைக்கான சீனாவின் உதவி, ஒருபோதும் அரசியல் சூழ்நிலைகளின் அடிப்படையிலானது அல்ல.

இலங்கைக்கான நிதி மற்றும் முதலீட்டில் எந்த வொரு அரசியல்சுயஆர்வத்தையும்சீனாகொண் டிருக்கவில்லை.

அணை மற்றும் பாதை வரம்பின் கீழான, சீனா வுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்து ழைப்பு, தனியேஇரண்டுநாடுகளின்மக்களுக்கும் நன்மையளிப்பதுமாத்திரமல்ல, பிராந்தியப்பொரு ளாதாரஅபிவிருத்திமற்றும்இணைந்தசெயற்பாட் டுக்கும் பங்களிப்பதாகும் என்று சீன அயலுறவு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் மைத்திரிக்கு உணவு பரிமாற வேண்டாமாம்

டிலான் எச்சரிக்கை

கொழும்பு, செப். 15

அரசதலைவர்மைத்திரிபால சிறிசேன தலைமை அமைச் சருடையஅலரிமாளிகைக்கு செல்வதாக இருந்தால், வீட்டி லிருந்து உணவுகளை எடுத் துச் செல்லுமாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின்முன்னாள் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தி னம் இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்

கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எந்தவொருகாலத்திலும்சமா தான முறையில் போராட்ட மொன்று நடக்கும் போது மக்களுக்கு விசம் கொடுத்து ஆபத்துவிளைவித்ததுகிடை யாது. பாதுகாப்பு அமைச்ச ராகஅரசதலைவர்இருக்கும் போது பாதுகாப்பு அதிகாரிக ளுக்கு எதிராக முன்னெடுக் கப்படும் நடவடிக்கைகளும் விசம்கொடுப்பதற்கு ஒத்ததா கவே உள்ளது.

இதனாலேயே அரச தலை வரை பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று தெரிவித் துக் கொள்கின்றோம் என் றார்.

20ஆவது திருத்தத்துக்கு எதிராக வாக்களிப்பவர்களுக்கு மலர்மாலை

பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் கோருகிறார்

கொழும்பு, செப்15

நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட் டுள்ள 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக வாக்களிக்குமாறு ஸ்ரீ ஜயவர்த னபுர பல்கலைக்கழகத்தின் வேந் தர் பேராசிரியர் மெதகொட அபய திஸ்ஸ தேரர் வேண்டுகோள் விடுத்துள் ளார். தேசியவாசிகசாலைமண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய பிக்கு புத்திஜீவிகள் அமைப்பின் அமர் வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த திருத்தச் சட்ட மூலத்துக்கு எதிராக பகிரங்கமாகவாக்களிப்பவர்களைமலர் மாலை சூடி வரவேற்கத் தயாராகவிருப் பதாக மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்தார் 13 ஆம் திருத்தச் சட்டத்தி னால் வழங்க முடியாமல் போன பிரிவி னைவாதிகளின் தேவையை அரச தலைவர் முறைமையை ஒழிப்பதன் மூலம்வழங்குவதற்கே20ஆவதுதிருத் தம் முயற்சிசெய்கிறது - என்றார்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

நீதி விடயத்தில் மறைமுக தலையீடும் வேண்டும்

இலங்கையின் நீதித்துறையின் சுயாதீனம் அரசியல் தலையீடுகள் காரணமாகக் கட்டுப்படுத்தப்படுகின்றது என்கிற குற்றச்சாட்டு மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் கடுமையாக இருந்தது. பன்னாட்டு அளவில் இந்தக் குற்றச்சாட்டு தீவிரமானதாக இருந்தது. 2015இல் ஆட்சி மாற்றத்துக்கானகாரணங்களில் அதுவும் மிகமுக்கியமானதொன்றாக முன்வைக்கப்பட்டது. நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்படும் என்று தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் உறுதிமொழியளித்தார்கள்.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் அத்தகையதொரு நிலையை நோக்கி அடியெடுத்து வைக்கப்பட்டமையும் நடந்தது. மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் பதவி நீக்கம் செய்யப்பட்ட தலைமை நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க, மைத்திரி ஆட்சியில் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டமை அத்தகையதொரு நடவடிக்கையே!

இதுபோன்ற சில நடவடிக்கைகளைத் தொடர்ந்தும், நீதித் துறையின் சுயாதீனத்தில் தலையிடமாட்டோம் என்று ஆட்சியாளர்கள் மீண்டும் மீண்டும் வழங்கிய வாக்குறுதிகளை அடுத்தும் இலங்கை நீதித்துறையின் சுயாதீனம் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதான நம்பிக்கை ஏற்பட்டிருந்ததும் உண்மை. அத்தகையதொரு சுயாதீனத்தை நம்பி போர்க் குற்றச்சாட்டு மற்றும் காணாமற்போனோர் விடயங்களில் காரியமாற்ற வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தயாராக இருக்காதபோதும், நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாத்திருப்பதாக இந்த ஆட்சியின் தலைவர்கள் மார்தட்டிக்கொள்ளத் தவறியதில்லை.

ஆனால், தாங்கள் உறுதிப்படுத்தியதாகக் கூறிக்கொள்ளும் நீதித்துறையின் சுயாதீனத்தில் நேரடியாகத் தலையிடாவிட்டாலும், அதன் சுயாதீனத்தை மறைமுகமாகக் கட்டுப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளில் ஆட்சியாளர்கள் இறங்கியிருப்பது விசனத்தையும், வெறுப்புணர்வையும் ஏற்படுத்துகின்றது. கொழும்பில் 5 தமிழ் மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தப்பட்ட வழக்கில் அரச படையினருக்குத் தொடர்பு இருப்பதாகவும், இந்தக் கடத்தல் குற்றச் சந்தேகநபர்களைத் தப்ப வைத்ததில் படை உயர் அதிகாரிகளுக்குத் தொடர்பு இருப்பதாகவும், குற்றப் புலனாய்வுப் பிரிவினரே நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கும் நிலையில், அந்தவிசாரணைகளுக்கு உதவக்கூடிய ஆவணங்களைப் பொலிஸாரிடம் வழங்க வேண்டாம் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார் என்று வெளியாகி இருக்கும் செய்திகள், நீதித்துறையின் சுயாதீனத்தை அவர் மறைமுகமாகக் கட்டுப்படுத்தமுயற்சிக்கின்றார்என்பதையே எடுத்துக் காட்டுகின்றன.

முறையான, தெளிவான, சுயாதீனமான விசாரணைக்கு இடமில்லாமல், நீதித்துறையின் சுயாதீனத்தை ஒருபோதும் பேணிக்காக்கமுடியாது. ஒருகையால் கொடுத்து மறுகையால் பறிப்பது போன்ற அரச தலைவரின் செயலால் நேர்மை யான விசாரணை தடைப்படும், குற்றவாளிகள் தப்பிவிடுவர். இப்படிப்பட்ட ஒரு நீதி விசாரணைப் பொறிமுறையின் மீதும், நீதிச் சுயாதீனத்தின் மீதும் தமிழர்கள் எப்படி நம்பிக்கை கொள்ளமுடியும்? எப்படி உள்ளூர் விசாரணைகளில் நம்பிப் பங்கேற்க முடியும்? எனவேதான் தமிழர் தரப்பிலிருந்து போர்க்குற்றம் உள்ளிட்ட முக்கிய விசாரணைகளுக்கு பன்னாட்டு நீதி விசாரணை மட்டுமே ஏற்புடையது என்கிற வாதம் முன்வைக்கப்படுகின்றது.

அரச தலைவரின் இத்தகைய நிலைப்பாடுகளே தற்போது சுதந்திரக் கட்சியின் தனி அணி, ஆயுத மோதலின்போது காணாமற்போனவர்கள் புலிகளே, அவர்களுக்காகப் படையினரைத் தண்டிக்க முடியாது என்கிற கருத்தை வலியுறுத்துவதற்கு ஏதுவாக அமைந்தது. அரச தலைவர் நீதியை மறைமுகமாகக்கட்டுப்படுத்துவார்என்று தெரிகின்றபோது, இதுபோன்ற தீவிரக் கருத்துக்களைத் தெரிவித்து, மேலும் அழுத்தத்தைக்கொடுப்பதற்கு இனவாதிகள்முன்வருவார்கள் என்பது தெரியாத விடயமல்ல. இதுபோன்ற நம்பிக்கைகளும், நடவடிக்கைகளும் தமிழ் மக்களுக்கு இருக்கும் கொஞ்சநஞ்ச நம்பிக்கையையும் சிதைத்துவிடும். அத்தகைய குரலாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனின், உள்நாட்டு விசாரணை என்பது வெறும் கண்துடைப்பு; அதனால் பன்னாட்டுப் பொறிமுறையே வேண்டும் என்கிற கருத்து.

எனவே, நீதியைக்கட்டுப்படுத்தக்கூடிய, அதன்சுயாதீனத்தைப் பாதிக்கக்கூடிய எத்தகைய நடவடிக்கையிலும் அரச தலைவரும் ஆட்சியாளர்களும் ஈடுபடக்கூடாது. அத்தகையதொரு நிலை உறுதியாகும் வரைக்கும், தமிழ் மக்கள் தொடர்பான விசாரணைகள் அனைத்தும் பன்னாட்டுப் பொறிமுயையூடாகவே மேற்கொள்ளப்படவும் வேண்டும்.

தமிழ் இனத்துக்கு விடிவு வேண்டி தன்னுயிர் ஈந்த தியாக தீபம் திலீபன்

ஈழத் தமிழ் இனத்துக்கான விடிவு வேண்டி, சாத்வீக வழியில் உண்ணா நோன்பி ருந்து உயிர்த்தியாகம் செய்த திலீபன் தமது சாத்வீகப் போராட்டத்தை 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்பித்திருந்தார். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.



மு.ஈழத்தமிழ்மணி

ஈழத்தமிழினத்தின் இனவிடுதலைப் போராட்டத்தில் 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 26ஆம்திகதிவரையான நாள்கள் முக்கியத்துவம் மிக்கவை. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூத்த போராளி திலீபனால் சாத்வீக வழியில் சாகும்வரை உண்ணா நோன்பு முன்னெடுக்கப்பட்டு 12ஆவது நாள் தமிழ் இனத்துக்காக அவர் உயிர்த்தியாகம் செய்த அந்தத் தியாக வரலாற்றுக்குரிய மகோன்னத நாள்களாகும்.

ஆயுதப்போராட்டத்தைக் கையிலெடுத்த விடுதலைப்புலிகள் இயக்கம், பல்லாயிரக்கணக்கான மாவீரர்களை பதிவில் வைத்திருந்தாலும், சாகும் வரை உண்ணாவிரதமிருந்து தமிழ் இனத்துக்காக உயிர்நீத்த வரலாறு என்பது இராசையா பார்த்தீபன் என்ற திலீபனையே சாரும்.

1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி, அதாவது, இற்றைக்கு 31ஆண்டு வருடங்களுக்கு முன்னர், தாம் முன்வைக்கும் ஐந்து அம்ச அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்றிவைக்க இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நல்லூர் வடக்கு வீதியில் சாகும்வரை உண்ணா நோன்பு இருப்பதற்கான முன்னறிவிப்பை இந்திய அரசுக்கு வெளிப்படுத்திவிட்டுதியாகத் தீபம் திலீபன் என்ற போராளி காலை வேளையில் மேடையின் இருக்கையில் அமருகின்றான். ஆயுதப்போராளியாகி, பொறுப்பானதொரு அரசியற் போராளியாகி, இறுதியில் பாரத நாட்டுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்த மகாத்மா காந்தியின் அகிம்சை வழியைப் பின்பற்றி தமிழ் மக்களின் நியாயமான ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தனது உறுதிமிக்க போராட்டத்தை தொடங்குகின்றான்.

தமிழ்க் கடவுளாம் கந்தப் பெருமான் குடிகொண்டிருக்கின்ற நல்லூர் ஆலயத்தின் வடக்கு வீதியில் திலீபன் புன்னகைத்த முகத்துடன் இனத்துக்கான வெற்றி பெருமிதத்துடன் காந்தீய தேசத்துக்கும், அரசுக்கும் சவால் விடுத்து உன்னத இலட்சியப் பயணத்தை ஆரம்பித்து தான் முன்வைத்த ஐந்து அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வேண்டுகிறான்.

1. மீளக் குடியமர்தல் என்ற பெயரில் வடக்கு-கிழக்கில் புதிதாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்.
2. சிறைக் கூடங்களிலும் இராணுவ, பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.
3. அவசர காலச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.
4. ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்டுள்ள ஆயுதங்கள் முற்றாகக் களையப்படல் வேண்டும்.
5. வடக்கு கிழக்கு பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

என்பனவே திலீபன் முன்வைத்த அந்த ஐந்து அம்சக் கோரிக்கைகளாகும்.

அந்தக் கோரிக்கைகள் யாவற்றையும் அகிம்சை வழியில் போராடிப் பெற இயலும் என்ற நம்பிக்கையை திலீபன் வைத்திருந்த போதிலும், இந்திய அரசையும் நம்பத் தயாரற்ற நிலையில் அவனது மனமிருந்தது. தமிழ் மக்களின் உன்னத இலட்சியத்தை அடைவதற்கு தியாகி திலீபன் அகிம்சை வழியில் போராடியபோது காந்தியத் தத்துவத்தை மூச்சுக்கு முந்நூறு தடவை உச்சரிக்கின்ற பாரத தேசம், அகிம்சைப் போராட்டத்தை அறவே கண்டு கொள்ள வேயில்லை; மதிப்பளிக்கவும் இல்லை.

திலீபனது அறப்போராட்டத்துக்கு ஆதரவும் உற்சாகமும் வழங்கிய தமிழ் மக்கள்

அதேவேளை தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு தியாகி திலீபனின் அந்த அறப்போராட்டத்திற்கு தினமும் உரமூட்டிக்கொண்டிருந்தனர். நல்லூர்க் கந்தசுவாமி

> "நான் வாழ்நாள் முழுவதும் நேசித்த என் அன்புக்குரிய மக்களே...! புரட்சிக்குத் தயாராகிவிட்டீர்களா? நான் மீட்க முடியாத இடத்துக்குச் சென்று கொண்டிருக்கின்றேன். நீங்கள் பெருந்தலைவனின் பின்னால் போராடத் தயாராகுங்கள். எனக்கு விடை தாருங்கள். வானத்தில் இருந்து எனது இனத்தின் விடுதலையை நான் பார்ப்பேன். நான் சாகும்போது மகிழ்ச்சியுடன் சாகின்றேன்.
> மக்கள் புரட்சி வெடிக்கட்டும்". என்று அவனது ஆத்மாவின் குரல் தமிழினத்தின் உரிமைக் குரலாக வெளிப்பட்டது.

கோயில் வடக்கு வீதியை நோக்கி நான்கு திசைகளிலிருந்தும் சிறுவர்கள், மாணவர்கள் தொடக்கம் முதியவர்கள் வரை பகலிரவு என்று பாராமல் குறித்த உண்ணா நோன்பு இடம்பெற்ற இடத்தில் கூடியிருந்தனர். அவர்கள் மட்டுமன்றி போராளிகள், தளபதிகள், பொறுப்பாளர்கள் என திலீபனின் போராட்டத்துக்கு ஆதரவு நல்கும் விதத்தில் இயக்க உறுப்பினர்களும் இணைந்திருந்தனர். திலீபனின் அந்த உண்ணா நோன்புப் போராட்டத்தை எப்படியாவது கைவிடச் செய்து முறியடித்துவிட வேண்டும் என்ற அடிப்படையில் அப்போதிருந்த இந்தியத் தூதுவரான ஜே.என்.டிக்ஸிற் மற்றும் இந்திய 'றோ' அமைப்பின் உயரதிகாரிகள், அமைதிப்படையின் உயரதிகாரிகள் முழு முயற்சியிலும் ஈடுபட்டிருந்தனர்.

இரவு நேரத்தில் விடுதலைப்புலிகளின் தலைவரான வே.பிரபாகரன் மேடையில் உண்ணாநோன்பை முன்னெடுத்திருந்த தியாகி திலீபனோடு அருகிலிருந்து உரையாடுவார். ஒரு வாரத்தை எட்டிய நிலையிலும் இந்திய அரசானது திலீபனின் போராட்டத்தையும், ஐந்து அம்சக் கோரிக்கைகளையும் உதாசீனம் செய்து வந்தது. இந்தியாவின் அந்தச் செயலானது தமிழ் மக்களுக்கு எரிச்சலையேற்படுத்தியதுடன் அவர்களைச் சினம் கொள்ளவும் வைத்தது.

உண்ணாநோன்பு மேடையில் இருந்தவாறே தமிழ்மக்களுக்கு வேண்டுகோள் விடுத்த திலீபன்

"நான் வாழ்நாள் முழுவதும் நேசித்த என் அன்புக்குரிய மக்களே...? புரட்சிக்குத் தயாராகிவிட்டீர்களா? நான் மீட்க முடியாத இடத்துக்குச் சென்று கொண்டிருக்கின்றேன். நீங்கள் பெருந்தலைவனின் பின்னால் போராடத் தயாராகுங்கள். எனக்கு விடை தாருங்கள். வானத்தில் இருந்து எனது இனத்தின் விடுதலையை நான் பார்ப்பேன். நான் சாகும்போது மகிழ்ச்சியுடன் சாகின்றேன். மக்கள் புரட்சி வெடிக்கட்டும்". என்று அவனது ஆத்மாவின் குரல் தமிழினத்தின் உரிமைக் குரலாக வெளிப்பட்டது.

நல்லூர் வீதியில் கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் திலீபனது உரைகேட்டுக் கண்ணீர் வடித்தனர். காந்திதேசம் எனப் புகழப்படுகின்ற இந்தியா, திலீபனது போராட்டம் தவறானது எனத் தப்புக்கணக்குப் போட்டது. இந்தியாவின் தேசத் தந்தையான மகாத்மாகாந்தியின் உண்ணா நோன்புப் போராட்டம் எந்த வகையில் குறைந்தது என எண்ணிய இந்தியா, மகாத்மா காந்தி நீர் அருந்தித்தானே நோன்பிருந்தார். திலீபன் நீர்கூட அருந்தாது நோன்பிருப்பது காந்திய வழியா? எனக்கூறி அவமானப்படுத்தியதுடன் ஏளனமும் செய்தது.

திலீபன் உண்ணா நோன்பை உறுதியாகக் கடைப்பிடித்துக் கொண்டிருந்தபோது, இந்தியத் தூதுவரான ஜே.என்.டிக்சிற் அவ்விடத்துக்குச் சென்று நிலைமையை அவதானித்துவிட்டுச் சென்றார். அவரிடமிருந்து எந்தத்தகவலும் வெளிவரவில்லை. இந்திய தேசமானது திலீபனது உண்ணா நோன்புப் போராட்டத்தின் இறுதி நாள்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்ற வேளையில், திலீபனின் அறப்போராட்டத்தைக் கண்டுகொள்ளாது இரக்கமே இல்லாது திலீபன் சாவடையும் நாள்களை எண்ணிக் கொண்டிருந்தது.

உலகத்துக்கே அகிம்சையைப் போதித்த தாகப் பறைசாற்றும் இந்தியாவைப் பின்பற்றி, அதே அகிம்சையை ஆயுதமாக வைத்து தமிழ் மக்களின் பிரச்சினைகளைத்தீர்க்கமுடியும் என விடுதலைப்புலிகள் நம்பினர். அந்த நம்பிக்கையுடன் தான் தமிழர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, விடுதலைப்புலிகளின் தலைமையின் கட்டளைக்கமைவாக, செயல்வடிவம் கொடுப்பதற்கு, அகிம்சைப் போராளியாக திலீபன் முன்வந்தமையானது தமிழ் மக்களின் விடிவுக்கான போராட்டத்தில் தனக்கும் ஒருமுக்கிய பங்கு இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியது.

தனது வாழ்வையே தமிழ் இனத்தின் விடிவுக்காய் அர்ப்பணித்த தியாகி திலீபன்

அகிம்சையின் உன்னத வடிவமாகத் திகழுகின்ற தியாக தீபம் திலீபனின் சொந்த ஊர் ஊரெழுவாகும். சிறுவயதில் தாயாரையிழந்து, சிறுபராயத்திலிருந்து தந்தையின் அரவணைப்பில் வளர்ந்தான். 1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி பிறந்த இராசையா பார்த்தீபன், ஆரம்பக் கல்வியை தமது கிராமப்புற பாடசாலையில் கற்று, பின்னர் உயர்தரக் கல்வி கற்பதற்காக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இணைந்து கொண்டான். கல்வியில் திறமை கொண்ட மாணவனான திலீபன் மருத்துவபீடத்திற்கு தெரிவாகிய நிலையில், அந்த அரிய வாய்ப்பைத் தூக்கியெறிந்துவிட்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டான். படிக்கின்றபோதே அரசியல் நடவடிக்கையிலீடுபட்டிருந்த திலீபன், இயக்கத்தில் சேர்ந்து கொண்டதும் அரசியல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு அப்போதைய யாழ் மாவட்டத் தளபதியான கிட்டுவால் நியமிக்கப்பட்டிருந்தான்.

> 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி, இற்றைக்கு 31 வருடங்களுக்கு முன்னர், தாம் முன்வைக்கும் ஐந்து அம்ச அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்றிவைக்க இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நல்லூர் வடக்கு வீதியில் சாகும்வரை உண்ணா நோன்பு இருப்பதற்கான முன்னறிவிப்பை இந்திய அரசுக்கு வெளிப்படுத்திவிட்டு, தியாகத் தீபம் திலீபன் என்ற போராளி காலை வேளையில் மேடையின் இருக்கையில் அமருகின்றான்.

திலீபனின் பேச்சும், செயலும் விடுதலைக்கு உரமூட்டின. துடிப்பான இளைஞனாக, போராளியாக வலம் வந்தான். யாழ் மாவட்டத்தில் தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமாகியிருந்த போராளியான திலீபன், வடமராட்சிப் பகுதியில் நடைபெற்ற இலங்கை இராணுவத்துடனான நேரடி மோதலில் பலத்த காயத்துக்குள்ளாகி வயிற்றுப் பகுதியிலுள்ள குடல் சிதைந்திருந்தது. சத்திரசிகிச்சைக்குப்பின்னர் வைத்தியர்களின் அறிவுரைக்கிணங்க நடக்கும்படி ஆலோசனை கூறப்பட்டிருந்தது. அதனையும் மீறி தனது அரசியல் நடவடிக்கைகளிலீடுபட்டு வந்தான்.

தியாகம் என்றால் திலீபன், திலீபன் என்றால் தியாகம் என்று கூறுகின்ற அளவுக்கு அவன் மேற்கொண்ட போராட்டமானது, அதி உச்சத்தைத் தொட்டு நின்றது. 12நாள்களாக உண்ணா நோன்பிருந்து தியாகத் தீயில் ஆகுதியான திலீபனின் நாமத்தை இன்றும் ஒவ்வொரு தமிழ் மகனும் உச்சரிக்கின்றபோது எமது உடம்பிலுள்ள நரம்புகள் சிலிர்த்து நிற்கும். 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி சனிக்கிழமையன்று முற்பகல் 10.48 மணியளவில், தான் உறுதியாகப் பின்பற்றிய கொள்கைகளை காற்றிலே பறக்கவிடாமல், மண்ணிலே புதையவிடாமல், கண்ணீரில் கரையவிடாமல் தமிழ் மக்களிடம் கொடுத்துவிட்டு நல்லூரான் வீதியில் இவ்வுலக வாழ்க்கையிலிருந்து தியாகி திலீபன் விடைபெற்றுக் கொண்டான்.

திலீபனின் தியாகத்தை நினைவுகூரும் வகையில் திலீபன் உண்ணா நோன்பை ஆரம்பித்த செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் திலீபன் உயிர்த் தியாகம் செய்த நாள்வரை திலீபனது தமிழ்மக்களுக்கான தியாகத்தை தமிழர் தாயகம் உட்பட புலம் பெயர்ந்து வாழுகின்ற தமிழர்களும் ஒன்று சேர்ந்து நினைவு கூர்கிறார்கள்.

திலீபன் வகுத்தது பாதையா...? சின்ன வயதில் இது தேவையா...? என்ற உணர்ச்சிக் கவிஞன் ஆனந்தனின் வரிகள் காதில் ரீங்கார மிட்டுக் கொண்டிருக்கின்றன. இனவிடுதலைக்காக ஆயுதம் ஏந்தியவன்; அகிம்சை வழியில் தனக்கு நிகர் தானே என்பதை தமிழுலகத்திற்கும் இந்தியாவுக்கும் பறைசாற்றி உயிராயுதம் ஏந்தியவன்; அந்தப் பார்த்தீபன் இன்றும் தீராத பசியோடு இருக்கின்றான். உறுதியின் உறைவிடம் தியாக தீபம் திலீபனை ஒரு கணமாவது நினைவில் இருத்தி மனதார நினைவு கூரவேண்டிய வரலாற்றுக் கடமை எமது தமிழ்மக்களுக்கு உண்டு.

ஆசிரியருக்கான கடிதம்

புரிந்துணர்வுடன் செயற்படுவார்களா?

'கெடுகுடி சொற் கேளாது' என்று தமிழில் பழமொழி ஒன்றுண்டு. தற்போதைய சூழலில் வாகனச் சாரதிகள் சிலருக்கு எப்படித்தான் விழிப்புணர்வு ஏற்படுத்தி துண்டுப்பிரசுரங்கள் மூலம் நல்வழிப்படுத்த முயன்றாலும், அவர்கள் செவிப்புலன் அற்றவர்கள்போல நடப்பது வேதனைதான்.

கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலய கொடியேற்ற நாள். கொடிகாமம்- பருத்தித்துறை முள்ளி வீதியால் வழமைக்கு மாறாக பயணிகள் மற்றும் அடியார்கள் பெருமளவில் பயணிப்பது வழமை. அதிலும் வேட்டி சால்வையுடன், நெற்றியில் விபூதி, பொட்டு இட்டுச் செல்லும் பக்தர்களைக் கண்டவுடன் மனதுக்குப் பெரிய சந்தோசம்தான். ஆனால் ஒரு சிலரின் (அடியார்களின்) செயற்பாடுகள் மனத்துக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தின. கொடியேற்றத் திருவிழா அன்றே ஆலயம் தானே, என்று சில மோட்டார் சைக்கிள்களில் மூன்றுபேர் பயணித்தால் ஒருவர் மட்டுமே தலைக்கவசம் அணிந்து பயணிக்கிறார். அதைவிட இன்னொரு சம்பவத்தையும் இந்த வீதியால் சென்ற என்னால் அவதானிக்க முடிந்தது.

இரு மோட்டார் சைக்கிள்களில் பயணித்தவர்கள் வீதியை ஆக்கிரமித்து தமது இரு கைகளையும் அகல விரித்தவாறு தலைக்கவசம்கூட அணியாமல் பயணிப்பது எவ்வளவு ஆபத்து என இவர்கள் எப்போதுதான் உணர்வார்களோ? இப்படிப்பட்ட பிரயாணத்தால் தாமும் பாதிக்கப்பட்டு, வீதியால் பயணிக்கும் அப்பாவிப் பொதுமக்களும், திறமையான வாகனச் சாரதிகளும் பாதிக்கப்படுவர் என்பதை இப்படிப்பட்ட வாகனம் ஓட்டுநர்கள் புரிந்து கொள்வார்களா? தற்போது தினமும் பத்திரிகைகளை காலையில் கையில் எடுத்தால், விபத்தில் சாவு என்று செய்திகள் பெரும்பாலும் தவறுவதில்லை. மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்கள் சிலர் தலைக்கவசத்தை மோட்டார் சைக்கிளில் தொங்கவிட்ட நிலையில் பயணித்து, பொலிஸாரைக் கண்டதும் உடனே அவற்றை அணிவதையும் காணமுடிகிறது. தலைக்கவசம் உண்மையிலே எவரது பாதுகாப்புக்கு? மோட்டார் சைக்கிள் ஓட்டுபவருக்கா அல்லது பொலிஸாருக்கா? இப்படியான ஒருசில வாகனச் சாரதிகளும், மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்களும் இப்படியான சிறு குற்றத்துக்காக தாம் வியர்வை சிந்தி உழைத்த பணத்தைக் குற்றமாகச் செலுத்தி, குற்றவாளி என்ற அநீதியான பெயரை ஏன்தான் கேட்கிறார்களோ? முன்னோர் சொன்ன ஒரு பழமொழி 'கெடுகுடி சொற்கேளாது' என்பதாகும். மனித வாழ்க்கை உன்னதமானது.

ஒருபுறம் போரில் வீரவரலாறு படைத்த மாவீரர்கள் பல ஆயிரக்கணக்கில், ஏதுமறியாத அப்பாவிகள் செல்லடி, விமானத் தாக்குதலால் சாவடைந்தவர்கள் இன்னொரு புறமும், தற்போது போர்ச் சூழல் இல்லாத நிலையில் இயற்கை மரணம் முன்னைய இழப்புக்களை விஞ்சும் அளவுக்கு, அநியாயச் சாவுகளால் தவறான முடிவெடுப்போர்*மறுபுறமுமாக இருக்கும் போது, ஒருசில வாகன ஓட்டுநர்கள் தாமும் தமது பெறுமதியான உயிரைப் பலிகொடுத்து ஏதுமறியாத நிலையில் வீதியால் செல்லும் பிரயாணிகளைக் காயப்படுத்தவும், உயிரைப் போக்கவும் முயல்கின்றனர். தவறை எவராது மனச் சாட்சியுள்ளவர்கள் தட்டிக் கேட்டால், அவர்களுக்கும் இவர்களாலேயே தண்டனை கிடைக்கும்.

இது தற்போது 2009இற்குப்பின் தமிழினத்துக்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய சாபக்கேடு. இப்படிப்பட்ட தவறான பாதையில் பயணிக்கும் எமது சமூகத்தை நல்வழிப்படுத்த, நல்லதொரு கட்டுக்கோப்புடைய சமூக நலன் கருதிச் செயற்படும் நிர்வாகம் எப்போதுதான் அமையப் போகிறதோ?

அ.அன்பு, வரணியூர்

"ஐ.எஸ்.ஐ. தான் உலகின் சிறந்த உளவுத்துறை, எங்களது முதல் வரிசைப் பாதுகாப்பும் அதுவே"

பாகிஸ்தானின் புதிய தலைமை அமைச்சர் பெருமிதம்

இஸ்லாமபாத்.செப்.15

பதவிஏற்றபின்பு ஐ.எஸ் ஐ. தலைமைச் செயலகத்தை முதன் முதலாகப் பார்வையிட்ட பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான், 'ஐ.எஸ்.ஐ உலகிலேயே சிறந்த உளவு அமைப்பு' என்றும் அதுவே தங்களது முதல்வரிசைப் பாதுகாப்பு என்றும் கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் இண்ரெர் சேர்வீஸஸ் இண்ரெலிஜென்ஸ் என்பதுதான் 'ஐ.எஸ்.ஐ' எனச் சுருக்கமாக அழைக்கப்படுகிறது. அதன் அலுவலகத்துக்கு இம்ரான் கான் தன்னுடைய அமைச்சரவை உறுப்பினர்களுடன் சென்றிருந்தபோது, ஐ.எஸ்.ஐ. அதிகாரிகள் இம்ரானிடம் அவர்களது பல்வேறு பாதுகாப்புத் திட்டங்களைப் பற்றி விளக்கினர். பின்னர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில்,



''பாகிஸ்தான் தலைமை அமைச்சர் ஐ.எஸ்.ஐ. தேசப்பாதுகாப்புக்கு ஆற்றும் சேவையைப் பாராட்டியுள்ளார், குறிப்பாகப் பயங்கரவாத எதிர்ப்புச் செயல்பாடுகளில் ஐ.எஸ்.ஐ. யின் பாராட்டுக்குரிய செயல்களை விதந்தோதினார். மேலும் ஐ.எஸ்.ஐ தான் நம் நாட்டின் முதல்வரிசை பாதுகாப்பும் ஆகும். மேலும் உலகிலேயே தலைசிறந்த உளவு அமைப்பும் இதுவே என்று இம்ரான் பாராட்டினார்'' என்று குறிப்பிட்டுள்ளது.

இம்ரான் கான் பாகிஸ்தான் இராணுவத்தின் கைப்பொம்மை என்று பலரும் விமர்சித்து வரும் நிலையிலும், எல்லைதாண்டிய பயங்கரவாதத்துக்கு முக்கிய காரணமே ஐ.எஸ்.ஐ தான் என்று அதன் அயல்நாடான இந்தியா குற்றம் சாட்டும் நிலையிலும் உலகில் தலை சிறந்த உளவு அமைப்பு அது என்று இம்ரான் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

73ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த பாறை ஓவியம்

கேப்டவுன்.செப்.15

மனித குலத்தின் மிகப் பழமையான ஓவியத்தைத் தென்னாபிரிக்காவில், கண்டெடுக்கப்பட்ட மிகச் சிறிய பாறைத் துண்டின் மீது கண்டறிந்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். கிட்டத்தட்ட 73ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகக் கருதப்படும் இந்த ஓவியம், ஒரு கல்லின் மீது குறுக்குக்கோடு போன்று சிவப்பு நிறக் களிமண் கலவையைக் கொண்டு வரையப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் கேப்டவுன் நகருக்குக் கிழக்கே சுமார் 300கிலோ மீற்றர்கள் தொலைவில் அமைந்துள்ள 'ப்லோம்போஸ்' குகையில் (தெற்குக் கடலோரப் பகுதி) இந்தப் பாறை ஓவியம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட '#'வடிவில் காணப்படும் அந்த ஓவியத்தின் சிறு துண்டைக் கண்டறிந்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தக் கண்டுபிடிப்பு மனித குலத்தின் முந்தைய மனிதர்களின் அறிவாற்றலுக்கு ஒரு முக்கிய உதாரணம் என்று ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் பல்வேறு இடங்களில் பழமையான ஓவியங்களை ஆய்வாளர்கள் கண்டறிந்தாலும், தற்போது கண்டறியப்பட்டுள்ள இந்த ஓவியம்தான் ஆதிகால அரூப ஓவியம் என்று 'நேச்சர்' சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாறையின் மீது இந்த ஓவியத்தை வரைவதற்கு 'களிமண்ணால் செய்யப்பட்ட நிறமியை வண்ணம் தீட்டும் கோல்' கொண்டு பயன்படுத்தியிருப்பதாக அந்தக் கட்டுரையில் மேலும் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

இந்தக் குகையில் சிவப்பு நிறக் களிமண்ணால் சுற்றப்பட்ட மணிகள், செதுக்கப்பட்ட களிமண் துண்டுகள் ஆகியனவும், பழமையான சாயம் தயாரிக்கும் தொகுப்பும் கண்டறியப்பட்டுள்ளது. ஹோமோ செப்பியன்ஸ் என்றழைக்கப்படும் தற்கால மனிதர்கள், தற்போதைய ஆபிரிக்காவில் 3 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதாகப் பல்வேறு ஆராய்ச்சிகளின் முடிவில் கூறப்பட்டிருப்பது பற்றியும் ஆய்வாளர்கள் ஆய்வு செய்து வருகிறார்கள்.



ரஷ்யா - சீ... இராணுவ...

அதிர்ச்சியில் உலக...

மொஸ்கோ.செப்.15

ரஷ்யாவும், சீனாவும் கூட்டாக இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டிருப்பது ஐரோப்பியா உள்ளிட்ட உலக நாடுகளை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலுள்ள செபீரியா மாகாணத்தின் கிழக்குப் பகுதியில் 'வோஸ்டாக் 2018' என்ற பெயரில் ரஷ்யா இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. இந்தக் கூட்டு இராணுவப் பயிற்சி செப்டம்பர் 11 முதல் 17 வரை நடக்கிறது. இதில் ரஷ்யாவைச் சேர்ந்த 3 இலட்சத்துக்கும் அதிகமான இராணுவச் சிப்பாய்கள் கலந்து கொண்டனர். ரஷ்யா...

இந்த இராணுவப் பயிற்சியி... பங்கேற்றுள்ளதுதான் தற்... நாடுகளிடையே ஒருவித பத... படுத்தியுள்ளது.

சீனாவுடன் இணைந்து ர... யுள்ள இந்த இராணுவப் பயி... காவுக்குப் பதிலடியாக இருந்த... மற்றும் ரஷ்யா இணைந்து ... ளுக்குத் தங்கள் பலத்தை ... வகையிலேயே குறித்த இரா... சியை முன்னெடுத்துள்ளதா... வல்லுநர்கள் தெரிவித்துள்ள...

60ஆண்டுகளுக்கு பிறகு கொலையை ஏற்றது பிரான்ஸ்

பாரீஸ்.செப்.15

60ஆண்டுகளுக்கு முன்பு, அல்ஜீரியாவைத் தாங்கள் காலனியாதிக்கத்தின் கீழ் வைத்திருந்தபோது அந்த நாட்டைச் சேர்ந்த 'மாரைஸ் ஆதீன்' எனும் கொம்யூனிஸ்ட் ஒருவரை, சித்திரவதை செய்து கொலை செய்ததைப் பிரான்ஸ் அரசு தற்போது ஏற்றுக் கொண்டுள்ளது.

இதைப் பிரான்ஸ் அதிபர் எம்மானுவேல் மக்ரோங் தெரிவித்துள்ளார். 1957ஆம் ஆண்டில் கைதானபோது 25வயதாகியிருந்த ஆதீன், அப்போது அல்ஜைர்ஸ் பல்கலைக்கழகத்தில் ஒரு கணித விரிவுரையாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார்.

அதன்போதே அவரைப் பிரான்ஸ் ஆட்சியாளர்கள் சிறைப்பிடித்துச் சித்திரவதைக்கு உட்படுத்திக் கொலை செய்தார்கள். ஏழு ஆண்டுகள் கடுமையான போருக்குப் பிறகு 1962இல் அல்ஜீரியா பிரான்ஸ் இடமிருந்து விடுதலை பெற்றது குறிப்பிடத்தக்கது.

ீனா கூட்டு
வப் பயிற்சி
லக நாடுகள்

னர். ரஷ்யா நடத்தியுள்ள
ப் பயிற்சியில் சீனாவும்
தான் தற்போது உலக
ருவித பதற்றத்தை ஏற்

ணைந்து ரஷ்யா நடத்தி
ணுவப் பயிற்சி அமெரிக்
பாக இருந்தாலும், சீனா
ணைந்து உலக நாடுக
பலத்தை நிரூபிக்கும்
றித்த இராணுவப் பயிற்
த்துள்ளதாக இராணுவ
ிவித்துள்ளனர்.

இதுகுறித்து சீனாவின் தரப்பால் வெளியி
டப்பட்டிருக்கிற அறிக்கையில், "இந்தக்
கூட்டு இராணுவப் பயிற்சியின் நோக்கம்,
பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள்
மற்றும் ரஷ்யா - சீனா இடையே பாது
காப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவது
தொடர்பாகப் பரஸ்பர நம்பிக்கையாக
நடத்தப்பட்டது' என்று குறிப்பிடப்பட்
டுள்ளது. ஆனாலும் இதில் பல உள்நோக்
கங்கள் இல்லாமலில்லை என்பதாலேயே
உலக நாடுகள் அனைத்தும் இந்தக் கூட்
டுப் பயிற்சி குறித்து அதிகம் விமர்சித்து
வருகின்றன.



அமெரிக்காவில் புளோரன்ஸ் புயல்

கரோலினா.செப்.15
அமெரிக்காவின் கிழக்குக் கட
லோரப் பகுதிகளை 'புளோ
ரன்ஸ்' சூறாவளி நேற்றுக்
காலைமுதல் தாக்கத் தொடங்கி
யுள்ளது.
வடக்கு மற்றும் தெற்குக் கரோ
லினா மாகாணங்களின் உட்பு
றங்களை நோக்கி இந்தச் சூறா
வளி மணிக்கு 150கிலோ மீற்றர்
கள் வேகத்தில் வீசியிருந்தது.
புளோரன்ஸ் சூறாவளி அதிக
எண்ணிக்கையிலான மக்க
ளின் உயிர்களைக் காவு கொள்
ளலாம் என்று அந்த நாட்டு அதி
காரிகள் ஏற்கனவே எச்சரித்தி
ருந்தனர். இதனால், வியாழக்
கிழமையன்று இரவு முதல்,
வீடுகளில் இருந்து வெளியே
றிய ஆயிரக்கணக்கான மக்கள்
நிவாரண முகாம்களில் தஞ்சம
டைந்துள்ளனர்.
வடக்குக் கரோலினா, தெற்கு
கரோலினா மற்றும் வேர்ஜீ
னியா ஆகிய மாகாணங்களில்
வசிக்கும் 1.7 மில்லியன் மக்க
ளைப் பாதுகாப்பான இடங்க
ளுக்குச் சென்று தஞ்சம்புகுமாறு
அமெரிக்கா அரசு ஏலவே அறி
வித்தல் விடுத்திருந்தது.
தற்போதுவரை ஒரு லட்சத்துக்
கும் மேலான வீடுகளில் மின்
இணைப்புச் சேதமடைந்து,
துண்டிக்கப்பட்டுள்ளது.
நிலைமை இன்னும் மோசமாக
லாம் என்று கணிக்கப்பட்டுள்
ளது. உட்புறங்களில் இன்னு
மின்னும் பேரழிவையும் வெள்
ளத்தையும் இந்தச் சூறாவளி
உண்டாக்கும் என்று அமெரிக்
காவின் மத்திய அவசரகால
நிலையம் கூறுகின்றது.
வடக்குக் கரோலினா மாகா
ணத்தில் ஏற்கனவே பலத்த
காற்று மற்றும் மழையால்
அங்கு வெள்ளம் ஏற்படத்
தொடங்கியுள்ளது. மணிக்கு
சுமார் 250கிலோ மீற்றர்கள்
வேகத்தில் வீசுகின்ற இந்தச்
சூறாவளி, நேற்றுக் காலை
வரை தெற்கு கரோலினாவின்
மைர்ட்டில் கடற்கரைப் பகுதி
யில்மையம்கொண்டிருந்தமை
குறிப்பிடத்தக்கது.

ஜெயலலிதாவின் இறப்புக் குறித்த சர்ச்சைக்கு விரைவில் பதில்?

பெங்களூர்.செப்.15
தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் இறப்புத் தொடர் பாக, ஒரு வருடமாக விசாரணைகள் நடந்து வருகின்றன. அதன் இறுதிக் கட்டமாகப் பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலாவிடம் நேரடியாக விசாரணை நடத்த முடிவு செய்துள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.
மேலும், துணை முதலமைச்சர் பன் னீர்ச் செல்வம், சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர், மின்துறை அமைச்சர் தங்கமணி, உள்ளாட்சித் துறை அமைச்சர் வேலுமணி ஆகி யோருக்கும் இது தொடர்பாக அழைப்பு அனுப்பி விசாரணைக்கு அழைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் ஜெயலலிதாவின் இறப்புக் குறித்த சர்ச்சைக்கு விரைவில் பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகி றது. அத்துடன் ஜெயலலிதாவின் இறப்புக் குறித்து விசாரிப்பதற்குப் பிரத்தியோகமாக நிறுவப்பட்டுள்ள குறித்த விசாரணைக் குழுவின் பத விக்காலம், ஒக்ரோபர் 24ஆம் திகதி யுடன் நிறைவடைய, இருக்கின் றமை குறிப்பிடத்தக்கது.

விமானத் துறையில் பெண்கள்! சவூதி அரேபியாவின் அடுத்த நகர்வு

ரியாத்.செப்.15
முதல் முறையாகப் பெண்களை இணை விமா னிகளாகவும், விமான ஊழியர்களாகவும் பணி யில் அமர்த்த உள்ளது சவூதி - ரியாத்தைச் சேர்ந்த விமான நிறுவனம் ஒன்று. 'வ்ப்ளைனஸ்' எனும் விமான நிறுவனம் இந்தப் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி யுள்ளது.
இதுகுறித்துச் செய்தி வெளியிட்டுள்ளது 'அல் ஜசீரா' செய்தி நிறுவனம். "நாட்டின் மாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கும் சவூதிப் பெண்களுக்கு அதிகாரமளிக்க வ்ப்ளைனஸ் நிறுவனம் விரும் புகிறது. அந்த நிறுவனத்தின் இணை விமானி கள் மற்றும் பணிப்பெண்களின் வேலைக்காக இதுவரை சுமார் ஆயிரம் வரையான சவூதிப் பெண்கள் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் பொருத்தமானவர்கள் வேலைக்குத் தெரிவு செய்யப்படுவார்கள். சவூதியில் விமானத்துறையில் வேலை பார்க்க பெண்க ளுக்குத் தடை எதுவும் விதிக்கப்படவில்லை. எனினும் அத்தகைய வேலைகளில் பிலிப் பைன்ஸ் உள்ளிட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த பெண்களே அதிகம் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலை இனி மெல்ல மாறும்" என்று அது தெரி வித்துள்ளது.
சவூதி அரேபியாவில் பெண்கள் கார் ஓட்டுவ தற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி, 2017ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சவூதி மன்னர் சல்மான் பின் அப்துலாஜிஸ் அல் சவுத் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வீடு களவு போய்விட்டது!

நியூசிலாந்து,செப்.15
நம்பமுயாது ஆனால் உண்மை. ஒரு வீடுகளவாடப்பட்டுள்ளது. எத்தனையோ விதமான களவுகள் பற்றி நாள்தோறும் நாங்கள் பல செய்திகளைக் கேள்விப்ப டுகிறோம். பத்திரிகைகளில் வாசிக்கி றோம். தொலைக்காட்சிகளில் பார்க்கி றோம். ஆனால் ஒரு வீடே களவாடப்பட் டது பற்றி எப்போதாவது கேள்விப்பட்டி ருக்கிறீர்களா? ஆம்! நியூசிலாந்தில்தான் இந்த விசித்திரமான களவு இடம்பெற் றுள்ளது. களவாடப்பட்டுள்ள வீட்டின் உரிமையாளரான பல்துச்சி என்ற பெண் பொலிசாரின் உதவியை நாடி யுள்ளார்.
இந்தப் பெண்மணியின் கணவர் தனது மனைவிக்குப் பரிசாகக் கொடுப்பதற் காக 7.2மீற்றர் நீளமும் 2.4மீற்றர் அகலமும் கொண்ட இந்தச் சிறிய வீட்டை, இழுத்துச் செல்லக்கூடிய வகை யில் சக்கரங்கள் கொண்ட வண்டியின் மேலே அமைத்துள்ளார். இன்னும் குளியல் அறையும் சமையல் அறையும் அதில் அமைக்கப்படவுள்ள நிலையில் வீடு கட்டும் வேலைகள் முடிவடையாமல் இருந்திருக்கின்றன. இந்தநிலையில்தான் குறிப்பிட்ட வீடு களவு போயுள்ளது.





வெளியாகியது 2.0 படத்தின் முன்னோட்டக் காணொலி

இயக்குநர் ஷங்கரின் இயக்கத்தில் ரஜினி நடித்துள்ள 2.0 படத்தின் முன்னோட்டக் காணொலி வெளியிடப்பட்டிருக்கிறது.

ஷங்கர்- ரஜினி கூட்டணியில் பிரமாண்டமாக உருவாகி வருகிறது 2.0 திரைப்படம். 2010ஆம் ஆண்டு வெளியான எந்திரன் படத்தின் இரண்டாம்பாகமாகஉருவாகிவரும்இந்தப்படத்துக்குஉலகஅளவில் எதிர்பார்ப்புக் கூடியிருக்கிறது. முழுக்க முழுக்க முப்பரிமாணத்தில் இது படமாக்கப்பட்டுள்ளது. இந்தப் படம், நவம்பர் 29ஆம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டுதொடங்கிய படத்தின்வேலைகள், தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கின்றன. ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ள இந்தப் படத்தை லைகா நிறுவனம் தயாரித்துள்ளது. உலகின் பல்வேறுநாடுகளைச்சேர்ந்த 3 ஆயிரத்துக்கும்மேற்பட்ட கலைஞர்களின் உழைப்பில் 2.0 படம் உருப்பெற்றிருக்கிறது.

இந்த நிலையில், படத்தின்முன்னோட்டக் காணொலி நேற்று முன்தினம்வெளியிடப்பட்டது. இந்தபடம்ரூ.542கோடிசெலவில்தயாராகி இருப்பதாகவும்கூறப்படுகிறது.

சுடோக்கு

என் விளையாட்டு

1	6		7	8				
7		4						
	2	9	4					
5		6	1					
8				3				4
					6	2		5
					4	1	5	
						9		3
				9	3		6	7

நேற்றைய விடை

3	9	7	8	5	2	4	1	6
5	2	8	6	1	4	3	7	9
1	6	4	7	3	9	2	5	8
9	3	1	5	4	8	6	2	7
4	8	6	3	2	7	5	9	1
2	7	5	9	6	1	8	4	3
7	1	2	4	8	3	9	6	5
8	5	9	2	7	6	1	3	4
6	4	3	1	9	5	7	8	2



சோகம் வேண்டாம்.. மகிழ்ச்சியாக இருங்கள்

ஆப்கானிஸ்தான் சார்லி சாப்ளின்!

பயங்கரவாதிகளின் தாக்குதலால் கடும் சேதம் கண்டுள்ள ஆப்கானிஸ்தான் மக்களை மகிழ்வித்துக்கொண்டிருக்கிறார் சார்லி சாப்ளின். 'சார்லி சாப்ளின்' என்ற பெயரைச்சொன்னாலே போதும், அனைவரது முகத்திலும் குறும் புன்னகை தோன்றும். நகைச்சுவை உலகின் பிதாமகன் என்று அனைவராலும் அறியப்பட்டவர். காலங்கள் கடந்து இன்றும் நம் எல்லோரின்

புன்னகையில் வாழ்பவர். அந்தச் சார்லி சாப்ளினைப் போன்றுவேடமிட்டு,தற்போதுஆப்கானிஸ்தான்மக்களை மகிழ்வித்துவருகிறார், கரீம் ஆசீர். மக்கள் அதிகம் கூடும் பகுதிகளான பூங்காக்கள், பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் சார்லி சாப்ளின் போலவே வேடமிட்டு, வேடிக்கை நிகழ்ச்சிகளை நடத்திவருகிறார். அதேபோல, மாணவர்கள்மத்தியிலும்நிகழ்ச்சிகளைநடத்திவருகிறார். மதத்துக்குஎதிரானநடவடிக்கையில்ஈடுபடுவதாகப்பயங்கரவாதிகள் இவருக்குக் கொலை மிரட்டல் விடுத்து வருகிறார்கள்.

இருப்பினும், பயத்தை ஒதுக்கிவைத்துவிட்டு, ஆப்கான் மக்களை மகிழ்ச்சிப்படுத்தி வருகிறார். "ஆப்கான் மக்கள் துயரங்களை மறந்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். இதுவே எனது குறிக்கோள்" என்று கூறுகிறார்.

நாளை

16.09.2018

ஞாயிற்றுக்கிழமை

ஆவணி 31

திதி: ஸப்தமி மு.இ. 7.40 வரை
நட்சத்திரம்: அனுசம் மு.ப. 7.32
சுபநேரம்: 9.03 – 10.33 வரை
ராகுகாலம்: 4.33– 6.03 வரை

இன்றைய நாள்

மேடம்: சமயோசிதமாகச் செயல் பட்டு முன்னேறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. இலாபம் அதிகரிக்கும். உறவினர் மத்தியில் அன்பும், பாசமும் வளரும்.

இடபம்: சமூகத்தில் மதிப்பு உயரும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள் பணியிலக்கை விரைந்து முடிப்பர். பெண்கள் குடும்பத்துடன் விருந்து விழாவில் பங்கேற்பர்.

மிதுனம்: நண்பரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுசூலத்தைப் பாதுகாக்கவும். பெண்கள் சிக்கனமாக செலவு செய்வது நல்லது.

கடகம்: திட்டமிட்ட பணியில் திடீர் மாற்றம்ஏற்படலாம். தொழில், வியாபாரம் சார்ந்த குறையைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். பணவரவை விடச் செலவு அதிகரிக்கும்.

சிங்கம்: பெரியவர்களின் வழிகாட்டுதலை மதித்து செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் கூடுதல் வளர்ச்சி பெறும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

கன்னி: அறிமுகம் இல்லாதவர்களிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் சார்ந்த குறைகளை உடனுக்குடன் சரிசெய்வது நல்லது. சேமிப்புப் பணம் திடீர் செலவால் கரையும்.

துலாம்: அன்பால் பிறரை அரவணைப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். ஆதாயம் உயரும். பணியாளர்கள் விண்ணப்பித்தகடனுதவிகிடைக்கும்.

விருச்சிகம்: செயலின் விளைவை உணர்ந்து நடப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.சராசரி பணவரவு கிடைக்கும்.

தனுசு: சமூகத்தில் உயரிய மதிப்புக் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை செழிக்கும். லாபம் பெருகும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர்.

மகரம்: மனதில் புத்துணர்வு அதிகரிக்கும். அதிக உழைப்பால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி காண்பீர்கள். உபரி வருமானம் கிடைக்கும்.

கும்பம்: தன்னம்பிக்கையுடன் செயல்படுவது அவசியம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். உபரி பணவரவால் சேமிப்பு கூடும்.

மீனம்: பேச்சு, செயலில் குளறுபடி ஏற்படலாம். தொடர்பில்லாத பணியை ஏற்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும்.

ஆத்திரமும் அவசரமும் ஆகாது

எந்தக் காரியத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டும். அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்கக் கூடாது. பதறாத காரியம் சிதறாது என்பது பழமொழி. பதறிய காரியம் சிதறுவது திண்ணம். கீரிப்பிள்ளையை அவசரப்பட்டு முன்யோசனையின்றிக் கொன்ற பெண்மணியின் செயல் அவசரப்பட்ட காரியம் எத்தகைய தீங்கு பயக்குமென்பதை நன்கு உணர்த்தும். 'எண்ணித் துணிக கருமம்' என்பது வள்ளுவர் வாக்கு. தூக்கி வினை செய் என்று ஆத்திசூடி கூறுகிறது.

எந்தக் காரியத்தையும் சேர்ந்து புரிய வேண்டும். தீரச் சிந்தித்துச் செய்ய வேண்டும். ஆத்திரத்தில் அறிவு ழந்து விடக் கூடாது. ஆத்திரம் கண்ணை மறைக் கும். ஆத்திரம் கொட்டிக் கவிழ்த்துவிடும். அவசரமும் ஆகாது. எதனைச் செய்வதாயினும் ஒரு முறைக்கு இருமுறை எண்ணிப் பார்க்க வேண்டும். பின்னர் செய்ய வேண்டும். இப்படிச் செய்யும் காரியங்களுக்கு ஒரு நாளும் பழுது வராது.

பதறாத காரியம் சிதறாது

இரு படங்களிடையே உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடிப்போம்



தான் அறியாத விடயம் தன் தலைக்கு கேடு

ஒரு ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவருக்கு வயதாகிவிட்டதால், எந்தக் காரியத்தை முன்னிட்டும் அவர் வெளியூர்களுக்குப் போவதில்லை. அவ ருக்குப் பதிலாக அவருடைய இரண்டு மகன்மாரும் போய் வருவார்கள். மூத் தவன், கடந்த பத்து வருடங்களாக கல் யாணங்களுக்கு மட்டும் போய் வந்து கொண்டிருந்தான். அதனால், அவ னுக்கு 'கல்யாண வீட்டுத் தம்பி' என்று பெயர் வந்தது.

இளையவன் கடந்த பத்து வருடகால மாக துக்க காரியங்களுக்கு மட்டும் போய் வந்து கொண்டிருந்தான். அத னால் அவனுக்கு 'துக்கவீட்டுத் தம்பி' என்று பெயர் வந்தது.

மூத்தவன் துக்க வீட்டைப் பார்த்தது கூட இல்லை. இளையவன் கல்யாண வீட் டைக் கனவிலும் கூடப் பார்த்ததில்லை. ஒருநாள் இருவரும் வழக்கத்தை மாற்ற முற்பட்டார்கள். மூத்தவன் துக்க வீடு எப்படி இருக்கும் என்பதைப் பார்க்க ஆசைப்பட்டான். அப்படியே தம்பிக்கும் கல்யாண வீட்டைப் பார்க்க ஒரே ஆவல்.

ஒரேகாலத்தில் தந்தைக்கு இரு வெவ் வேறு ஊர்களிலிருந்து கடிதங்கள் இரண்டு வந்தன. ஒன்று திருமண அழைப்பு, மற்றையது துக்கவீட்டு செய்தி. புதிய ஏற்பாட்டின்படி, வழமைக்கு மாறா கத் தம்பி திருமண வீட்டுக்கும் அண் ணன் துக்க வீட்டுக்கும் சென்றனர். துக்க வீட்டில் நுழைந்த அண்ணன் "என்ன இப்படி அழுகையும் புலம்பலு மாக கிடக்கிறீர்கள். சீ, நல்ல நாளில் இது என்ன புதுவழக்கம்.

சந்தோசமாக வந்து என்னுடன் உட்கா ருங்கள். இன்று யாருடைய சதிர்க் கச்சேரி (நாட்டியம்) நடக்கப் போகிறது? எந்த ஊர் மேளம்? என்று சொல்லி முடிக் கும் முன்பே அங்கிருந்தவர்கள் அடித்து உதைத்து அண்ணனை வெளியே தள் ளிவிட்டார்கள். நடப்பது என்னவென்று புரியாது அண்ணன், தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று ஊர் வந்து சேர்ந்தான்.

கல்யாண வீட்டுக்குப் போன தம்பி போகும்போதே முக்காடு போட்டுக் கொண்டு போனான். அப்போது அங்கு நாட்டியக் கச்சேரி நடந்து கொண்டி ருந்தது. மாப்பிள்ளையும் பெண் ணும் பூமாலைகளைச் சுமந்து கொண்டு நாட்டியம் பார்த்துக் கொண் டிருந்தார்கள். உள்ளே போன தம்பி ஐயோ இப்படி அநியாயச் சாவு வருமா உனக்கு? என்ன ஐயா எல்லோரும் சிரித்துக் கும்மாளம் போடுகிறீர்கள்? நேரமோ இரவு. காலாகாலத்தில் மயானத்துக்குப் போக வேண்டாமா? அவனை (மாப்பிள்ளையை) உட் கார வைத்து வேடிக்கை பார்க்கிறீர் களா? என்று அலறினான். அண்ண னுக்குக் கிடைத்த மரியாதைக்கு இரட்டிப்பு மரியாதை தம்பிக்குக் கிடைத்தது. அவனும் ஊருக்கு வந்து சேர்ந்தான். தகப்பனார் இவர்களின் இந்த விவரம் அறிந்து "தெரியாத காரியத்தில் தலையிட்டால் உள்ள அபாயம் இதானப்பா. இனிமேல் எதில் அதிக பழக்கமும் திறமையும் உண்டோ... அதை மட்டும் செய்யுங் கள்.. என்று தனது மகன்மாருக்குப் புத்திமதி சொன்னார்.

மறதி என்றால் என்ன?



மூளை சில விடயங்களைத் தேர்ந்தெ டுத்துப் பதிவு செய்துகொள்கிறது; பல விடயங்களை ஒதுக்கிவிடுகிறது. இதுதான் மறதிக்கு அடிப்படை. நம் பெயர், முகம், முகவரி போன்ற தேவையான விஷயங் களை மூளை எளிதில் மறப்பதில்லை. அதுபோல் நாம் விரும்பிச் செய்யும் செயல் களை மூளை தன்னிடம் எப்போதும் போட்டுக் கொள்கிறது. ஈடுபாடு இல்லாமல் செய்யும் செயல்களை அது விட்டுவிடு கிறது. அதனால்தான் 'கஷ்டப்பட்டுப் படிப் பதைவிட இஷ்டப்பட்டுப் படிப்பவர்களுக்குப் பாடங்கள் மறப்பதில்லை!' என்கிறார்கள்.

அடுத்தது, தூக்கம். உடல் செல்களின் ஓய்வுக்கும், புதுப்பித்தலுக்கும், புத் துணர்வுக்கும் 8 மணி நேரத் தூக்கம் தினமும் அவசியம். இரவு வந்ததும், கண்களில் இருந்து ரெட்டிகுலர் அமைப்புக்குச் செய்தி போகிறது. அது ஹைப்போதலாமஸில் உள்ள உயிர்க்கடிகாரம் மூலம் பீனியல் சுரப்பிக்குத் தகவல் அனுப்புகிறது. அது 'மெலட்டோனின்' ஹார்மோனைச் சுரக்கிறது. இது மூளையின் பெரும்பாலான மின்தூண்டல்களைத் தற்காலிகமாக அணைத்துவிடுகிறது. உடனே எமது கண்கள் சொருக, தூக்கம் ஆட்கொள் கிறது. தூக்கத்தில், 'விழி அசைவு இல்லாத் தூக்கம்' (Nonrapid eye movement sleep NREM Sleep), 'வேகவிழி அசைவுத் தூக்கம்' (Rapid eye movement sleep REM Sleep) என இருவகை உள்ளன. நாம் தூங்கும் போது இவை மாறி மாறி வரும். முதலாவது ஆரம்பநிலைத் தூக்கம். இரண்டாவது ஆழ்நிலைத் தூக்கம்

சிட்டுக்குருவி

சின்னச் சின்ன சிட்டுக் குருவி
சிறகு விரித்து பறக்கும் குருவி
வண்ண வண்ண சாம்பல் நிறத்தில்
வனப்பாய் வானில் பறக்கும் குருவி

கொட்டிக் கிடக்கும்
தானியக் குவியலை
கூடி வந்து கூடி நின்று
தொட்டுத் தொட்டு கொத்தித் தின்று
கூடி பறந்து கூடு செல்லும்

ஒன்றாய் வராமல் ஒன்றோடொன்று
சேர்ந்து வரும் சிட்டுக் குருவி
நன்றாய் செப்பும்
பாடம் செவியுறுவீர்
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

சொல்லில் இனிமையும் செயலில் பணிவும் அழகானவை

ஒழுக்க விழுமியங்களைப் போற்றுதல் செய்வோம்

வாழ்வியல் நெறி

மனித வாழ்வியல் என்பது அழகானது. இன்ப, துன்பம் என்கிற பாடவிதானங்களை ஆயுள் முழுமையுமாக அறிவுறுத்தி இருப்பது. உறவுகளையும், சமூகத் தனிமங்களையும், சமூகக் குழுமங்களையும் ஒழுக்க விழுமியங்கள் சார்ந்தும், பண்பாட்டு அம்சங்கள் சார்ந்தும் வழிநடத்திச் செல்வது. அந்தவகையிலே இன்ப துன்பம் என்ற அளவீடுகளுள் தன்னிலையாக எழுந்து இடர்பாடுகளைத் தந்து மறைந்து போகின்ற காரண காரியமான 'பிரச்சினை' முரண்நிலையாகப் பார்க்கப்படுகிறது.

இடர்

இங்கு பிரச்சினை என்ற முரண்நிலை காணாத மனிதர்களைக் கண்டுகொள்ள முடியாது. அனைவரும் ஏதோவோர் வகையில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அந்தரிக்கின்றனர். சமூக வெளியில் ஒருவருக்காக இன்னொருவர் வாழ்கின்ற உயரிய பண்பியல் கூறு தன்னிறைவு காண்கின்ற போதே பிரச்சினைகளும் தவறுகளும் இல்லாத சமூகப் பொதுமை நிலைபெறும். தவறுகள் இடம்பெறுகின்ற போது கடிந்துரைப்பதால் எந்தவித மாற்றங்களையும் நாம் கண்டுகொள்ளமுடியாது.

ஒருவரை மன்னிக்கின்ற பக்குவமான மன வளர்ச்சியின் ஊடே தான் மாற்றங்களைச் சரிவரக் கட்டமைத்துக்கொள்ள முடியும். தவறு செய்தவர்களை மன்னிப்பதென்பது மன மோகனத்தின் ஆழ் வெளியில் இருந்து தோற்றம் பெறும் போதே அது புனிதமான பண்பாகப் பரிணாமம் பெறுகின்றது. இத்தகு சிறப்பான பண்பியல் கூறின் உருவாக்கத்தை ஒருவர் மற்றவர்மீது வலிந்து திணிக்க முடியாது. அவை தானாகவே உருவாக வேண்டும்.

மாற்றம் வேண்டும்

ஆம், சந்தர்ப்பத்துக்கு ஏற்றவிதமாக எமது மன மோகனங்களில் ஆத்மார்த்தமான நல்ல மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும். மற்றவர்கள் புரிகின்ற தவறுகளை மறந்து மன்னிக்கும் மனோபாவம் எம்மிடையே வளம்பெற வேண்டும். மனிதர்கள் எப்போதுமே மனித இயல்போடும் ஏனையவர்களுக்கு மதிப்பளிக்கின்ற பண்பியல்போடும் வாழவேண்டும். மிருகத் தனங்களோடும், மிலேச்சத் தனங்களோடும் மனிதன் வாழ முற்படக் கூடாது.

சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்க விழுமியங்களையும் கட்டுக்கோப்புகளையும் ஏற்று நடந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். சமூக உறுப்பினர்கள் என்ற வகையில் அவற்றுக்கு மதிப்பளிக்க வேண்டும். மன்னிக்கின்ற மனோதத்துவமே உண்மையான அறிவு. தெய்வத்தின் இயல்பு. இவை தவிர வெற்றிக்கான வழி என்பதும் மாறுதலற்ற சித்தாந்தம்.

விவகாரமான, விகாரமான சூழ்நிலைகளின் போது, நாம் எப்படி நடந்து கொள்கிறோம் என்பதைப் பொறுத்தே பிரச்சினைகளின் வீரியம் அமைவு பெறுகின்றது. இங்கு மன அமைதியைக் குலைக்கும் வகையில் ஏதோவோர் அசம்பாவிதம் நடைபெறுகிறது அல்லது யாராவது எதையாவது சொல்கிறார்கள் எனில், கண நேரமும் தாமதிக்காமல் அதற்குரித்தான பதிலடியை நாம் கொடுத்துவிடுகின்றோம். பல்வேறு சந்தர்ப்பங்களில்

பாரதூரமான செயல்களைப் புரிந்துவிடுகிறோம். உண்மையில் இத்தகு செயலுறுதிகளில் இருந்து நாம் விடுபட முயற்சிக்க வேண்டும். பொறுமை காக்க வேண்டும். சிந்தித்துச் செயலாற்றி மன்னிப்பு என்ற உயரிய பண்பியல்பை வெளிப்படுத்த வேண்டும். ஒரு செயலை மன்னிப்பதன் ஊடே தவறான வார்த்தைப் பிரயோகங்களில் இருந்தும், தவறான செயல்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம். தேவையற்றதான பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்திவிடலாம்.

பகுத்தறிவோடு செயற்படுவோம்

மனிதன் என்பவன் உயர்நிலையான பகுத்தறிவுள்ள விலங்காகக் கணிப்பிடப்படுகிறான். அதன்வழியே தான் புரிகின்ற ஒவ்வொரு செயலுக்குமான சமூகப் பெறுமானங்களை அறிந்தும், தெரிந்தும், புரிந்தும் கொண்டுள்ளான். ஆக, மன்னிக்கின்ற மனோபாவத்தை பலவீனமான காரியம் எனத் தவறாக எண்ணிவிடக்கூடாது. மன்னிப்பு என்ற செயற்காரியம் மன்னிப்பு வழங்குபவரையும், மன்னிப்புக் கோருபவரையும் குளிர்ச்சியாகவும், அமைதியாகவும் வைத்திருக்கின்றது. அதுவிதமே எப்போதும் நடந்துகொள்ள வேண்டும் என்ற எண்ண வெளிப்பாட்டையும் படிப்பினையாகத் தந்திருக்கின்றது.

இதனூடே நடத்தைக் கோலத்தில் மாற்றங்களைக் கண்டுகொள்ள முடியும். நிச்சயமாக இந்தக் கைங்கரியத்தை செய்வதென்பது சுலபம். ஆனால் கடைப்பிடிப்பது கடினம். அமைதியாக இருக்கும் தருணங்களில் மன்னிப்பு என்ற செயற்கூறின் சிறப்பை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். பாடசாலைகளிலும் சரி, குடும்பங்களிலும் சரி மனவெழுச்சி சார்ந்து ஏற்படுகின்ற மாற்றங்களை பொருத்தமுறக் கையாள வேண்டும். கடுமையான கண்டிப்பு எப்போதுமே தோல்வியில்தான் முடிவடையும்.

தண்டித்தல், கடிந்துரைத்தல் போன்ற செயல் விளைவுகள் பிள்ளைகளுக்கு ஒருபோதுமே ஒத்துவராதவை. மன்னிக்கும் பண்பு மூலமே பலவற்றை சாதிக்க முடியும். ஆம், 'திருப்தியால் உயர்ந்த இன்பமில்லை. கருணையிலும் பெரிய அறமில்லை. மன்னித்தலிலும் ஆற்றல்மிக்க ஆயுதமில்லை.' என்பதை புரிந்து கொள்ள வேண்டும். மாணவர்களின் இளமைப்பருவத்தை சரிவரக் கட்டமைப்பது தொடர்பில் ஆசிரியர்களும் பெற்றோரும் பொருத்தமான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். கற்றுக்கொடுக்க வேண்டும்.

ஆன்றோர்கள் கண்ட உயர் நிலை

தமக்குத் தீமை செய்தவர்களையும் மன்னித்துவிடுகின்ற குணம் படைத்தவர்களே மனிதர்களில் உயர்வானவர்கள் எனச் சான்றோர் கூறுவர். 'இயேசுபிரான், புத்தபிரான், மகாத்மாகாந்தி' போன்றோரும் இதனையே வலியுறுத்தியுள்ளதுடன் தாமும் அவ்வாறே வாழ்ந்து காட்டியுள்ளனர். ஆனால் இன்றைய தமிழ் சமூகத்தின் இயங்கு நிலையை எடுத்து நோக்கின் அங்கு, 'சண்டித்தனம், வெட்டுக்கு வெட்டு, கொலைக்குக் கொலை, அடிக்கு அடி' என்ற தீமையின் படிமங்கள் ஆழமாக வேரூன்றியுள்ளது.

இந்தநிலை மாற்றம் பெற மன்னிக்கும் பண்பைச் சமுதாயம் ஒருமனதாக வரவேற்க வேண்டும். மற்றவர்களின் குறைகளையும் குற்றங்களையும் மன்னித்துவிடும் குணம் படைத்தோரின் உடலும் உளமும் ஆரோக்கியமானதாக விளங்கும். பழிக்குப்பழிவாங்கநினைப்பவர்கள் தூக்கத்தை இழக்கின்றனர். மன அமைதியையும் நிம்மதியையும் தேடி அலைகின்றனர். இறுதியில் நோய் வாய்ப்பட்டு சாவடைகின்றனர்.

தோமஸ் அல்வா எடிசனிடம் அவனுடைய வகுப்பாசிரியர் கடிதம் ஒன்றைக் கொடுத்து , உனது தாயிடம் இதைக் கொடுத்து விடு எனப் பணித்தார். அதன்படியே தோமஸ் அல்வா எடிசனும் ஆசிரியர் கொடுத்த கடிதத்தை தாயிடம் ஒப்படைத்தான். மகனுக்கு கேட்கும்படி தாயார் கடிதத்தை வாசித்தார். அதில், "உங்கள் மகனின் அறிவுத் திறமைக்கு முன்பாக எமது பள்ளி மிகச் சிறியது. அவனுக்குக் கற்பிக்கக்கூடிய திறமையான ஆசிரியர்கள் எம்மிடமில்லை. தயவு செய்து எடிசனுக்கு நீங்களே கற்பிப்பது நன்று." என எழுதப்பட்டிருந்த விடயங்களை அறிந்து மகிழ்ச்சியடைந்தான். உண்மையில் அந்தக் கடிதத்தில், "மூளை வளர்ச்சி குன்றிய உங்கள் மகனை இனிமேல் எங்கள் பள்ளிக்கு நீங்கள் அனுப்ப வேண்டாம்" என்றே எழுதப்பட்டிருந்தது. அதன்படியே தாயார் ஆசிரியருடைய கருத்துக்களை ஆழமாக உள்வாங்கி எடிசனை அப்போது தண்டித்திருந்தால், பின்னாளில் சிறந்த கண்டுபிடிப்பாளனாகவும், ஆராய்ச்சியாளனாகவும் எடிசன் உருவாகியிருக்க மாட்டார்.

உயரிய பண்புகளை கடைப்பிடித்திருப்போம்

அதுவிதமே, "வெளியே காட்டிய கோபம் மன்னிப்புக்கு வழிதேடும். உள்ளே அடக்கிய கோபம் பழிக்கு வழிதேடும்" என்பது 'புல்வெர்' என்பவரது கருத்தாக அமைந்துள்ளது. முரண்பாடு என்பது என்றுமே முன்னேற்றத்தைதடுக்கும்முட்டுக்கட்டைதான். குறைகூறி வளர்க்கப்படும் குழந்தை வெறுக்கக் கற்றுக்கொள்கின்றது. அடக்கி வளர்க்கப்படும் குழந்தை சண்டையிடக் கற்றுக் கொள்கின்றது. கேலி செய்யப்படும் குழந்தை வெட்கத்தோடு வளர்கின்றது. ஊக்குவிக்கப்படும் குழந்தை மனவலிமை பெறுகின்றது. மன்னிப்புக்கு உள்ளாகும் குழந்தை பண்போடு வளர்கின்றது.

எனவே குதிரைகளுக்கு கடிவாளமும், வாகனத்துக்கு வேகத் தணிப்பு மிதியும், கப்பலுக்குச் சுக்கானும் கட்டுப்படுத்தும் பகுதிகளாக செயற்படுவது போலவே, மனிதனை ஆபத்திலிருந்து பாதுகாக்கவும், மாணவர்கள் மன அழுத்தமற்ற விரக்தியற்ற மனோபாவத்தோடு கல்வி நடவடிக்கைகளைத் தொடரவும், விவாகரத்து, தற்கொலை, குடும்பப் பிணக்குகளிலிருந்து குடும்பங்களைப் பாதுகாக்கவும் தேவையான செயற்றிறன் 'மன்னித்தல்' என்ற செயற்கூறிலேயே தன்னிறைவாக உள்ளது. இதனைப் புரிந்து கொண்டு செயலாற்றுவோம். வாழ்வியல் நெறியின் உயிரிய பண்பாக கடைப்பிடித்து சீரிய வாழ்வில் மகிழ்வுடன் வாழ்வோம்.

கவிஞர் வேலணையூர் சுரேஷின் "பாட்டாலே பரவசம்"

தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றமைக்காக

பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations Congratulations

கவிஞர் வேலணையூர் சுரேஷ் பற்றிய குறிப்புக்கள்

இயற்பெயர் - இராமச்சந்திரன் சுரேஷ்
புனைபெயர் - வேலணையூர் சுரேஷ்
சொந்த இடம் - வேலணை கிழக்கு, வேலணை
தற்போதைய முகவரி - இல. 38, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
பிறந்த திகதி – 13.04.1972
தொழில் - ஊடகத்துறை
இலக்கிய முயற்சி - கவிதைகள், இசைப்பாடல்கள், சிறுவர் பாடல்கள் ஆக்குதல்

வெளியீடுகள்

1. களத்தீ (கவிதைகள்) 1992
2. உலராத மண் (கவிதைகள்) 1995
3. கிளுவம் வேலியும் கிடுகுத் தட்டியும் (கவிதைகள்) 2015
4. பிள்ளைத் தமிழின்பம் (சிறுவர் பாடல்கள்) 2015
5. மன வானின் மழைத்துளிகள் (கவிதைகள்) 2016
6. பாட்டாலே பரவசம் (பாடலாக்கத் தொகுப்பு – 2017)
7. நேரமில்லா நேரம் (கவிதைகள்) – 2018
8. இனிப்பா (பாப்பா பாடல்கள்) 2018

Congratulations



இசைப்பாடல்

250 இற்கு மேற்பட்ட இசைப்பாடல்கள் சமூக மற்றும் தெய்வீக பக்திப் பாடல்கள் இயற்றியுள்ளார்.

45 இற்கு மேற்பட்ட ஆலயங்கள் மீது பாடியுள்ளார்

S.P. பாலசுப்பிரமணியம், உன்னிமேனன், உன்னிக்கிருஸ்ணன், LR.ஈஸ்வரி, அனுராதா, மனோ, நித்தியசிறி, சின்மயி, கல்பனா உட்பட 40 இற்கு மேற்பட்ட தென்னிந்தியப் பாடகர்கள் இவரது பாடல்களைப் பாடியுள்ளனர். நம்நாட்டுக் கலைஞர்கள் பலரும் பங்களித்துள்ளனர். இவரது பாடல்களுக்கு தென்னிந்தியாவின் புகழ் பூத்த இசையமைப்பாளர்கள் தேனிசை செல்லப்பா, தேவா, இலக்கியன், மாணிக்கவிநாயகம் எனப்பலர் இசையமைத்துள்ளனர்.

கௌரவம்

1. சிறந்த பாடலாசிரியருக்கான அரச இசை விருது வழங்கல் 2014 விழாவில் தேசிய விருது
2. முதலமைச்சர் விருது வழங்கல் - 2016 மன்னார் விழாவில் இரு நூல்களுக்கும் நன்நூல் விருதுகள் பெற்றமை.
3. அரச இசை விருது வழங்கல் விழாவில் 2016 சிறந்த பாடலாசிரியருக்கான விருதுக்காக ஆடி ஆடி அம்மா பாடல் பரிந்துரைக்கப்பட்டமை.
4. கவிச்சுடர், கவிக்கதிரோன், பக்திப்பாவலன், வித்தகக் கவிஞர், கவிப்புலவர் எனப் பட்டங்கள் வழங்கி ஆலயங்கள் கௌரவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அரச இலக்கிய தேசிய விருது வழங்கல் விழா 2018 இல் கவிஞர் வேலணையூர் சுரேஷின் பாட்டாலே பரவசம் சுயபாடலாக்கத் தொகுப்பு விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டு இரண்டாம் இடத்திற்கு தெரிவாகி அரச உயர் பாராட்டை பெற்றுள்ளது. மண்கும்பான் வீரகத்தி விநாயகர் புகழ்பாடும் போகமறுத்த வீரகத்தி விநாயகர் இறுவட்டுடன் இப் பாட்டாலே பரவசம் தொகுப்பும் மேற்படி ஆலயத்தில் திரு. மண்கும் பானூர் கண்ணன் அவர்களால் வெளியிடப்பட்டதாகும். சுய பாடலாக்க இலக்கியப் பிரிவில் போட்டிக்காகச் சென்ற பல படைப் புகளுக்குள் கவிஞர் சுரேஷின் பாட்டாலே பரவசம் நூல் இறுதி சுற்றுக்குத் தெரிவாகி இரண்டாம் இடத்தை பெற்றதன் மூலம் உயர்ந்த இலக்கியத்திற்கான கௌரவத்தை தனதாக்கி நாட்டின் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன அவர்கள் தலைமையில் நடைபெற்ற அரச விழாவில் பாராட்டுப் பெற்ற கவிப்புலவர் கவிஞர் வேலணையூர் சுரேஷ் தொடர்ச்சியாக மூன்று வருடங்களாக அரச இசை மற்றும் இலக்கிய தேசிய விருது வழங்கல் விழாவில் முதல் மூன்று இடங்களில் தன்னை நிலைநிறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. புதிய நதியா நகைமாடத்தின் அனுசரணையுடன் வெளிவந்த பாட்டாலே பரவசம் நூல் கவிஞரால் பல்வேறு ஆலயங்கள் மீது பாடப்பெற்ற 100 பாடல்களை கொண்டு உருவான படைப்பாகும். தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தை பெற்ற

நம் மண்ணின் கவிஞரை மேலும் பல விருதுகளை பெற பாராட்டி வாழ்த்துவோர்

மைதிலி நகைமாடம்
89V, Kasthuriyar Road,Jaffna
Tel: 021 222 7902
79Z யாழ் மைதிலி ஜுவலர்ஸ்
79Z, Sea Street Colombo - 11
Tel: 011 239 6239

நியூ நகுலா ஜுவல்லரி
இல. 45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4101

நியூ மைதிலி ஜுவல்லரி
38,40, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3479.

சண்ரான்ஸ்போட்
லொறி மற்றும் வட்டா (TATA)
இல. 153, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
077 959 5142

நியூ உதயா ஜுவல்லர்ஸ்
No.91,Power House Road,
Jaffna.
Tel:021 222 2031

வெஸ்ரன் ஜுவல்லர்ஸ்
81,Kasthuriyar Road,
Jaffna
Tel: 021 222 6916

கந்தவேலன் ரேடர்ஸ்
110, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
021 222 2822

புதிய நதியா நகைமாடம்
இல.73,103, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8397, 222 3261

பாலவிநாயகர் மோட்டோர்ஸ்
இல.8, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
உப அலுவலகம், ஏழாலை.
வட்டாரம்-14, குரும்பசிட்டி வீதி, ஆதன இலக்கம் 40.
குப்பிளான் வடக்கு.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்திற் குட்பட்ட குப்பிளான் வடக்கு, குப்பிளான் எனும் முகவரியில், வட்டாரம்-14, குரும்பசிட்டி வீதியில் ஆதன இலக்கம் 40 உடைய ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில் **திருமதி N.வைத்திலிங்கம்** என்னும் பெயரில் உள்ளது.

வடக்கு மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப்பகுதி, உடுவில் பிரதேச செயலகம், J/211 கிராமசேவகர் பிரிவு, மல்லாகம் கோவிற்பற்று ஏழாலை இறை **"திமிக்கன்"**, நிலப்பரப்பு 06 குளி 02.80ஆம் வீடு வளவும் கிணறும், இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் V.T.பால சுப்பிரமணியம் அவர்களால் 2011.08.22 ஆம் திகதிய 4728ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு-01, இதற்கு எல்லைகள் கிழக்கு தம்பிப் பிள்ளை மனைவி இராசம்மாவின் ஆதனம் வடக்கு இராசையா மனைவி மகேஸ்வரியின் ஆதனம் மேற்கு வீதி தெற்கு சிவலிங்கம் மனைவி கணே சம்மா, உதயகுமார் மனைவி பத்மகலா என்பவர்களின் ஆதனம் இதடங்கலும் எனக்குறிப்பிடப்பட்ட ஆதனமானது 7416ஆம் இலக்க, 2011.09.15ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிசு கதிரேசு சிவகப்பிரமணியம் எழுதிய அறுதி உறுதி மூலம் **குமாரு செல்லப்பா பாஸ்கரன் மனைவி புனிதவதி** ஆகியோருக்கு அறுதியாக வந்தடைந்துள்ளது. இவ்வாதனத்தினை பிரதேச சபை ஆதனவரிப் பதிவேடுகளில் **செல்லப்பா பாஸ்கரன் மனைவி புனிதவதி** எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த **7416ஆம் இலக்க, 2011.09.15ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு கதிரேசு சிவசுப்பிரமணியம்** எழுதிய அறுதி உறுதியில் குறித்த ஆதனம் குப்பிளான் தற்சமயம் உரும்பிராய் தெற்கு உரும்பிராய் எனும் முகவரியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் நிரஞ்சன் என்பவரால் **செல்லப்பா பாஸ்கரன் மனைவி புனிதவதி** ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வுறுதியின், **7347ஆம் இலக்க 2011.09.02ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு கதிரேசு சிவசுப்பிரமணியம்** எழுதிய **உரித்துப் பிரகடன** உறுதியில், குறித்த ஆதனம் 1979.11.22ஆம் திகதி காலஞ்சென்ற எனது பிதா வைத்தியலிங்கம் இரத்தினசிங்கம் ஆகியவருக்கு சொந்த மும் ஆட்சியுமானதென்றும் அவர் இறக்க அவர் ஒரே மகனான எனக்கு பிதாவழி உரித்தாக வந்து என்னால் எதுவித தங்குதடையுமின்றி ஆட்சிசெய்யப்பட்டு வருகிறதென்றும் வெளிப்படுத்தி இவ்வாதனம் கடந்த பத்துவருடங்களுக்கு மேலாக எனது தங்கு தடையற்ற ஆட்சி யில் உள்ளதென வெளிப்படுத்துகின்றேன் என்றும் ஆட்சி உரிமைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இவ்வாதனத்தின் முழு உரிமையாளர் நானே என்றும் பிரகடனம் செய்கின்றேன் எனவும், இவ் ஆதனத்தின் ஆதார உறுதிகள் நாட்டுப் போர்சூழல் காரணமாக தொலைந்து விட்டது என்றும், அவற்றின் பிரதிகளை விபரங்கள் தெரியாமையால் காணிப்பதிவகத்தில் இருந்து எடுக்க முடியவில்லை எனவும் **இரத்தின சிங்கம் நிரஞ்சன்** என்பவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறித்த ஆதனத்தினை தற்போதைய உரிமையாளர் **செல்லப்பா பாஸ்கரன் மனைவி புனிதவதி** எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் **இன்றிலிருந்து 30 நாள்களுக்குள்** எழுத்து மூலம் அறியத்தரும்மாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **செல்லப்பா பாஸ்கரன் மனைவி புனிதவதி** எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை எந்தவகையிலும் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தவிசாளர்,
15.09.2018 வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
திகதி சுன்னாகம்.

(CS/19788)(1/0)

மணமகன் தேவை

29 வயதுடைய உத்தியோகத்திலுள்ள மணமகளுக்குப் படித்த கிறிஸ்தவ சபையிலுள்ள மணமகன் தேவை.

078 992 6800, 077 947 4860

(CL/19809)

தவறிவிட்டது

இல.210, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம் வடக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த மார்க்கண்டு திருவாத வூரன் ஆகிய எனது தே.அ.அட்டை (550272318V) கடந்த 01.09.2018 சுன்னாகத்துக்கும் யாழ்ப்பாணம் டில்கோ ஹோட்டலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

076 681 7464, 021 224 1898

(CL/19808)

இப்பொழுது திரையிடப்படுகிறது
Wijitha Cinema - Hattan Proudly presents



Majestic Jaffna 10.30/1.30/4.15/7.00 pm	வடக்கு கிழக்கு	Chelva Jaffna 10.30/2.30/6.30
Raja Jaffna 10.30/2.30/6.30	Saru Cinema Point Pedro 10.30/2.30/6.30	Shanthi Batticaloa 10.30/2.30/6.30
Vijaya Batticaloa 10.30/2.30/6.30	G.K.Cinemax Kalmunai 10.30/2.30/6.30	Vasanthi Vavuniа 10.30/2.30/6.30
Archana Akkaraipattu 10.30/2.30/6.30	Nelson Trinco 10.30/2.30/6.30	SELLAM PREMIER Chenkalady 10.30/2.30/6.30
Bala Chayakacheri 10.30/2.30/6.30	SARASWATHY Trinco 10.30/2.30/6.30	SUGANTHI Batticaloa 10.30/2.30/6.30

கொழும்பு

Majestic Colombo 10.30/1.30/4.15/7.00 pm	Capital Armour Street 10.30/2.30/6.30	City Cinema Mt.Lavinia 9.00 pm
CONCORD Dehiwala 4.30/7.30/10.30pm	SAMANTHA Dematagoda 7.30 / 10.30 pm	EXCEL WORLD Maradana 4.15 pm
SAVOY 3D Wellawatta 9.30 pm	EROS Pamankada 10.30/2.30/6.30/9.30	Ruby Maligawatta 10.30/2.30/6.30/9.30

மத்திய மாகாணம்

Regal Nuwara Eliya 10.30/1.30/4.15/7.00	WIJITHA Hattan 10.30/2.30/6.30	Dinusha Nawalapitiya 10.30/2.30/6.30

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by:
Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

வட்டக்கச்சி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின்

உரிமையுடனான உறவுச் சங்கமம் - 02

காலம்: 16-09-2018 (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மு.ப 10.30
இடம்: கல்லூரி வளாகம்
ஒழுங்கமைத்தலுக்காக மாலை உறுதிப்படுத்த 16-09-2018 திகதிக்கு முன்னர்
திரு. ரமேஸ் தொ.பே இல: 077 102 3759
செயலாளரை வளவாடு தொடர்புகொள்ளவும்.
குறிப்பு:
அன்றைய தினம் 8:30 மணி தொடக்கம் பழைய மாணவர்களின் பாடசாலை ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

மரண அறிவித்தல்



பிறப்பு 11 . 08 . 1965

இறப்பு 14 . 09 . 2018

செல்லத்துரை ரவீந்திரன்

(முன்னாள் றியோ ஊழியர்)

புளியங்கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும், ஸ்ரான்லிக் கொலிஜ்லேன், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ரவீந்திரன் நேற்று (14.09.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை செல்லத்துரை - திலகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகசபை - திருக்கேஸ்வரி தம் பதியரின் அன்பு மருமகனும், வாசுகியின் அன்புக் கணவரும், மதுரன், வாகீசன் ஆகியோரின் தந்தையும், ரசிகரன், ரவிச்சந்திரன், சாரதா, ராகினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், வாகீஸ்வரி, வசந்தி, வாசுதேவன், வாசவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.09.2018) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஸ்ரான்லிக் கொலிஜ் லேனில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரியாலை. **தகவல் : குடும்பத்தினர்.**

மதுரன் - 077 774 0043 (c.12914)

மரண அறிவித்தல்

திருமதி சித்திரகலா சண்முகநாதன்

தோற்றம்	மறைவு
12.10.1960	12.09.2018

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சித்திரகலா சண்முகநாதன் (12.09.2018) புதன் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் காலஞ்சென்ற மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம் பதியரின் அருமை மருமகளும், சண்முகநாதனின் அன்பு மனைவியும், சிந்து, நிரு, உசா ஆகியோரின் பாசமிகு தாயும், சுடேஸ் அவர்களின் மாமியும், நேத்தனின் (நாதன்) பேர்த்தியும், சிவபாலன், சிவ குமார், சிவகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.09.2018) சனிக்கிழமை பிற்பகல் 5.00 மணிமுதல் 9.00 மணிவரை Chapel Ridge Funeral Home 8911 Woodbine Ave Markham ON.L 3 R 5G1 எனும் இடத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு நாளை (16.09.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி முதல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.4, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

க. சண்முகநாதன்	**- 905 554 2616**
காந்தன்	**- 416 561 5158**
சிவபாலன்	**- 94 7757 20662**
பொ.சுப்பிரமணியம்	**- 021 222 9287**

(CL/19786) (13.17)

ஒம் வீராட் விஸ்வப் பிரமனே நமஹ

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் தியாகராஜா உமாகாந் (உமா)

மண்ணில் 13.06.1987 — விண்ணில் 17.08.2018

கடந்த 17.08.2018 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பச் செல்வன் **அமரர் தியாகராஜா உமாகாந்** அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (16.09.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

A9 **வீதி, இயக்கச்சி சந்தி, இயக்கச்சி.**

குடும்பத்தினர்.
077 870 2618

(ACH/ 463) (11)

மரண அறிவித்தல்

இராமு சின்னத்தம்பி



தோற்றம் 15.06.1931 — மறைவு 14.09.2018

சாவகச்சேரிவடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமு சின்னத்தம்பி நேற்று (14.09.2018) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் சிதம்பரம் நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை ஆறுமுகம் தங்கமுத்து தெய்வானை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் விக்கிரமசிங்கம் (ஆஸ்திரேலியா) இரத்தினசிங்கம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மனோகரன் (U.K.), வேணுகா (ஆசிரியை - யா/நாவற்குழி ம.வி.), பிரபாகரன், லதா (U.K.) ஆகியோரின் அன்புத் தந்தையும் மதிவதனி (U.K.), சுபாஸ்சந்திரபோஸ் (கிராம உத்தியோகத்தர் - சாவகச்சேரிநகரம்), திருச்செல்வி (ஆசிரியர் - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), பாலமுரளி (U.K.) ஆகியோரின் அன்பு மாமனாரும் லக்ஷிணி (U.K.), லோசினி (U.K.), லதாங்கி (U.K.) , கீர்த்தன், சகானன், சரண்யன், கிருஸ்ணா (U.K.), விதுஷன் (U.K.) ஆகியோரின் அன்புப் பேரனும் மீனாட்சி, சிவக்கொழுந்து, சிவராசா (நில அளவையாளர்), சிவபாக்கியம் ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.09.2018) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகமூர்த்தி கோவில் ஒழுங்கை, டச்சு வீதி, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.
077 607 9241, 077 907 3805

சிங்களம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

சிங்களம் பேச, எழுத, வாசிக்க மிகவும் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.

ஆரம்பம்: இன்று (15.09.2018) சனிக்கிழமை

சனி மற்றும் ஞாயிறு நாள்களிலும் வார நாள்களிலும் நடைபெறும். உங்கள் வசதிக்கேற்ப வாரத்தில் இரு தினங்கள் வகுப்பிற்கு சமுகம் தரலாம்.

ஸ்ரீ மாஸ்டர்
இல. 164, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
இல. 41, றக்கா லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

சிங்களம்

G.C.E. O/L PAST PAPER CLASS

ஆரம்பம்:

இன்று (15.09.2018) சனிக்கிழமை பி.ப. 6.00 - 7.00 மணிவரை நடைபெறும்

அதன்பின்பு சனி மற்றும் ஞாயிறு நாள்களில் பி.ப. 3.00 - 4.00 மணிவரை மட்டும் நடைபெறும்.

எவரும் இணைந்து கொள்ளலாம்.

ஸ்ரீ மாஸ்டர்
164, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
(Science Faculty Gate முன்பாக) 077 703 3729

யாழ் மண்ணில்

மாருதி Money Exchange

கோலாகல திறப்பு விழா

நிகழும் மங்களகரமான விளம்பி வருடம் ஆவணித் திங்கள் 30ஆம் நாள் இன்று (15.09.2018) சனிக்கிழமை காலை 6.00 மணி முதல் 8.10 மணிவரையுள்ள அனுச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில் **இல.388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில்** எமது **மாருதி Money Exchange** நிறுவனம் கோலாகலமாக திறக்க திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

MARUTHI MONEY EXCHANGE

யாழ் மண்ணில் வெளிநாட்டு நாணய மாற்று சேவையை தனித்துவமாக கொண்ட ஒரே ஒரு நிறுவனம்

Head Office: 285, Galle Road, Wellawatta, Colombo-06
Tel: 011 236 2086

நிர்வாகத்தினர்
மாருதி Money Exchange
தொ.பே: 021 2214 433
076 2844 443

மரண அறிவித்தல்

அம்பலவாணர் இராசையா

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

பிறப்பு 16.08.1924 — இறப்பு 10.09.2018

யாழ். நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் இராசையா கடந்த (10.09.2018) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான வினாசிதம்பி - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சின்னத் தங்கச்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் மகாலட்சுமி, விமலாதேவி, மங்களாதேவி குமரகிரி ஆகியோரின் அன்புத் தந்தையும் கருணாநிதி, கிருஷ்ணலிங்கம், மகாராசா, வசந்தாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் சியாமினி, சுதர்சினி, துர்க்கா, துஷாந்தன், காலஞ்சென்ற கோபு மற்றும் மதுசன், நிரோஷன், சினேகா, திரிசா, சஞ்சய், தேசிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஜனோஸ், மதுஸ், சுஜன், சரண் , லதுஸா, ஜஸ்வினி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.09.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி, சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 218 9155

(CS 19801/15/18)

தகவல்: குடும்பத்தினர்.

பதவி வெற்றிடம்

யாழ். நகரில் இயங்கிவரும் மொத்த விற்பனை நிலையத் திற்குவாகனத்தில்பொருள்கள்கொண்டுசென்றுவிநியோகிப் பதற்கு வாகன சாரதிகள் தேவை. விரும்புபவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையை எதிர்வரும் (25.09.2018) செவ்வாய்க்கிழமைக்கு முன்பதாக கீழ் காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

சுப்ப சூஸ்
154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(CS 19882/15/17)

உடனடி தொழில் வாய்ப்பு

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் நொதேர்ண் சென்றல் வைத்தியசாலைக்குப் பின்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. Messenger (Male)

1. க.பொ.த.(சா/த) (O/L) மற்றும் க.பொ.த (உ/த) (A/L) பரீட்சைகளில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
2. Motor Bike License உடையவராக இருக்க வேண்டும்
3. Motor Bike சொந்தமாக வைத்திருக்க வேண்டும்.
4. வயதெல்லை 23 தொடக்கம் 35 வரை
5. சம்பளம் 20,000/- இற்கு குறையாமல் இருக்கும்.

02. ஆண் பரிசாரகர் (Male Attendant)

1. க.பொ.த.(சா/த) (O/L) சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
2. சம்பளம் 17,500/- இற்கு குறையாமல் இருக்கும்.

இது தொடர்பான விண்ணப்பங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நேரடியாக நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்-கலாம். அல்லது விண்ணப்பங்களை 22.09.2018 இற்கு முன்னர் தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கலாம். (IN/369(11,17)

மனிதவள முகாமையாளர்

நொதேர்ண் சென்றல் வைத்தியசாலை
இல.342, பலாலிவீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:- 021 221 9988, 021 721 7324
Mobile No:- **077 773 2892**
E-mail :- northernhrm@gmail.com

வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.

1. வாகன சாரதி
2. கூலி ஆள்கள்

தொடர்பு - 077 386 7696

வீடு வாடகைக்கு தேவை

நல்லூர் கோவிலை அண்டிய பகுதியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு - 076 720 7608

பெயர்மாற்றம்

புத்தூர் மேற்கு, புத்தூரைச் சேர்ந்த **குணபால சிங்கம்** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **குணா** எனப்பெயர் மாற்றி இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

- குணா -

(CS/19787) (11,17)

காணி / வீடு தேவை

நல்லூர், கந்தர்மடம், பிறவுண்வீதி, திருநெல்வேலி, கொக்குவில் இதர பகுதி களில் நல்ல சூழலில் காணி / வீட்டுடன் தோட்டக்காணிகளும் (செம்மண்) விலைக்குத் தேவை.

076 569 5684 (CS/19791) (11,17)

பெயர்மாற்றம்

வேதரடைப்பு, காரைநகரைச் சேர்ந்த **யோகம்மா** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **யோகேஸ்வரி** எனப் பெயர்மாற்றி இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

- யோகேஸ்வரி

(CS/19785) (11,17)

பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல நகை வியாபார நிலையத்திற்கு ஆண்/பெண் பணியாளர்கள் தேவை.
நேரில் வரவும்.

ललிதா ஜூவலறி,
இல. 75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
- 021222 2863

UNIVERSITY OF JAFFNA
INVITATION FOR BID

1. **The Chairman, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following works.

No	Bid ID	Description of Work	Estimated Cost (Rs. In million) without VAT	Contract Period (No of Calendar Days)	Minimum Required ICTAD Grade	Required Bid Security- Amount
1	YA/CWP/ RE/ 2018-13	Associated Works for 2 Nr Staff Quarters at Kilinochchi Premises, University of Jaffna, Ariviyalnagar Kilinochchi	11.7	90	C6 or above	Rs. 110,000.00
2	YA/CWP/ RE/ 2018-14	Associated Works for Faculty of Technology Building Complex in Ariviyalnagar, Kilinochchi, University of Jaffna	19.0	120	C6 or above	Rs. 190,000.00

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs. Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna** from **17th September 2018** until **1st October 2018** from **9:00 hrs to 15:00hrs and** upon payment of a non-refundable fee of **Rupees three thousand five hundred (Rs.3,500/-) for each bids.**
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57 or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch** to reach **on or before 14.00 hrs on 2nd October 2018.** Bids will be opened soon after closing, at **14.00 hrs on 2nd October 2018** at the Board Room of the University in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of **90 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of ***"Vice Chancellor, University of Jaffna."***
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.9
9. Pre Bid meeting will be held at Capital Works & Planning, University of Jaffna at 10.00 hrs on the 26th September, 2018 at the Maintenance Branch, Ariviyal Nagar, Kilinochchi.

Chairman,
Department Procurement Committee,
University of Jaffna.

14/09/2018

(C 7807/15/17)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகல்
ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம் - 02
ஆதன இல:- 88
வீதி :- தபாற்கந்தோர் வீதி
கிராம சேவையாளர் பிரிவு :- J/150

எமது இடாப்பில் வட்டாரம் 02, தபாற்கந்தோர் வீதி, ஆதன இல.88 இல் சொந்-தக்காரர் உரிமைகோருபவர் தெய்வானை எனும் பெயரில் இவ்வாதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று பண்டத்தரிப்பு இறை **"செந்தியன்கலட்டி"** என்னும் பெயருள்ள நிலப்பரப்பு இலா 1 ½ உம். வீடும் கொண்ட இவ்வாதனம் மாதகலைச் சேர்ந்த காசிநாதர் அழகரத்தினமும் பெண் ஜெயலட்சுமியும் ஆகிய இவர்களால் அவர்களின் மகளாகிய தர்மசீலன் பெண் ஜெயமிதுலாவுக்கு தான உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு. வே.த.மு.கதிர்காமநாதன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 9605 ஆம் இலக்க 21.06.2008 ஆம் திகதிய உறுதி மூலம் வழங்கியதால் தமக்குச் சொந்தம் எனத் தெரியவந்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு.K.பரமேஸ்வரன் அவர்களால வரை யப்பட்ட 3603/ 2018 ஆம் இலக்க 05.08.2018 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது **" செந்தியன்கலட்டி"** நிலப்பரப்பு இலா 1 ½ கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ் வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தர்மசீலன் பெண் ஜெயமிதுலா என்னும் பெயருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப் பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன். அத்துடன் இவ் ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்தலாக காணப்படுவதால் இவ்விளம்பரம் பத்திரிகை யில் பிரசுரிக்கப்படுகின்றது.

திரு. அ. ஜெபநேசன்
தவிசாளர்
வலி. தென்மேற்கு பிரதேச சபை.
மானிப்பாய்.



1. MPCS I ஆம் பிளை
2. சித்திவிநாயகர முன்பள்ளி
3. பிள்ளையார் கோயில்
4. மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்
5. பெயர்மாற்ற ஆதனம்

கடும்...

அவதான நிலையம் அறிவித்துள்ளது.

கிழக்கு மாகாணம், பொலன்னறுவை, முல்லைத்தீவு மற்றும் கிளி நொச்சி மாவட்டங்களில் ஏற்படக்கூடிய கடும் வெப்பத்துடன் கூடிய வானிலை காரணமாக அங்குள்ள மக்கள், அவதானமாக இருக்க வேண்டுமெனவும் வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது

(ற-21)

மகிந்த...

போட்டியிடக் கூடும் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச இந்தியாவில் வைத்துத் தெரிவித்துள்ளமை மகிந்தவின் ஆதரவாளர்களான கூட்டு எதிரணிக்குள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

மகிந்தவின் கருத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம எதிர்ப்பு வெளியிட்டிருந்தார். மகிந்தவின் இந்தக் கருத்துத் தொடர்பில் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் தீஸ்ஸ விதாரணவும் தற்போது அதிருப்தி தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது

பொது எதிரணியைத் தொடர்ந்தும் முன்னோக்கிக் கொண்டு செல்லக் கூடிய மற்றும் அடுத்த அரச தலைவர் தேர்தலில் போட்டியிடக் கூடிய அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் கட்சியில் அனைவரும் கலந்து தீர்மானமொன்றை எடுக்க வேண்டும். பொது எதிரணியில் பல இட துசாரிக் கட்சிகள் அங்கத்துவம் வகிக்கின்றன. இந்த விடயத்தில் தனித்து ஒரு சாரார் தீர்மானம் எடுக்க முடியாது.

பசில் மற்றும் கோத்தபாய தவிரக் கட்சியைக் கொண்டு செல்லக் கூடிய சிலர் உள்ளனர். பொது எதிரணிக்குள் கட்சி உறுப்பினர்களுக்கிடையில் வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. இந்த விடயம் தொடர்பிலான உத்தியோகபூர்வ கலந்துரையாடலின் பின்னரே இது தொடர்பில் அறிவிக்க முடியும்.

தற்போது சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நாட்டை அழிவுப்பாதையில் கொண்டு செல்கின்றது. நாட்டை ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருந்து பாதுகாக்க வேண்டுமாயின் கூட்டு அரசைக் கலைத்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அதனைப் பொது எதிரணியின் சார்பில் மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகளை முன்னெடுப்போம் - என்றார். (ற-5,61)

சிவாஜிக்கு...

உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு நுழைவிசைவு மறுக்கப்பட்டுள்ளது.

ஆசியா பவுண்டேசன் நிறுவனத்தால் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு இந்தியாவில் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. மாகாணசபை உறுப்பினர்கள் இரண்டு கட்டமாக இந்தியாவுக்கு அழைக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய உறுப்பினர்கள் இந்தியாவின் ஹைதராபாத் நகருக்கு நாளை புறப்படவுள்ளனர்.

இந்தக் குழுவில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருந்தது. அவருக்கான நுழைவிசைவு இந்தியத் தூதரகத்தால் மறுக்கப்பட்டுள்ளது.

(ற-5)

விற்பனைக்கு

போன், ஜபாட், கொம்பிறசர் 58L, பற்றி 100A, சோளர் 2 - 100W, அவன், ஸ்ரெபிலேசர், சைக்கிள் என்பன உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 128 7846

வாடகைக்கு

நல்லூர் பகுதியில் 2 அறைகள், சமையலறை, குளியலறை, வீட்டின் பகுதி வாடகைக்கு உண்டு.

தொடர்பு - 077 788 7360

கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினர்

திருமதி அ.அன்ரனிக்கா

அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி சபேரியாப்பிள்ளை பிலிப்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி பிரதேச சபை

ஊழியர் நலன்புரிச் சங்கம், கொடிகாமம்

(C 7806/15/18)

ஆறாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

வினாசித்தம்பி காசிலிங்கம்

(முன்னாள் பங்காளர்)

No.1 மதுபானசாலை)

எங்கள் ஆருயிர் அப்பாவே
ஆண்டுகள் ஆறு சென்றாலும்
ஆறாது எம் துயரம்
ஆண்டவன் அடியில் இருந்து
எங்களை ஆசீர்வதியுங்கள்
அப்பா...

பிள்ளைகள், குடும்பத்தினர்.

64/4 A பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

நீதி:- பூர்வஷ்டி
(15.09.2018)

(CS19790/11/17)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

பாலசுந்தரம் ஆனந்குமார்

தோற்றம் : 11.10.1960 மறைவு : 15.09.2017

ஆண்டொன்று போனாலும்
அழிந்திடுமோ உங்கள் நினைவு
மேல் வர்க்க வாழ்வு துறந்து
மண்ணின் மைந்தர்க்கும்
மழலைகட்கும் மாண்புடனே!
சேவை செய்தீர்
மாறா நோய் கண்டும்
மகிழ்வுடனே பணி தொடர்ந்தீர்
மரணமொன்று அமைதியாக
அழைத்தும்மைச் சென்றாலும்
மாறா உங்கள் புன்னகையை
மறவா நெஞ்சமுடன்
ஆறா துயரத்தில் என்றும்
அழியாது உங்கள் நினைவு

மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும்
நிர்வாகத்தினர்
British Business College

653 நாவலர் வீதி யாழ்ப்பாணம்
தொ.இல : 0774053656

கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல. J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் **2018 ஆம் ஆண்டு 28.02.2018** இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் **2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி (15.10.2018)** இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.10.2018 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(2017 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் முதலாம் திகதி முதல் 2018 ஆம் ஆண்டு 2ஆம் மாதம் 28 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்)

உரிமையாளர் A.S.Surendran

இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல:- 021 490 0311

(C/32289) (11,17)

இல.09, கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம்.
தொ.இல:- 021 222 5046

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கைலாசபிள்ளை கணபதிப்பிள்ளை

(முண்டைதீவு)

பிறப்பு 14.11.1945

இறப்பு 15.09.2017

நிதி: தசாதசி (05.09.2018)

அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்தி விநாயகனை வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்

இலவசம் - விவரக்கோவை

வர்த்தக பிரமுகர்கள்,
நடிகர், நடிகைகள், இயக்குநர்கள்,
சினிமாத்துறை சார்ந்தவர்கள், மக்கள் சேவையாளர்கள்,
பரதநாட்டிய ஆசிரியர்கள்,
பத்திரிகை நிருபர்கள், வானொலி கலைஞர்கள்,
பாடகர்கள், வாத்திய கலைஞர்கள்,
அரசியல்வாதிகள்,
எழுத்தாளர்கள், கவிஞர்கள்,
சிற்பிகள், சித்திரக் கலைஞர்கள்.
உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி, ஈ-மெயில்
ஆகியவற்றினை இலவசமாக எங்களுக்கு சேர்ப்பியுங்கள்.

024 454 7160

(CS 19810/13/18)

மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 11 . 1957

மறைவு 14 . 09 . 2018



சண்முகம் அருந்தவநாதன் (ஈசன்)

(ஓய்வுபெற்ற ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி)

யாழ். குப்பிளானைப் பிறப்பிடமாகவும் பூநாறி மரத்தடி, சபாபதி வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் அருந்தவநாதன் நேற்று (14.09.2018) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - பாக்கியம் தம்பதிகளின் புத்திரனும் காலஞ்சென்ற கோபாலரட்ணம் (முன்னாள் வட.கிழக்கு மாகாண செயலாளர்) மற்றும் விக்னேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் ராதாவின் அன்புக் கணவரும் சாரதாதேவி, சறோஜனிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற யோகேந்திராவின் (பொறியியலாளர்) சகலனும் யசோதாவின் மைத்துனரும் கானப்பிரியா, சிந்துஜா, கிரிசுதா, செந்தூரன், கரிகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆருத்திரனின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.09.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 940 8489 (CS 18422/15/18) **தகவல்: மனைவி**

மரண அறிவித்தல்

திருமதி சகுந்தலநாயகி தர்மவரதர்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சகுந்தலநாயகி தர்மவரதர் நேற்று (14.09.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மவரதரின் அன்பு மனைவியும் அமிர்த நாயகியின் (கிளி) அன்புத் தாயாரும் இராமதாஸின் (ரகு) அன்பு மாமியாரும் ரூபன், அபர்ணா, அஜன், யசிகா, துசான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சவீனாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2018) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவிட்டபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மருமகன்
த.இராமதாஸ் (ரகு)
077 711 8479

வளித்தொழிற்சாலை ஒழுங்கை, மாவிட்டபுரம்.

(CS 18421/15/18)

அறிவாற்றல்

மரபணுக்கள் தரும் பொதுப் பண்புச் சூழ்நிலையின் கூறு

யாழிசை

உலகின் எல்லாப் பகுதிகளிலும் அறிவாற்றல் உட்பட பல் வேறு பண்புகளும் ஒரு குறிப் பிட்ட இனத்துக்கோ அல்லது இனக்குழு வுக்கோ மரபார்ந்தவை. தலைமுறைக ளாக வருபவை என்ற கருத்து பொதுவாக இருந்தது. பின்னர் சமூக, பண்பாட்டு வளர்ச்சியின் நிலையில் அறிவாற்றல் என் பது ஒரு மரபுப் பண்போ, பாரம்பரியமா னதோ அல்ல அதை ஒரு பொதுப் பண்புச் சூழ்நிலை யும், வாழ்நிலையுமே தீர்மானிக் கிறது என்றனர். தகுந்த சூழ்நிலை அமைந் தால் எல்லோராலும் அறிவாற்றலைப் வளர்த்துக் கொள்ள முடியும் எனக் குறிப்பிட் டனர். வாதிட்டனர்.

மரபணு

மரபணுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஓர் உயி ரியின் 'உடற்கூற்றியல்' மற்றும் 'உயிர்ச் செயற்பாட்டியல்' ரீதியான எல்லாப் பண்புக ளையும் மரபணுக்களே தீர்மானிக்கின்றன. தவிர அடுத்த தலைமுறைக்கும் கடத்துகின் றன என்று அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டது.

அதுவரை வெளிப்படுத்தப்பட்ட உயிரியல் பண்புகளையே ஆராய்ந்து கொண்டிருந்த உயிர் அறிவியல், அந்தப்பண்புகளைக் குறிக்கும் மூலமாகிய மரபணுத் தொகை யின் கட்டமைப்பை ஆராயும் மூலக்கூற்று உயிரியல் தொழில்நுட்பங்களின் வழி யாகப் புதுப்பாய்ச்சல் பெற்றது.

மரபுப் பண்புகளையும், அதன் மூலமாகிய மரபணுக்களின் பங்களிப்பையும் பற்றிய ஆய்வு எல்லாத் துறைகளிலும், குறிப்பாகப் பரிணாமவியல், மரபியல், உயிர்வேதியல், நரம்பியல், உளவியல், நோய்க்கூறியல், நடத்தை மரபியல் என வேகம் பெற்றது.

அறிவாற்றலை மரபியல், நரம்பியல் மற் றும் நடத்தை மரபியல் ஆகிய துறைகளின் வாயிலாக உயிரியல் ரீதியாக அணுகலாம். இந்தத் துறைகள் அறிவாற்றலைப் பற்றிப் பலவாறாகச் சொல்கின்றன.

அறிவாற்றல்

இங்கு அறிவாற்றல் என்பது, 'அறிதல் திறன், சிந்தித்தல், சமயோசிதம், கற்றல், வெளிப்படுத்துதல், தொடர்புகொள்ளல், திட் டமிடுதல், முடிவெடுத்தல்' போன்ற சிந்த னைச் செயற்பாடுகளை ஒட்டுமொத்தமாகக் குறித்து நிற்கின்றது.

உளவியலில் பொதுவான அறிவாற்றல், பாய்ம மற்றும் படிகமாக்கப்பட்ட அறிவாற் றல் என இரண்டாக வகுக்கப்படுகிறது. இதில் பாய்ம அறிவாற்றல் என்பது பெற் றுக்கொண்ட அறிவாக அல்லாது புதிய சூழ்நிலைக்கும், சிக்கலுக்கும் ஏற்றவாறு தர்க்கபூர்வமாகச் சிந்தித்துச் செயற்படுதலா கும். கணித, அறிவியல், தொழில்நுட்பச் சிக்கல்களைத் தீர்ப்பதில் திறன் பெற இது மிகவும் முக்கியம். படிகமாக்கப்பட்ட அறி வாற்றல் என்பது திறமையையும், அறிவை யும், அனுபவத்தையும் பயன்படுத்தும் ஆற்றல் எனப் பொருள்படும். ஆழ்ந்து அகன்ற பொது

அறிவு, பரந்த சொல்வங்கி , தகவல்களை நினைவிலிருந்து மீட்டுப் பயன்படுத்துதல் போன்றவற்றில் இதன் பங்கு அதிகமாகக் காணப்படும்.

நரம்பு மண்டலத்தின் தலைமையகமான மூளை என்னும் உயிரியல் உறுப்புத்தான் அறிவாற்றலின் மையம். தத்துவ ஞானி பிளாட்டோ மூளையே அறிவாற்றலின் மையம் என்று ஊகித்தார். ஆனால் அவரது மாணவனான அரிஸ்டோட்டில் இதயமே அதன் மையம் என்று கருதினார். 'காலன்' என்கிற கிரேக்க ஹிப்போகிராட்டெஸ் வழி மருத்துவர்தான் சண்டையில் அடிபட்டு மூளை சிதைந்த போர்வீரர்களின் சிந்த னைப் புலம் பாதிக்கப்படுவதைக் கவனித் தார். அதன்வழி அறிவுச் செயற்பாடுகளில் மூளையின் முக்கியத்துவத்தை முதலில் உறுதி செய்தார்.

பரிணாமப் பாதை

பரிணாமத்தின் மிக நீண்ட பாதையில் மனிதனுக்கும் சிம்பன்ஸி களுக்கும் பொது மூதாதையான ஒரு பேரினக் குரங்கிலிருந்து மனிதன் தன் நெருங்கிய இனமான சிம்பன்ஸிகளிடம் விடைபெற்றுப் பிரிந்து, தனியாகத் தன் பயணத்தைத் தொடங்கி அண்ணளவாக 5 தொடக்கம் 7 மில்லியன் ஆண்டுகள் ஆகிறது. இந்த நீண்ட பரிணாமப் பயணத் தில் இதுவரை மனிதனின் மரபணுத் தொடர் சிம்பன்ஸிகளிடமிருந்து சற்றே அண்ணளவாக 1.5 வீதம் மட்டுமே வேறு படுகிறது.

மரபணு வேறுபாடு எப்படிக் கணக்கிலெடுத் துக் கொள்ளப்படுகிறது என்பதை வைத்துக் கருத்து வேறுபாடுகள் சிலவும் இது குறித்து முன்வைக்கப்படுகின்றன.

மரபணுத் தொடரில் 99 வீத ஒற்றுமை இருந் தாலும் எது மனிதனை மனிதனாகவும், குரங்கைக் குரங்காவும் வைத்திருக்கிறது என்ற கேள்விக்கு 2002 ஆம் ஆண்டு வெளிவந்த ஆய்வு முடிவு கூறிய பதில் மிக முக்கியமானது. மனித மூளையில் உள்ள மரபணுச் செயற்பாடுதான் இத்தனைக்கும் மனிதனுக்கும், சிம்பன்ஸிக்கும் மூளை யில் வெளிப்படும் மரபணுக்களில் உள்ள வித்தியாசம் மற்ற உள்ளுடல் அங்கங்களி லும் அதாவது இதயத்திலோ, கல்லீர லிலோ, சிறுநீரகத்திலோ வெளிப்படும் மர பணுக்களை விடக் குறைவாகக் காணப்ப டுகிறது. ஆனால் இதுவே மனிதனின் அறிவாற்றல் சார்ந்த பரிணாம வளர்ச்சி யில் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகக் குறிப்பிடப்படுகின்றது.

'ஆர்.என்.ஏ' படியாக்கல்

மரபணுக்களின் பண்பு வெளிப்பாட்டில் 'ஆர்.என்.ஏ' படியாக்கல் என்ற இடைநிலை உள்ளது. இதைக் கட்டுப்படுத்தும் சில கார ணிகள் 'ஆர்.என்.ஏ' படியாக்கல் காரணிகள் என்று குறிக்கப்படும். இவற்றின் பங்கும் மனிதப் பரிணாம வளர்ச்சியில் குறிப்பிடத் தக்கது என்று நிறுவப்பட்டுள்ளது. உதார ணமாக, 'ப்ரோடோகாதெரின்' என்கிற புர தத்தின் வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்தும் காரணியைச்சொல்லலாம். இந்த 'ப்ரோடோகா தெரின்' மூளை வளர்ச்சிக்கும், அதன் செயற்பாட்டிற்கும் மிகவும் அவசியமானது. பெருமூளை அரைக்கோளங்களைச் சுற் றியுள்ள மடிப்புகள் நிறைந்த சாம்பல் நிறப் பொருள் என்றழைக்கப்படும் 'பெருமூ ளைப் புறணி' (செறீபல் கோற்றெக்ஸ்) ஏனைய பேரினக்குரங்குகளை விட மனி தனுக்கு மூன்று மடங்கு அளவில் பெரிய தாகக் காணப்படுகிறது.

மூன்று மடங்கு நரம்பணுக்களும் (நியூ ரான்கள்) அதிகம் காணப்படும். மனித னின் மொத்த உடலுக்குத் தேவைப்படும் ஆற்றலில் ஐந்தில் ஒரு பங்கு இப்பெரிய மூளை இயங்கு நிலை பெறத் தேவைப்படு கிறது. மூளையின் மிகுதியான ஆற்றல் தேவையை ஈடுகட்டும் நோக்கம் மறைமு கமாக மனிதனின் அறிவாற்றலை பெருக்க உதவியது. அதாவது அத்தகைய அதிக ஆற்றலைத் தரும் மாமிசத்தை வேட்டை யாடவே ஆதிமனிதன் கற்களைச் செதுக்கி ஆயுதமாகப் பயன்படுத்த பரிணாமத்தால் உந்தப்பட்டான் என்னும் ஒரு 'வேட்டைக் கருதுகோளும்' உண்டு.

கருவளர்ச்சி

இந்தச் சாம்பல்நிறப் பகுதி தான் சிந்தனை, விழிப்புணர்வு, மொழி, கற்றறிதல், பகுத்த றிதல் போன்ற மனிதனை மற்ற விலங்கு களிலிருந்து வேறுபடுத்தும் முக்கிய பண்பு களை நிர்ணயிக்கிறது. இங்கே மரபணுக் களுக்கு என்ன முக்கியத்துவம் என்று நோக்கின், பதில் 'மிக முக்கியமான பங்கு மரபணுக்களுக்கு உண்டு' என்பதாக அமையும்.

உதாரணமாக, 'எச்.ஏ.ஆர்.வண்.எவ்' என் னும் ஒரு மரபணு மனிதக் கருவளர்ச்சி யின் ஏழாவது வாரத்தில் மிக அதிகமாக வெளிப்படுத்தப்படுகிறது. இந்த மரபணு நேரடியாக எந்தப் புரதத்தையும் குறிப்பதில்லை. பதிலாக மூளைப் புறணி யில் நியூரான் அடுக்குகளை உண்டாக்கு வதிலும், மூளையின் வடிவமைப்பைக் கட்டமைப்பதிலும் பங்குபெறும் இதர புரதங் களுக்கான மரபணுக்களின் வெளிப் பாட்டை மேம்படுத்துகிறது.

எல்லாமாக 49 மரபணுப் பகுதிகள் இவ் வாறு மனிதர்களில் சிம்பன்ஸிக்களை விட மிக வேகமாக பரிணாம வளர்ச்சி அடைந் துள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில் ஒன்று தான் மேற்கண்ட 'எச்.ஏ.ஆர். வண்.எவ்'. அதாவது மனிதர்களில் முடுக் கிவிடப்பட்ட பகுதியை 'கியூமன் அக்சலறேற் றெட் றீஜன்' மரபணு எனக் குறிப்பிடு கின் றனர். மீதமுள்ள 48 பகுதிகளையும் அவற் றின் பண்புகளையும் கண்டறியும் ஆராய்ச் சிகள் தொடர்ந்து கொண்டிருப்பதாக விஞ் ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

தவறணையில்...

சென்றிருந்தார். அங்கிருந்து திரும்பி வீடு வந்த அவர் வீட்டுக்குள் இருந்து கதைப்பாறியுள்ளார். அப்போது வீட்டுக்குள் சடுதியாக நால்வர் நுழைந்தனர். அவர்கள் மூதாட்டியின் வாயில் துணியை அடைந்தனர். மூதாட்டி அணிந்திருந்த 3 பவுண் காப்பு, அரைப் பவுண் மோதிரம் என்பவற்றை அபகரித்தனர். அங்கிருந்த 15 ஆயிரம் ரூபா பணத்தையும் அபகரித்துக் கொண்டு தப்பியோ டினர்.

இந்தக் கொள்ளைச் சம்பவத்தை அறிந்த ஊரார் உசாரடைந்த னர். புன்னாலைக்கட்டுவன் கிராமத்தில் புதிதாக நடமாடிய ஒரு வரை மக்கள் சந்தேகத்தில் மடக்கினர். அவர் சுன்னாகம் பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை உடன் ஆரம்பித்த னர். கைது செய்யப்பட்டவரின் அலைபேசியில் இறுதியாக அழைப்பெடுக்கப்பட்ட தொலைபேசி இலக்கங்கங்களை அறிந்து கொண்டனர். அவர்களுக்கு அந்தத் தொலைபேசியில் இருந்து கைது செய்யப்பட்டவர் ஊடாகத் தொடர்பை ஏற் படுத்தினர். அவர்களைத் தவறணைக்கு வருமாறு கைது செய்யப்பட்டவர் ஊடாகத் தகவல் கொடுக்கப்பட்டது.

பொலிஸார் தவறணையைச் சுற்றிப் பதுங்கியிருந்தனர். அழைக்கப்பட்ட மூவரும் தவறணைக்கு வந்தபோது பொலிஸார் அவர்களை மடக்கிப் பிடித்தனர். அவர்களி டம் விசாரணை நடத்தப்பட்டது. கொள்ளையிடப்பட்ட நகைகளும், பணமும் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட நால்வரும் பொலிஸ் காவலில் வைக் கப்பட்டுள்ளனர் என்றும், விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-21,26)

மரண அறிவித்தல்



சந்திரகுமார் சுரேன்

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் காரைநகர் வேம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரகுமார் சுரேன் கடந்த (13.09.2018) வியாழக்கிழமை அகால மரணடைந்தார்.

அன்னார் சந்திரகுமார் - ராஜாசுலோசனா தம்பதிகளின் அன்புப்புதல்வனும்சதீசன், ரமேஸ்வரன் (பஞ்சி), தீலீபா, தினேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் உமா, புஸ்பா, தயாளன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.09.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தீர்த்தக் கரை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்படி, காரைநகர். தகவல்:
077 152 2960 குடும்பத்தினர்.

(CS 19611/15/18)

புதிய...

கூட்டத்துடன் அரசியல் நிர்ணய சபையில் (நாடாளுமன் றம்) புதிய அரசமைப்புக்கான நகல் வரைவு சமர்பிக்கப் படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் புதிய அரசமைப்புக்கான நகல் வரைவு நாடா ளுமன்றத்துக்கு இப்போது சமர்பிக்கப்படாது என்று மகிந்த அணி கூறியுள்ளது.

இது தொடர்பில் மகிந்த அணி சார்பில் வழிநடத்தல் குழு வில் பங்கேற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்ததாவது

வெகுவிரைவில் புதிய அரசமைப்பு நகல் வரைவு நாடாளு மன்றத்தில் சமர்ப்பிப்படும் என்று கடந்த நாடாளுமன்ற அமர்வில் அரசதரப்பில் கூறப்பட்டது. ஆனால் அதற்கான சாத்தியம் இல்லை. அவ்வாறு அரசமைப்பின் வரைவு விரைவில் சபையில் சமர்ப்பிப்பது தொடர்பில் வழிநடத் தல் குழுவில் ஆராயப்படவில்லை - என்றார். (ற-5)

கூட்டாட்சி...

நாட்டில் நாட்டைப் பிரித்து கூட்டாட்சித் தீர்வை வழங்க முடியாது.

இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த மகிந்த ராஜபக்ச, நியூஸ் எக்ஸ் தொலைக்காட்சிக்கு அளித்திருந்த நேர் காணலிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது

தமிழ் மக்கள் அதிகாரங்களைப் பகிர்ந்து தருமாறு கேட்க வில்லை. அரசியல்வாதிகள்தான் அதைக் கோருகிறார்கள். தமிழ் மக்கள் வேலை வாய்ப்பு மற்றும் அபிவிருத்தியைத் தான் கேட்கிறார்கள். இலங்கை சிறிய நாடு. நாங்கள் நாட்டை பிரித்து கூட்டாட்சித் தீர்வை வழங்க முடியாது. அதற்கான சாத்தியம் முற்றாக இல்லை.

நான் ஆட்சியில் இருந்த போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் என்னிடம் வந்து இது தொடர்பாகப் பேசத் தயாராக இருக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்க தமக்குச் சிறந்த தீர்வை வழங்குவார் என்று அவர்கள் கருதினர் - என்றார். (ற-5)

ஹெரோயின்...

கொல்லன்கலட்டி, வித்தகபுரத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறைச் சிறப்புக் குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசித் தகவலை அடுத்தே சந்தேகநபர் கைது செய் யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21,26)

புதுடில்லிச்...

இலங்கை இந்திய உறவை மேலும் பலப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாக இந்தியப் பயணம் அமைந்தது என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கடந்த 10ஆம் திகதி திங்கட்கிழமை பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த உறுப்பினரான சுப்ரமணி சுவாமியின் அழைப்புக்கு அமைவாக மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட குழு டில்லி சென்றி ருந்தது.

இந்தப் பயணம் தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட் டுள்ள ஊடக அறிக்கையிலேயே மகிந்த ராஜபக்ச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தப் பயணத்தின்போது இந்தியத் தலைமை அமைச்சர் நரேந் திர மோடி, முன்னாள் இந்தியத் தலைமை அமைச்சர் மன்மோ கன் சிங், காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களுடன் மிக சினேகபூர்வமான கலந்துரையா டல்கள் இடம்பெற்றன.

இந்தப் பயணத்தின் ஊடாகப் பல புதிய மாற்றங்கள் ஏற்படும் சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றது. இந்தியப் பயணத்தை நிறைவு செய்து வெற்றியுடன் நாடு திரும்பியுள்ளோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-5,61)

தியாகத்தின்...

தீலீபன், உணவு ஒறுப்புப் போராட்டத்தை இதே போன்றதொரு நாளில் 31ஆண்டுகளுக்கு முன்னதாக 1987ஆம் ஆண்டு ஆரம்பித்தான். ஈழத் தமிழரின் தாயக தேசம் எங்கும் நிலை கொண்டிருந்த இந்திய இராணுவம் மற்றும் இலங்கை அரசுக்கு எதிராக 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சைத் தீயை நல்லூரில் திலீபன் பற்ற வைத்தான்.

12 நாள்கள் நீராகாரமும் இன்றி உணவு ஒறுப்பை முன்னெடுத்த தியாக தீபம் திலீபன், 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி வீரச்சாவைத் தழுவிக் கொண்டான்.

அகிம்சையைப் போதித்த காந்திய தேசம் என்று சொல்லப்பட்ட இந்தியா, தியாக தீபம் திலீபனின் அகிம்சைப் போராட்டத்தின் முன் தோற்றுப் போனது. திலீபனின் சாவை வேடிக்கை பார்த்தது இந்தியா. இதுவே பின்னாளில் விடுதலைப் புலிகள் இந்தியாவை ஈழமண்ணிலிருந்து அடித்து விரட்டித் துரத்தும் அளவுக்கு மாற்றம் கண்டது.

'மக்கள் புரட்சி வெடிக்கட்டும்! சுதந்திர தமிழீழம் மலரட்டும்!!' என்று முழக்கமிட்டுதாயக மண்ணை முத்தமிட்டு வீரகாவியம் படைத்த தியாக தீபம் திலீபனின் நினைவு நாள், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆளுகைப் பிரதேசங்களில் மிக உணர்வெழுச்சியுடன் கடந்த காலங்களில் நினைவுகூரப்பட்டது. சிவப்பு மஞ்சள் கொடிகளால் தமிழர் தாயக மண் அலங்கரிக்கப்பட்டு, முக்கிய சந்திகளில் திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டது. தாயக தேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மௌனிக்கப்பட்ட பின்னர், பகிரங்கமாக பொது வெளியில் நினைவுநாள் நினைவுகூரப்பட வில்லை. புலம் பெயர் தேசங்களில் மாத்திரம் பேரெழுச்சியுடன் நினைவுகூரப்பட்டு வந்தது.

கடந்த 2016ஆம் ஆண்டு, நல்லூரில் உள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியில் 10ஆண்டுகளின் பின்னர் பகிரங்கமாக நினைவுநாள் நிகழ்வுகள் முதன் முறையாக நடத்தப்பட்டன. கடந்த ஆண்டும் பொது வெளியில் நினைவு கூரல் இடம்பெற்றது. இந்த ஆண்டும் காலை 9.30 மணிக்கு மாபெரும் நினைவு கூரல் நடைபெறவுள்ளது. (ற-5)

ஐ.நாவுக்குப்...

பத்திரிகை ஆசிரியர்களுடனான ஊடக சந்திப்பு அரச தலைவரின் மாளிகையில் நேற்று நடைபெற்றது. அதில் பங்கேற்று கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு கூறினார். அவர் தெரிவித்ததாவது:

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் ஐ.நாவின் செயலாளர் நாயகத்தையும், மனித உரிமை ஆணையாளரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளேன். ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவின் முன்மொழிவுகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் நான் யோசனை முன்வைக்கவுள்ளேன்.

கடந்த காலத்தில் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் அரசுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆட்சியில் அப்போதைய மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை வந்தபோது அமைச்சர் ஒருவர் ஐ.நா. அலுவலகத்துக்கு முன்னால் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தினார். நாட்டின் அன்றைய தலைவர் இளநீர் வழங்கி முடித்துவைத்தார். இவ்வாறுதான் நிலமை இருந்தது. நாம் ஆட்சிக்கு வந்தவுடன் ஐ.நா.வை நண்பனாக மாற்றியமைத்தோம். போரின்போதான பிரச்சினைகள் குறித்த முன்மொழிவுகளை நாட்டின் சுயாதிபத்தியம், தேசிய பாதுகாப்பு, படையினரின் மதிப்பு என்பவற்றைப் பாதுகாத்துக்கொண்டு நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுத்தோம். சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்றது. அவர்களின் வழக்குகள் முடிவடைந்து தண்டனை பெற்றவர்களும் உள்ளனர். வழக்குகளை எதிர்நோக்குகின்றவர்களும் உள்ளனர். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் அமைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்தப் பிரச்சினைகளுக்கு நல்லிணக்க அடிப்படையில் எப்படித் தீர்வு காண்பது என்பது தொடர்பில் எதிர்வரும் 25ஆம் திகதி ஐ.நா. பொதுச்சபையில் நான் உரையாற்றவுள்ளேன்.

இரு தரப்பு நிலைப்பாடுகளையும் கருத்தில் கொண்டு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான யோசனைகளை உள்ளடக்கியதாகவே எனது உரை அமையும். இந்த யோசனைகளை எழுத்து மூலமாகவும் ஐ.நா. செயலாளருக்கும் மனித உரிமை ஆணையாளருக்கும் கையளிக்கவுள்ளேன்.

புதிய ஆணையாளர் எமது செயற்பாடுகளை வரவேற்கக்கூடிய வகையில் கருத்து தெரிவித்துள்ளார். நல்லிணக்கத்துடன் கூடிய விமர்சனங்களையே அவர் முன்வைத் துள்ளார் - என்றார்.

கேள்வி- போர்க் குற்றச்சாட்டுக்கள் மீது விசாரணை நடத்தப்படவேண்டுமென்று ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு பரிந்துரைத்திருக்கின்றது. இவ்வாறு உரிய விசாரணைகளை நடத்தாது ஐ.நாவுக்கு புதிய யோசனை நீங்கள் முன்வைப்பதை அந்த அமைப்பு ஏற்றுக்கொள்ளுமா? பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கையின் செயற்பாடுமந்தகதியில்உள்ளதுஎன்றுஐ.நாவின் புதியமனிதஆணையாளர்குற்றஞ்சாட்டியுள்ளார். இது குறித்து உங்களின் கருத்தென்ன?

பதில்- குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் நடைபெறுகின்றன. அவற்றை உள்ளடக்கி வித்தியாசமான யோசனையை நான் முன்வைப்பேன். எவ்வாறான விமர்சனங்கள் வருகின்ற போதிலும் எதிர்ப்புக்கள் வருகின்ற போதிலும் அவற்றையும் தாண்டி எமது யோசனை முன்வைக்கப்படும்.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நாடுகளில் நல்லிணக்க முயற்சிகள் மந்தகதியிலேயே நடைபெறுகின்றன. இந்த விடயங்கள் தொடர்பில் விரைவாக செயற்படுவது பாதகமான நிலமையை ஏற்படுத்தும். அரசியல், சமூக, பண்பாட்டு, விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படாதவகையில் கவனமாகச் செயற்படவேண்டியுள்ளது. நாம் இந்த விடயங்களில் வேகமாக பயணித்தால் அது பாதகமான நிலையையே ஏற்படுத்தும். சரியான நேரத்தில் சரியான கருமங்கள் இடம்பெறவேண்டும் - என்றார். (ற-5,61)

தமிழ்...

ஆரம்பித்துள்ளனர். நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் அவர்கள் மேற்கொள்ளும் 5 ஆவது உணவு ஒறுப்புப் போராட்டமாகும்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளான, ம.சுலக்சன், இ.திருவருள், சூ.ஜெயசந்திரன், இரா.தபோரூபன், சி.தில்லைராஜ், இ.ஜெகன், சி.சிவசீலன், த.நிமலன் ஆகியோரே உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தாம் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம் என்றும், தம்மை விடுவிப்பதில் ஏதாவது சட்டச் சிக்கல் இருக்குமாக இருந்தால் குறுகிய கால மறுவாழ்வு வழங்கியாவது விடுவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்தே போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர். (ற-5)

கொடுத்து...

அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு அமைச்சரவை தொடர்பில் மூன்று மாதங்களாக இழுபறி நீடித்துக் கொண்டிருக்கின்றது. மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளையை வடக்கு மாகாண முதலமைச்சர் நிறைவேற்றவில்லை எனத் தெரிவித்து நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தவிடயத்தைசுமுகமாகத்தீர்ப்பதற்குரியமுயற்சிகள் ஒருபுறம் எடுக்கப்பட்டு வருகின்றநிலையில், வடக்கு மாகாண முதலமைச்சர் சில தினங்களுக்கு முன்னர் வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் மூலம் யோசனை முன்வைத்துள்ளார். பா.டெனீஸ்வரனுக்கு அமைச்சர் பதவி வழங்கி உடனேயே அவரை அந்தப் பதவியிலிருந்து நீக்குவதே அந்த யோசனையாகும். வடக்கு மாகாண ஆளுநர் அதனை நிராகரித்துள்ளார். நீதிமன்றம் இடைக்காலக்கட்டளைவழங்கியுள்ள விடயத்தில் அவ்வாறு செயற்பட முடியாது என்று குறிப்பிட்டுள்ளார். (ற-5)

வடமாகாண...

அமைச்சராக நியமிக்க முதலமைச்சர் தரப்பு இணங்கியுள்ளது என்று அறியமுடிகின்றது.

வடக்கு அமைச்சரவை தொடர்பில் மூன்று மாதங்களாக இழுபறி நீடித்துக் கொண்டிருக்கின்றது. மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளையை வடக்கு மாகாண முதலமைச்சர் நிறைவேற்றவில்லை எனத் தெரிவித்து நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அன்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்உள்ளிட்டபிரதிவாதிகளுக்கு எதிராகக் குற்றப் பத்திரம் வாசிக்கப்படவுள்ளது. குற்றப் பத்திரம் வாசிக்கப்பட்ட பின்னர், வழக்குத் தாக்கல் செய்த தரப்பால் கூட வழக்கை மீளப் பெற முடியாது. அதற்கு முன்னதாக 18ஆம் திகதிக்கு முன்னர் இணக்கப்பாடு எட்டப்படுவதன் ஊடாகவே நீதிமன்ற அவமதிப்பு வழக்கிலிருந்து முதலமைச்சர் தன்னை விடுவித்துக் கொள்ள முடியும்.

இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்வதற்காக முயற்சிகளை வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஏற்கனவே ஆரம்பித்திருந்தார். வழக்குடன் தொடர்புடைய சகல தரப்புக்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

நேற்றுக் காலையில் இந்த விவகாரத்தில் முன்னேற்றமான நிலைப்பாடு எட்டப்பட்டதாக இந்த விவகாரத்துடன் தொடர்புடைய தரப்புக்கள் 'உதயனுக்குத்' தெரிவித்தன.

'தற்போதுள்ள அமைச்சரவையில் ஓர் அமைச்சரை நீக்கி அவருக்குப் பதிலாக டெனீஸ்வரனை அமைச்சரவையில் இணைத்துக் கொள்ளத் தயார். ஆனால் அதனை 18ஆம் திகதிக்கு முன்னர் செய்து முடிக்க முடியாது. 18ஆம் திகதி வழக்கு விசாரணையின்போது டெனீஸ்வரன் தரப்புச் சட்டத்தரணிகள், அன்றைய தினம் குற்றப் பத்திரம் வாசிக்காமல் பிறிதொரு தவணையை மன்றில் கோரவேண்டும்' என்று முதலமைச்சர் தரப்பால் கூறப்பட்டுள்ளது.

'முதலமைச்சரின் சட்டத்தரணி 18ஆம் திகதி மன்றில் தோன்றி, நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளை செயற்படுத்தப்படும் என்று தெரிவிக்க வேண்டும். அதன் பின்னர் குற்றப் பத்திரிகை பிறதொரு தவணையில் மன்றில் வாசிப்பதற்கு கோரிக்கை விடுவதற்குத் தயார்' என்று டெனிஸ்வரன் தரப்புச் சட்டத்தரணிகளால் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கைக்கும் முதலமைச்சர் தரப்பு இணங்கிவருவதற்கான வாய்ப்புக்களே அதிகம் காணப்படுகின்றது என்று தெரியவருகின்றது. (ற-5)

சிங்களக்...

பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகப் பிரதானிகளுடன் அரச தலைவர் மாளிகையில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் தெரிவித்ததாவது:

தமது பகுதியில் சிங்கள மக்கள் குடியேற்றப்படுகின்றனர் என்று தெரிவித்து அதற்கு எதிராக முல்லைத்தீவில் அண்மையில் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது. அதில் அரசியல் பிரமுகர்களும் பங்கேற்றிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள்போல் அங்கு எதுவுமே நடக்கவில்லை. சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்படவில்லை. இனி உருவாக்கப்படப்போவதுமில்லை. மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் ஆக்கிரமிப்பு இடம்பெறுகின்றது என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை நான் முற்றாக நிராகரிக்கின்றேன்.

மகாவலி எல் வலயத்தில் 1980ஆம் ஆண்டுகளில் காமினி திசாநாயக்கவால் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு குடியேற்றப்பட்டவர்களின் குடும்பங்கள் விருத்தி அடைந்தமையால் அவர்களுக்கு வேறு காணிகள் வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால்திட்டமிட்டவகையில்அங்கு சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறவில்லை. தேசிய நல்லிணக்கத்தைக் குழப்பும் வகையில் நாம் குடியேற்றத்தை மேற்கொள்ளவில்லை. அதேவேளை, இலங்கையில்யார்வேண்டுமானாலும் எந்தப் பகுதியிலும் வாழலாம். அதற்குரிய உரிமை அவர்களுக்கு இருக்கின்றது என்றார்.

எரிபொருள் சூத்திரம்

எரிபொருள் விலைச் சூத்திரமானது தொடர்ச்சியாக எரிபொருள் விலையை மேல்நோக்கியே கொண்டு செல்கின்றது. பொதுமக்கள் பெரும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். பேருந்துப் பயணிகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கும் நிலமை ஏற்பட்டுள்ளது. விலைச் சூத்திரத்தை முன்கொண்டு செல்வதா? அல்லது அதைக் கைவிடுவதா என்பது தொடர்பில் தீர்மானிக்கவேண்டியுள்ளது. நவம்பர் மாதம் 8ஆம் திகதிவரவு செலவுத்திட்டம்சமர்ப்பிக்கப்படும்போது அது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும்.

மாகாணத் தேர்தல்

விருப்பு வாக்கு முறையை ஒழித்து புதிய தேர்தல் முறையை நடைமுறைப்படுத்துவதாக நாம் வாக்குறுதி அளித்திருந்தோம். தற்போது சில பிரச்சினைகள் சிக்கல்கள், காணப்படுகின்றபோதிலும் விரைவில் அவற்றுக்குத் தீர்வைக் கண்டு மாகாணசபைத் தேர்தலை நடத்துவோம்.

போர் வரலாறு

நாட்டில் இடம்பெற்ற போர் வரலாறு தொடர்பில் எழுதப்பட வேண்டியுள்ளது. போரின் போது ஏற்பட்ட வெற்றிகள், பின்னடைவுகள் என்பவற்றைக் குறிக்கும் வகையில் நடுநிலையான தரவுகளுடன் வரலாறு எழுதப்படவேண்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் முன்னாள் படைத்தள பதிகளை அழைத்துப் பேசியிருக்கின்றேன். இந்த விடயம் குறித்து ஜயவர்த்தனபுர, கொழும்பு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ற-5,61)

அதிகாரிகளின்...

அவர்கள் பிணையில் விடுவிக்கப்படுகின்றனர். அவர்கள் மீது குற்றச்சாட்டுப் பத்திரங்களோ, வழக்குகளோ இதுவரை தாக்கல் செய்யப்படவில்லை. இந்த நிலை தொடர்வதால் அரசு இராணுவத்தை வேட்டையாடுகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

அரச தலைவர் மாளிகையில் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளையும் பத்திரிகை ஆசிரியர்களையும்அரசதலைவர்நேற்றுச்சந்தித்துக்கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் தெரிவித்ததாவது:

குற்றப் புலனாய்வுத் திணைக்களமானது பல வேறு சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துன்றது. லசந்த படுகொலை, கீத் நொயர் கடத்தப்பட்ட வழக்கு, 11 பேர் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை, எக்னெலியகொட காணாமல் ஆக்கப்பட்டமை உள்பட பல விடயங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நேற்று (நேற்றுமுன்தினம்) சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டினேன். இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடினேன். ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல் தொடர்பிலோ அல்லது வேறு சம்பவங்கள் குறித்தோ குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படவில்லை. இராணுவ அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்படுகின்றனர். கடற்படை அதிகாரி தசநாயக்க விடுவிக்கப்பட்டுள்ளார். அந்தச் சம்பவம் தொடர்பில் இன்னமும் வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை.

கூட்டுப் படைப் பிரதானி தொடர்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் உள்பட 11 பேரைக் கடத்திக் கொலை செய்த சம்பவத்தில் அதிகாரியொருவரை நாட்டை விட்டு வெளியேறுவதற்கு உதவியதாக அவர் மீது குற்றம்சாட்டப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களில் ஒரு அதிகாரியைத் தவிர ஏனையவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. குற்றப் பத்திரம் கூட தாக்கல் செய்யப்படவில்லை. இப்படியான விடயங்கள் தொடர்பில் பொலிஸ் மா அதிபர், குற்றப்புலனாய்வு பிரிவின் அதிகாரிகள், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரை அழைத்து ஆலோசனை வழங்கியுள்ளேன்.

இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பில் கைதானவர்கள் மீது இன்னமும் வழக்கு போடவில்லை. கூட்டுப்படைப் பிரதானியைக் கைது செய்யுமாறு நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரிடம் வாக்குமூலம் பெறப்படாத நிலையில் இந்தச் செயற்பாடு இடம்பெற்றுள்ளது.

கூட்டுப்படைப் பிரதானி தொடர்பில் ஊடகங்களில் செய்தி வெளியானதையடுத்து அவர்தான் கொலை செய்தார் என்று மக்கள் நினைக்கின்றனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரை தப்பிக்க உதவியதாகவே அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதுவரை கைது செய்யப்பட்ட முப்படை அதிகாரிகளில் ஒருவர் மீது கூட வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. அரசு இராணுவத்தை வேட்டையாடுகின்றது என்று எம்மீது குற்றச்சாட்டு எழுகின்றது. மக்கள் பிழையாகக் கருதுகின்றனர். பன்னாட்டு ரீதியில் அபகீர்த்தி ஏற்படுகின்றது. கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கான காரணம் என்ன?

முப்படை அதிகாரிகளைக் கைது செய்து தடுத்து வைத்திருந்த பின் விடுவிப்பது தவறான முன்னுதாரணமாகும். ஆதாரமிருந்தால் அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்திருக்கவேண்டும். 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு கப்பப் பெறப்பட்ட சம்பவம்தொடர்பில்குற்றமிழைத்திருந்தால் தண்டனை வழங்கவேண்டும். அதை விடுத்து வீணான கைதுகளை மேற்கொள்வது தவறான நடவடிக்கையாகும்.

முப்படையினரையும் நாம் மறுசீரமைப்புச் செய்து வருகின்றோம். இராணுவத்தை நாம் பலப்படுத்தியே வருகின்றோம். முன்னர் இருந்த தளபதிகளுக்கிடையில் முரண்பாடுகளும் காணப்படுகின்றன. அந்த முரண்பாடுகள் தற்போது வெளிப்படுவதையும் காணக்கூடியதாகவே உள்ளது - என்றார். (ற-5,31)

இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம் செப்15

சரஸ்வதி ச.ச.நி
கால்பந்தாட்டம்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் சென். றொக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

ஆதிசக்தி வி.க.
கால்பந்தாட்டம்

வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழக பி அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

ஏ.பி. வி.கழக
துடுப்பாட்டம்

ஏபி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்ப்பாண துடுப்பாட்ட லீக் தொடரின் ஆட்டங்கள் சில வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே. ஸ்ரி. ஸ்ரி. விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நண்பகல் 11.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஹாட்லி யைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்டோறி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

லக்கி ஸ்ராரின்
கால்பந்தாட்டம்

வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் நட்சத்திரக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கனகபுரம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

காலை 10 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் உருத்திபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பரந்தன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (மற23)

ஆசிய வலைப்பந்துக் கிண்ணத்தை வென்றுள்ள இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் வீராங்கனைகளுக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. அரச தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஆசியச் சம்பியன்களான வீராங்கனைகளுக்கு அரச தலைவர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். (ம)

ஆவரங்கால் இந்து. கரப்பந்தில் மகுடம்

யாழ்ப்பாணம், செப், 15

சிறிமுருகன் ஜக்கிய விளையாட்டுக் கழகத்தின் 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

சிறிமுருகன் ஜக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது ஆவரங்கால் மத்தி. அடுத்த இரண்டு செற்களையும் 25:21, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிப் பதிலடி கொடுத்தது ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி. நான்காவது செற்றை 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது ஆவரங்கால் மத்தி. முதல் நான்கு செற்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா இரு செற்களைக் கைப்பற்றியிருந்தன. இதனால் இறுதி செற்றில் வெற்றியாளரைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த செற்றை 15:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி.

ஆட்டநாயகனாக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியின் லக்சியும்; தொடராட்ட நாயகனாக ஜனனனும் தெரிவாகினர். (ம-23)

இறுதியில் குமரநகர்

யாழ்ப்பாணம். செப். 15

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விநாயகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சி ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரில் பெண்கள் பிரிவில் கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழக அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 7:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைதடி மத்தி குமரநகர் அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

செவின்ஸ்ரார் காலிறுதியில்

யாழ்ப்பாணம். செப். 15

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விநாயகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் செவின் ஸ்ரார் அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் வடக்கு செவின் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கச்சாய் கலைமகள் விளையாட்டுக் கழக பி அணி மோதியது. 8:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது செவின் ஸ்ரார் அணி. (ம-23)

கிளிநொச்சி பிறீமியர் லீக் இன்று

யாழ்ப்பாணம், செப். 15

கிளிநொச்சி பிறிமியர் லீக் துடுப்பாட்டத் தொடரின் வரிசையில் இந்த ஆண்டுக்கான ஆட்டங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

நடப்பு வருடத் தொடரில் 11 அணிகள் பங்குபற்றுகின்றன. இதன்படி பப்ரிஸ் விளையாட்டுக் கழகம், நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம், கிருஸ்ணபாரதி விளையாட்டுக் கழகம், புதிய பாரதி, விளையாட்டுக் கழகம், மத்திய தீரர்கள் விளையாட்டுக் கழகம், உதயதாரகை விளையாட்டுக் கழகம், தூய தமிழ் விளையாட்டுக் கழகம், யுனைற்ரெட் விளையயாட்டுக் கழகம், இளந்தளிர் விளையாட்டுக் கழகம், இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம், மகாதீபம் விளையாட்டுக் கழகம் ஆகிய 11 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களிலேயே ஆட்டங்கள் யாவும் நடைபெறும். லீக் ஆட்டங்கள் இன்று முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை இடம்பெறும் அரையிறுதி ஆட்டங்கள் அடுத்த மாதம் 6ஆம் திகதியும், இறுதியாட்டம் 7ஆம் திகதியும் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இன்றைய ஆரம்ப நிகழ்வுக்கு முதன்மை விருந்தினரான கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்துகொள்ளவுள்ளார். மதிப்புறு விருந்தினர்களாக காவேரி கலாமன்ற நிறைவேற்றுப் பணிப்பாளர் ரி.எஸ்.யோசுவா, கரவெட்டி தெற்குமேற்கு பிரதேச சபைத் தவிசாளர் தங்கவேலயுதம் ஜங்கரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அருணசலம் வேழமாலிகிதன், கிளிநொச்சி பிரந்திய மலேரியா தடை இயக்க பொறுப்பு மருத்துவர் மா.ஜெயராசா, வடக்கு மாகாண துடுப்பாட்டச்சங்கத்தின் இணைப்பாளர். எஸ்.நிசாந்தன், வடக்கு மாகாண துடுப்பாட்டச் சங்கத்தன் உப தலைவர்களான ஆர்.ரதீபன், வி.மணிவண்ணன், ஜே. அமல்ராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

இங்கிலாந்து உலகக்கிண்ணத் தொடர் வரை டோனி விளையாட வேண்டியது மிகஅவசியம்

சேவாக் வலியுறுத்தல்

"இங்கிலாந்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடர் வரையில் டோனி நிச்சயம் விளையாட வேண்டும்" என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வீரர் சேவாக்.

இங்கிலாந்தில் அண்மையில் நடைபெற்ற தொடர்களில் இந்திய அணி வெளிப்படுத்திய தடுமாற்றத்தைத் தொடர்ந்தே இவ்வாறு குறிப்பிட்டார் சேவாக்.

''இங்கிலாந்தில் இந்திய அணி அண்மையில் வெளிப்படுத்திய தடுமாற்றம் அணிக்குள் டோனியின் அவசியத்தை உணர்த்தியது. அடுத்த உலகக்கிண்ணத் தொடர் வரை இந்திய அணிக்காக டோனி நிச்சயம் விளையாட வேண்டும். டோனியின் அனுபவ முதிர்ச்சி இந்திய அணி இங்கிலாந்தில் வெற்றிகளைக் குவிக்க உதவிசெய்யும்" என்று சேவாக் மேலும் தெரிவித்தார். (ம)

பதவி விலகலுக்கு டோனியின் விளக்கம்

ஒரு வருடத்தின் பின்னர் மௌனம் கலைப்பு

இந்திய அணியின் முன்னாள் தலைவர் டோனி, தலைமைத்துவத்தில் இருந்து விலகியமைக்கான காரணம் என்ன என்று சுமார் ஒரு வருடங்களின் பின்னர் விளக்கமளித்துள்ளார்.

"உலகக் கிண்ணத் தயார்ப்படுத்தலுக்காகவே நான் இந்த முடிவை எடுத்தேன்" என்று அவர் குறிப்பிட்டார்.

'கப்டன் கூல்' என்று ரசிகர்களால் செல்லமாக அழைக்கப்படும் டோனி இந்திய அணிக்கு ஏராளமான வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்தவர்.

2014ஆம் ஆண்டு டெஸ்ட் அரங்கில் இருந்து ஓய்வை அறிவித்த அவர் 2017ஆம் ஆண்டு தலைமைத்துவத்தில் இருந்தும் விலகினார்.

இது பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. டோனியின் மேல் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வழங்கிய அழுவுக்கு அதிகமான அழுத்தம்தான் அவர் பதவி விலகக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் இந்த விடயம் தொடர்பில் கருத்துக்கள் எதையும் வெளியிடாமல் மௌனமாக இருந்து வந்த டோனி முதல் முறையாக மௌனம் கலைத்துள்ளார்.

தனது சொந்த ஊரான ராஞ்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றநிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், "2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரை எதிர்கொள்ள புதிய தலைவருக்குப் போதிய கால அவகாசம் வேண்டும் என்று நினைத்தேன். புதிய தலைவருக்குப் போதிய காலஅவகாசம் வழங்காமல் சக்திவாய்ந்த அணியை உருவாக்குவது சாத்தியமற்றது. நான் தலைவர் பதவியிலிருந்து விலகுவதற்கு சரியான நேரம் இது என்று நினைத்தே விலகினேன்" என்று டோனி மேலும் தெரிவித்தார்.

இங்கிலாந்துக்கு எதிராக அண்மையில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் 4:1 என்ற அடிப்படையில் இந்திய அணி தோல்வியடைந்தமைக்கு, "போதிய பயிற்சி ஆட்டங்களில் விளையாடாதமையே காரணம்" என்றும் டோனி குறிப்பிட்டார். (ம)

பயிற்சி ஆட்டங்கள் அதிகளவு தேவை!

கேள்விக்கணைகளுக்கு ரவிசாஸ்திரியின் பதில்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி மோசமாகத் தோற்றமைக்கு பயிற்சி ஆட்டங்கள் இல்லாதமையே மிகமிக முக்கிய காரணம் என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி.

இந்தத் தோல்வியைத் தொடர்ந்து சாஸ்திரி பதவி விலகவேண்டும் என்று பலமுனை அழுத்தங்கள் குவிந்திருந்த நிலையில், தலைமைப் பயிற்சியாளர் என்ற வகையில் தோல்விக்கான தனது விளக்கத்தை வழங்கியுள்ளார் ரவிசாஸ்திரி.

"டெஸ்ட் தொடருக்கு முன்பாக பயிற்சி ஆட்டங்களில் விளையாட நாங்கள் தயங்க வில்லை. இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்குப் பிறகு முன்னேற்றம் அடைந்துள்ளோம். ஆனால் அதுபோன்ற ஆட்டம் முதல் டெஸ்டில் ஏன் இருக்கவில்லை என்பதை நினைக்க வேண்டும். பலம் குறைந்த அணிகளுக்கு எதிராக இரண்டு அல்லது மூன்று பயிற்சி ஆட்டங்கள் இருந்தாலும் அதுபற்றிக் கவலை இல்லை. ஆனால் அட்டவணை கடினமான சூழ்நிலையில் இருக்கும் போது பயிற்சி ஆட்டங்களின் அவசியத்தை புரிந்து கொள்ளத்தான் வேண்டும். ஆஸ்திரேலியச் சுற்றுப் பயணத்தின்போது டெஸ்ட் தொடருக்கு முன்பாக பயிற்சி ஆட்டங்கள் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் அதற்கு நேரம் இருக்கிறதா என்பதுதான் கேள்வி. அதிக பயிற்சி ஆட்டங்களை நாம் எதிர்பார்க்கிறோம்" என்று ரவிசாஸ்திரி மேலும் தெரிவித்தார்.

ரவிசாஸ்திரியின் இந்தக் கோரிக்கையை அடுத்து ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு முன்னதாக இந்திய அணி குறைந்தது இரண்டு பயிற்சி ஆட்டங்களிலாவது விளையாடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

ஆசிய கிண்ணத்தில் விலகினார் சந்திமல்

ஆறு அணிகள் பங்குபற்றும் ஆசியக் கிண்ணத் தொடர் இன்று ஆரம்பமாகும் நிலையில் இந்தத் தொடரில் இருந்து விலகினார் டினேஸ் சந்திமல். இந்த ஆட்டத்துக்கான 16 வீரர்கள் பங்குபற்றும் அணியில் சந்திமல் இடம்பெற்றிருந்தார். ஆனால் அவரின் கைவிரலில் காயமேற்பட்டதைத் தொடர்ந்து சந்திமல் தொடரில் இருந்து விலகியுள்ளார். பதில் வீரராக டிக்வெல்ல சேர்க்கப்பட்டார்.

தனஞ்சய டி சில்வா ஆசியக் கிண்ணத் தொடரின் முதலிரு ஆட்டங்களில் இருந்து ஏற்கனவே விலகியுள்ள நிலையில் சந்திமலின் விலகல் இலங்கை அணிக்கு பெரும் பின்னடைவு என்று கருதப்படுகிறது. (ம)

ஆசியக் கிண்ணம் இன்று ஆரம்பம்

ஆசியக் கிண்ணத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. இலங்கை, இந்தியா உட்பட ஆறு அணிகள் இந்தத் தொடரில் பங்குபற்றுகின்றன.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இந்தத் தொடர் நடைபெறவுள்ளது. இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஹொங்கொங் ஆகிய அணிகளே இந்தத் தொடரில் விளையாடுகின்றன. (ம)

ஆப்கான் அணியில் 4 சுழல் வீரர்கள்

ஆசியக் கிண்ணத் தொருக்கான ஆப்கானிஸ்தான் அணியில் நான்கு சுழல்பந்து வீச்சாளர்கள் இடம்பிடித்துள்ளனர். ஐக்கிய அரபு இராச்சிய ஆடுகளங்கள் பொதுவாக சுழலுக்கு ஒத்துழைக்கும் என்பதாலேயே ஆப்கானிஸ்தான் அணிக்குள் அதிகளவான சுழல்பந்து வீச்சாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதன்படி ரசிட்கான், நபி, அகமடி, ஜெனட் ஆகிய நால்வருமே அவ்வாறு களமிறங்கவுள்ளனர்.

இந்தத் தொடரில் ஆப்கானிஸ்தான் அணியின் முக்கிய துருப்புச்சீட்டாக ரசிட்கான் இருப்பார் என்று கருதப்படுகிறது. (ம)

Benz கார் விற்பனைக்கு
1997 Mercedes Benz, E200-Sedan
ஸ்ரீக நல்ல நிலையில் விற்பனைக்குண்டு
Tel: 077 322 5044 (CS/19767) (10)

FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 18.09.18 செவ். 3 pm.
181, பிரதான வீதி, நெல்லியடி 0762 669 614
ஆரம்பம் 17.09.18 மாலை 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

சிவப்பு மணல் விற்பனைக்கு
பள்ள நிலங்களை நிரப்புவதற்கும் கட்டட அத்திபாரங்களை நிரப்புவதற்குமுரிய மிகச் சிறந்த சிவப்பு மணல் எம்மிடம் உண்டு. தேவையுடையோர் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு - 077 649 1027, 077 940 0963

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்ச மொழியை பிரெஞ்ச முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

பணியாளர் தேவை
கிளிநொச்சியில் இயங்கும் பிரபல தனியார் வியாபார நிறுவனத்தில் பணிபுரிவதற்கு விற்பனைப் பிரதிநிதி, காசாளர், கணினி இயக்குநர், கணக்காளர், களஞ்சிய காப்பாளர் போன்ற அனுபவமிக்கவர்கள் தேவை. தகுதியுடையோர் கீழ்வரும் முகவரிக்கு 27.09.2018 இற்கு முன்னர் கிடைக்க கூடிய வகையில் சுயவிவரக் கோவையினை தகைமைச் சான்றுகளுடன் அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி
விளம்பர இல:1011
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தென்னிந்திய யாத்திரை
தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரி
ஊடான யாத்திரை
ஆரம்பம் - 01.10.2018, நாள்கள் 12, யாத்திரீகர் 10
தரிசிக்குமிடங்கள் : திருச்சி உச்சிப்பிள்ளையார், சமயபுரம், ஸ்ரீரெங்கம், பஞ்ச பூதத்தலங்கள், சிதம்பரம், திருவெண்ணாமலை, கானகஸ்திரி, திருவானை காவல், ஏகாம்பரேஸ்வரர் 9 நவக்கிரக ஆலயங்கள், திருநள்ளாறு சனிபகவான், ராகு பகவான், கேதுபகவான், சூரியபகவான், சந்திரபகவான், புதன்பகவான், செவ்வாய்பகவான், வியாழபகவான், சுக்கிரபகவான், திருப்பதி, அலமேலு மங்கா 6 படை முருகன், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருப்பரம்குன்றம், திருத்தணி, பழமுதிர் சோலை, இராமேஸ்வரம், மதுரைமீனாட்சி, பஞ்சவடி ஆஞ்சநேயர், மணக்குழவினாயகர் உட்பட 45 க்கு குறையாத ஆலயங்களை தரிசிப்பதுடன் பாண்டிச்சேரி பீச், மரீனாபீச், அப்துல்கலாம் மணிமண்டபம், அண்ணா, M.G.R, ஜெயலலிதா, கருணாநிதி ஆகியோரின் நினைவிடங்களையும் காணலாம். பெற்றுக்கொள்ளும் ரூபா விற்கு எமது சேவை இரு வழிவிமான ரிக்கற், மூன்று வேளை உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன்கொமட், குளியலறை இணைந்த அறைகள், யாத்திரை முழுவதும் A/C வாகன வசதி, யாழ். கொழும்பு யாழ். வாகனவசதி செய்து தரப்படும். விவரங்கள் கேட்டு அறிந்து பதிவுசெய்யவும்.
கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் மகன் /ராஜன்
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு -11
077 7680 102, 077 736 2154

லசித் மலிங்க மீது பெரும் எதிர்பார்ப்பு

ஆசியக் கிண்ணத் தொடர் இன்று ஆரம்பமாகும் நிலையில் இந்தத் தொடருக்கான இலங்கை அணியில் இடம்பிடித்துள்ள மலிங்க மீது மிகப்பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

பன்னாட்டு அரங்கில் இருந்து தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டுவந்த மலிங்க ஆசியக் கிண்ண ரி20 தொடருக்கான இலங்கை அணியில் சேர்க்கப்பட்டார். நீண்ட இடைவேளைக்குப் பின்னர் வாய்ப்பளிக்கப்பட்டதால் இந்தத் தொடரில் மலிங்க தன்னை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். இன்று நடைபெறும் பங்களாதேஷுக்கு எதிரான ஆட்டத்தில் மலிங்க விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் இடம்பிடிப்பார் என்று கருதப்படுகிறது. ஒருவேளை ஆசியக் கிண்ணத் தொடரில் மலிங்க சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தத் தவறினால் அடுத்த சில மாதங்களுக்கு அவர் அணிக்குள் புறக்கணிக்கப்பட வாய்ப்புண்டு. ஆக, வாழ்வா சாவா என்ற அடிப்படையிலேயே இந்தத் தொடரை எதிர்கொள்கிறார் மலிங்க. (ம)

அனைத்து வீரர்களையும் அனுசரித்துச் செல்லவும்
கோக்லிக்கு கங்குலி அறிவுரை

இந்திய அணி இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழந்தமைக்கு கோக்லியின் 'மோசமான' தலைமைத்துவம்தான் காரணம் என்று விமர்சிக்கப்படுகிறது. இதையடுத்தே தலைமைத்துவம் தொடர்பில் கோக்லிக்கு அறிவுரை வழங்கியுள்ளார் கங்குலி.

"ஒவ்வொரு வீரர்களும் சிறந்தவர்கள். அணிக்குள் இருக்கும் வெற்றிடத்தை நிரப்ப ஒரு வீரர் சரிவரமாட்டார் என்று முடிவெடுப்பதையும்விட, அந்த வீரரைக்கொண்டு அணிக்குள் என்ன மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று சிந்திப்பது தான் சிறந்த தலைவருக்கு அழகு. தலைவர் என்பவர் அணியைத் தக்கவைப்பவர் அல்ல. மாறாக உருவாக்குபவர். எனவே கோக்லி அனைத்து வீரர்களையும் அனுசரித்துச் செல்லவேண்டும். வீரர்களின் தோளில் கைபோட்டு நட்புறவுடன் பழக வேண்டும்" என்று கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)

அணியில் உள்ள அனைத்துத் தரப்பினரையும் அனுசரித்துச் செல்ல கோக்லி தயாராக இருக்க வேண்டும். வீரர்களின் தோளில் கைபோட்டு நட்புறவுடன் கோக்லி பழகவேண்டும் என்று கங்குலி தெரிவித்தார்.

மரண அறிவித்தல்
கந்தன் பொன்னையா அன்ரன்

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், மண்டைதீவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் பொன்னையா அன்ரன் நேற்று (14.09.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மனுவல் - திரேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செசிலியம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான அலோசியஸ், அசில்லாஸ் மற்றும் அல்போண்சி அம்மா (தங்கம்), அல்பிறட் (வசந்தன்), அக்கினேஸ் அம்மா (றூபா), அலம்பின்றொபேட் (நிக்சன்), அன்ரனீஸ் அம்மா (கில்டா சுவிஸ்), அனாசிஸ் (ராசா முத்துமாரி நகைமாடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சூசைநாயகம் (ராசு), இருதயதாசன், கண்ணதாசன், சறோஜினிதேவி, ஈஸ்வரி, சாளினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 63, மத்தியூஸ் வீதியில் அமைந்திருக்கும் அவரது இல்லத்தில் இருந்து நாளை (16.09.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு மண்டைதீவு சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

63, மத்தியூஸ் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
077 618 5354 (CS 18423/15/18)

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.